கல்கி



KALKI ஆகஸ்ட் 15, 1954 4 அணா

கல்கி
பொருளடக்கம்

மலர் 14
இதழ் 3

1954 ஆகஸ்டு 15

ஜய ௵
ஆடி 31

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 14 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 3

உலகம் உள்ளளவும் கொண்டாடுவோம்!

பாரத புண்ணிய பூமியில் அன்னிய ஆட்சியின் சின்னமாக விளங்கிய பிரிட்டிஷ் கொடி தாழ்ந்து, சுதந்திரக் கொடி உயர்ந்து ஏழு ஆண்டுகள் முடிந்து விட்டன.

நிகழும் 1954-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி சுதந்திர இந்தியாவின் எட்டாவது ஆண்டு ஆரம்பமாகின்றது.

எந்த நாட்டிலும், எந்த நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் சுதந்திரத் திருநாளைக் காட்டிலும் புனிதமாக, குதூகலமாக, மகிழ்ச்சியுடன் கொண்டாடக் கூடிய தினம் வேறு எதுவும் இருக்க முடியாது.

அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து, அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்காக உலகத்தில் உள்ள பல நாடுகளும் பட்ட பாடுகளை, புரிந்த தியாகங்களை, பலி கொடுத்த உயிர்களை எண்ணத்தான் தொலையுமா? எழுதத்தான் முடியுமா?

சுதந்திரம் பெறுவதற்காகவும் பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கவும் தொன்று தொட்டு எத்தனையோ தியாக சீலர்கள் வீரப் போர் நடத்தி, உலக சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றிருக்கிறார்கள்.

அதனாலேயே, உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் சுதந்திர தினத்தைப் பெருமையுடனும் கோலாகலமாகவும் கொண்டாடுகிறார்கள்.

இன்று உலக வல்லரசுகளுள் தலை சிறந்து விளங்கும் அமெரிக்காவும் வருஷந்தோறும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது.

சுதந்திர அமெரிக்காவின் சிற்பிகளில் ஒருவரும் இரண்டாவது அமெரிக்க ஜனாதிபதியுமான ஜான் ஆடம்ஸ், சுதந்திர தின விழாவைக் குறித்து நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன் கூறிய வார்த்தைகளைக் கேளுங்கள்:

"அமெரிக்காவின் சுதந்திர தினத்தை வருங்கால சந்ததிகள் என்றென்றும் வெகு குதூகலமாகக் கொண்டாடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நம் நாட்டு மக்கள் விடுதலை பெற்ற இந்தத் திருநாளில் நாம் இறைவனைப் பக்தியுடன் பிரார்த்திக்க வேண்டும். மேற்படி விழாவை நாம் வெகு ஆடம்பரத்துடன் கொண்டாட வேண்டும். அன்று அமெரிக்காவின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரை கண்காட்சிகளும், விளையாட்டுகளும், உல்லாச வைபவங்களும், வாண வேடிக்கைகளும் நடைபெற வேண்டும். ஆண், பெண், குழந்தைகள் யாவரும் ஆனந்தமாக இருக்க வேண்டும். எங்கும் மணிகள் ஒலிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் தீபங்கள் ஒளி வீச வேண்டும்."

அமெரிக்காவின் சுதந்திரத்தை உருவாக்கிய காரண புருஷர்களில் ஒருவரான ஜான் ஆடம்ஸ் அக்காலத்தில் கூறிய வார்த்தைகள் சுதந்திரம் பெற்ற எந்த நாட்டுக்கும் எக்காலத்தும் பொருந்தும் அல்லவா?

* * * *

பாரத நாட்டின் சுதந்திரத்துக்காக அல்லும் பகலும் பாடுபட்டு, தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்த பல அருமைத் தலைவர்கள் இந்தியா சுதந்திரம் பெற்றதைப் பார்க்கவில்லை.

'சுயராஜ்யம்' 'சுயராஜ்யம்' என்ற திரு மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே பாலகங்காதர திலகர் பூவுலகிலிருந்து மறைந்தார்.

"மகாத்மாஜி, நான் போய் வருகிறேன். சுதந்திர இந்தியாவைப் பார்க்க நான் இருக்க மாட்டேன். ஆனால், நீங்கள் அதி சீக்கிரத்தில் சுயராஜ்யம் பெற்று விடுவீர்கள்" என்ற கடைசி வார்த்தைகளுடன் மோதிலால் நேரு நம்மை விட்டுப் பிரிந்தார்.

தேனீ கொட்டுகிறது!



திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்வாதிகளின் சாத்விகப் போராட்டம் திருவாங்கூர்-கொச்சி சர்க்காருக்குப் பெருந் தொல்லையாக இருந்து வருகிறது.

"அதோ தெரிகிறதே, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை! அதில் பாரதத் தாயின் மணிக் கொடி பறக்கும் காலம் தூரத்தில் இல்லை" என்று சொல்லிய வண்ணம் தீரர் சத்தியமூர்த்தி விண்ணுலகம் எய்தினார்.

'சலோ டில்லி' என்றும், 'டில்லி செங்கோட்டையில் தாயின்மணிக் கொடியை நாட்டுவேன்' என்றும் சொல்லிக் கொண்டே நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அமர வாழ்வு பெற்றார்.

ஆனால், அடிமை இந்தியாவில் பிறந்த நாம் நம் தாய்நாடு சுதந்திரம் பெறுவதை நம் கண் முன்னால் கண்டோம்.

செங்கோட்டையிலும், சென்னைக் கோட்டையிலும், மற்றும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் கோட்டைகளாக இருந்த எல்லா இடங்களிலும் தாயின் திருக்கொடி வானளாவ உயர்ந்து ஒளி வீசிப் பறப்பதைக் கண்டோம்; காண்கிறோம்; என்றென்றும் காண்போம்.

** ** **

சுதந்திரம் பெற்றதுடன் இந்தியாவின், இந்திய மக்களின் இன்னல்கள் எல்லாம் தீர்ந்து விடவில்லை என்பது உண்மையே.

ஆனால் இன்னல் எல்லாம் தீருவதற்கு மலை போல் பெரும் தடையாக இருந்த அடிமை வாழ்வு இப்போது ஒழிந்து விட்டது.

கண்ணினுமினிய சுதந்திரம் இன்றேல் வேறு என்ன இருந்தும் என்ன பலன்!

நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்!

....

சுதந்திர தேவியின் அருளில்லாதாரைப் பற்றி மகா கவி பாரதியார் அவ்வாறு மனம் உருகிப் பாடியுள்ளார்.

எனவே, நிகரில்லாத செல்வம், கல்வி, கேள்வி, அருமை பெருமைகள் எல்லாம் சுதந்திரத்துக்கு ஈடு இணையாகாது அல்லவா!

உலகில் எந்த நாட்டு மக்களும் சுதந்திரம் பெற்ற பல வருஷங்களுக்குப் பிறகே சுபிட்ச வாழ்வு பெற முடிந்தது.

அமெரிக்கா சுதந்திரம் பெற்றுச் சரியாக நூற்று எழுபத்தெட்டு ஆண்டுகள் ஆகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால், இந்தியா சுதந்திரம் பெற்று ஏழு ஆண்டுகள்தான் ஆகின்றன.

இந்த ஏழு ஆண்டுகளுக்குள் இந்தியா அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் எவ்

வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது; உலக வல்லரசுகளுக்குச் சமமான கௌரவத்தை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறது; உலக நாடுகளின் நன் மதிப்பைப் பெற்று, யாவரும் அதிசயிக்கத் தக்க வண்ணம் காரியங்களைச் செய்து வருகிறது.

ஏழு ஆண்டுகளில் இவ்வளவு தூரம் சாதித்துள்ள இந்தியக் குடியரசு சர்க்கார், இன்னும் சில ஆண்டுகளில் இந்திய மக்களின் வறுமை நீரவும் வாழ்க்கை அந்தஸ்து உயரவும் வழி தேடுவார்கள் என நிச்சயமாக நம்பலாம். இன்று இந்திய மக்களின் கஷ்டங்கள் பூரணமாகத் தீரவில்லை என்பதற்காக, பெறுதற்கரிய சுதந்திரத்தின் பெருமையை நாம் புறக்கணிக்க முடியுமா!

எனவே, பாரத மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் சுபிட்சத்துக்கும் அஸ்திவாரமான சுதந்திரத் திருநாளை என்றென்றும் வாழையடி வாழையாகக் குதூகலத்துடன் கொண்டாடி வருவோமாக! வாழ்க சுதந்திர பாரதம்!

தேசத் தந்தையின் திக்விஜயம்

இந்தத் தலைமுறையில் வாழும் நாம் யாவரும் இரட்டிப்பு பாக்கியசாலிகள் என்பதில் சந்தேகம் இல்லை. பாரத நாடு சுதந்திரம் பெற்று, சீருடனும் சிறப்புடனும் விளங்குவதை நேரில் கண்குளிரக் கண்டோம். அந்தச் சுதந்திரத்தை உருவாக்கிய தனிப் பெரும் சிற்பி மகாத்மா காந்தியை நேரில் தரிசித்து, காந்திஜி சகாப்தத்தில் வாழும் அரும் பெரும் வாய்ப்பும் நமக்குக் கிடைத்தது.

மானிட வர்க்கம் போற்றி வணங்கும் ஏருஞ்சீவிகளின் சொர்ண பீடத்தில் இடம் பெற்ற அந்த மகானின் திருமேனியை மறுபடியும் கண்டு மகிழும் அபூர்வ சந்தர்ப்பம் நமக்கு மாத்திரமல்ல, வரும் கால சந்ததிகளுக்கும் கிடைத்திருக்கிறது.

சென்னையில் காட்டப்பட்டு வரும் "இந்தியாவின் குரல்" என்ற சினிமாப் படத்தை ஏராளமான ஜனங்கள் பார்த்து மகிழ்கிறார்கள்.

காந்தி மகான் லண்டன் மகாநாட்டுக்குச் சென்ற போது பாரதநாடு அன்னியர் ஆட்சியில் இருந்தது. அப்படி யிருந்தும் காந்திஜிக்கு ஐரோப்பிய நாடுகளில் அளிக்கப்பட்ட அமோகமான வரவேற்பு வைபவங்கள் நம்மை ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்கின்றன. அக்காலத்தில் காந்திஜியைப் பிரிட்டிஷ் சர்க்கார்தான் தங்களுடைய விரோதியாகக் கருதினார்களேயன்றி ஆங்கிலப் பொது மக்கள் அவர் மீது பேரபிமானம் கொண்டிருந்தார்கள் என்ற அதிசய உண்மையை மேற்படி படம் தத்ரூபமாக நமக்குக் காட்டுகிறது.

லண்டன், மார்செயில்ஸ், ரோம் முதலிய ஐரோப்பிய மாநகர்களில் காந்திஜிக்கு ஜனங்கள் அளித்த உற்சாகமான வரவேற்பு வைபவங்கள் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மனப் பூரிப்பும் உண்டாகும்படி செய்கின்றன.

இதையெல்லாம் காட்டிலும் மாஞ்செஸ்டர், லங்காஷயர் பகுதிகளில் வசித்த மக்கள் காந்தி மகானுக்கு அளித்த வரவேற்பு உபசாரம் எக்காலத்திலும் மறக்க முடியாததாகும்.

அப்போது மாஞ்செஸ்டர், லங்காஷயர் மில் துணிகளின் பகிஷ்காரம் இந்தியாவில் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. அன்னிய துணிகள் தகனம் செய்யப்பட்டன. அதன் காரணமாகப் பிரிட்டிஷ் மில்கள் சில வற்றை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அப்படி யிருந்தும் காந்தி மகானை மாஞ்செஸ்டர் லங்காஷயர் வாசிகள் மரியாதையுடனும் உற்சாகத்துடனும் வரவேற்றார்கள் எனில், அது அதிசயிக்கத் தக்க விஷயம் அல்லவா!

"இந்தியாவின் பகிஷ்கார இயக்கத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வளவு அன்புடன் தங்களை வரவேற்கிறார்களே! தாங்களும் அவர்கள் விஷயத்தில் அன்பு கூர்ந்து கருணை காட்டிப் பகிஷ்கார இயக்கத்தை நிறுத்தக் கூடாதா!"

இவ்வாறு ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் கேட்டதற்கு, காந்திஜி அளித்த பதில் எவரையும் மெய்சிலிர்க்கச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

"மாஞ்செஸ்டர், லங்காஷயர் வாசிகள் சுபிட்சமா யிருக்கட்டும். ஆனால் அவர்களுடைய சுபிட்சம் ஏழை இந்தியர்களின் அழிவின் பேரில் நிர்மாணிக்கப்படுவதை நான் விரும்பவில்லை" என்று காந்திஜி பளிச்சென்று பதில் அளித்து மேற்படி நிருபரையும் மற்றவர்களையும் பிரமிக்கச் செய்த அற்புதமான சம்பவத்தை "இந்தியாவின் குரல்" படத்தில் காண்கிறோம்.

ஐரோப்பிய நாடுகளில் மகாத்மா காந்தி பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் அவரது மனோபலமும் ஆத்ம சக்தியும் திடமான கொள்கையும் பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

ஆடம்பரமான உடைகளுக்கே அதிக மதிப்புக் கொடுக்கும் ஐரோப்பாவுக்குக் காந்தி மகான் பிரயாணமானபோது "என்ன உடை அணிந்து செல்வீர்கள்!" என்று அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்டார்.

"ஏன்! வழக்கமான உடைதான் அணிவேன்" என்று பதிலளித்தார் காந்தி மகாத்மா.

ஆகஸ்டு முதல் தேதி சென்னை வெல்லிங்டன் தியேட்டரில் "இந்தியாவின் குரல்" என்னும் படம் காட்டப்பட்ட பொழுது ஸ்ரீ தேவதாஸ் காந்தி தம்பதிகள் விஜயம் செய்திருந்தனர்.



“அரசர் தங்களைக் காண விரும்பினால்!” என்று கேட்டதற்கு, “அதற்காக நான் வேறு உடை அணிந்தால் உண்மை தவறியவனாவேன்” என்றார் காந்திஜி.

இவ்வாறு பதில் கூறி அதைக் காரியத்திலும் சாதித்துக் காட்டும் சக்தி வாய்ந்த மகா புருஷர் காந்திஜியைத் தவிர இந்த உலகில் வேறு யாரும் இருந்ததில்லை என்று துணிந்து கூறலாம்.

லண்டன் மகாநாட்டிலிருந்து மகாத்மா காந்தி வெறும் கையுடன் திரும்பி வந்தார். அப்படியிருந்தும், அந்த மகானைப் பம்பாய் மக்கள் லட்சக்கணக்கில் திரண்டு வந்து வெற்றி மாலையுடன் திரும்பி வந்த வீரரை வரவேற்பது போல் குதூகலத்துடன் வரவேற்றார்கள்.

இத்தகைய அற்புதமான பல காட்சிகளை “இந்தியாவின் குரல்” என்னும் படத்தில் காணும் பாக்கியம் சென்னைவாசிகளுக்குக் கிட்டி இருக்கிறது. இன்னும் சில முறை இப்படம் சென்னை நகரில் காட்டப்படும் என்று அறிகிறோம். சென்னைவாசிகளுக்குக் கிடைத்திருக்கும் இந்த அருமையான வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

தலையாட்டுவது தேச விசுவாசமா?

தேச விசுவாசம் என்பது என்ன! விருப்பு வெறுப்பின்றித் தேச நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தம் கடமைகளைச் செய்வதா! அல்லது சர்க்காரும் மந்திரிகளும் என்ன செய்தாலும் தலையாட்டிக் கொண்டு, அவர்களுக்குத் தாசர்களாக விளங்குவதா!

இந்தக் கேள்விகளுக்கு எல்லைக் காந்தி அப்துல் கபார்கான் அருமையாக விடை அளித்துள்ளார்.

“பேச்சு ஒன்று செயல் ஒன்று என்று நாங்கள் நடப்பதில்லை. கடந்த முப்பது வருஷ காலத்தில் எங்கள் அரசியல் வாழ்க்கை ஒன்றே அதற்கு அத்தாட்சி. பாகிஸ்தானிடம் விசுவாசம் இல்லை என்று எங்கள் மீது பாகிஸ்தான் சர்க்கார் அபாண்டமான பழி சுமத்துகின்றனர். எதைக் கொண்டு விசுவாசத்தை அவர்கள் மதிப்பிடுகின்றனர்! பாகிஸ்தானின் உண்மையான நலனைக் கவனியாமல் மந்திரிகள் கூறுவதற்கெல்லாம் தலையாட்டுவதுதான் விசுவாசம் என்றால், அதற்கு நான் தயாராக இல்லை. அவ்விதம் மனச்சாட்சிக்கு முரணாக நடப்பதைக் காட்டிலும் சிறை செல்வதையே நான் விரும்புகிறேன்” என்று கபார்கான் கூறியுள்ளார்.

** ** **

ஆறு மாதங்களுக்கு முன் எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார் அல்லவா! அப்போது அவரைப் பாகிஸ்தான் பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்தன. அவர் பாகிஸ்தானிடம் உண்மையான பக்தியும் விசுவாசமும் உள்ள சிறந்த தலைவர் என்று பாராட்டின. ஆனால் இப்போது அதே பத்திரிகைகள் அவரை ஆத்திரத்துடன் கண்டிக்கத் தொடங்கி யிருக்கின்றன. அவருக்கு எதிராகத் துவேஷப் பிரசாரம் செய்ய முற்பட்டிருக்கின்றன. இந்த விபரீதத்தை கான் அப்துல் கபார் கான் எடுத்துக் கூறியுள்ளார்.

“நான் சென்ற ஐந்து மாத காலத்துக்குள் வேறு மனிதனாகி விடவில்லை. சிறையிலிருந்து வெளி வந்தபோது என் கொள்கை, நோக்கம் எல்லாம் எப்படி இருந்தனவோ, அதுபோலவே இப்போதும் இருக்கின்றன. ஆனால் சர்க்காருக்குத்தான் என் விஷயத்தில் மறுபடியும் மனமாற்றம் ஏற்பட்டு விட்டது” என்று குறிப்பிட்டுள்ளார்.

கான் அப்துல் கபார்கான் ஆறு வருஷ காலம் சிறையிலிருந்தும் கூட, தம்மை விடுதலை செய்ய வேண்டுமென்று பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கவில்லை. அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்பட்ட கிளர்ச்சியைக் கண்டு அஞ்சிய பாகிஸ்தான் சர்க்கார் அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்தனர்.

பாகிஸ்தான் போக்குவரத்து மந்திரி சர்தார் பகதூர் கான், பாகிஸ்தான் சர்க்கார் சார்பில் அப்போது சிறைக்கு நேரில் சென்று எல்லைக் காந்தியைக் கண்டு பேசினார். அவரது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்களித்தார். ஆனால் தமக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிகளைப் பாகிஸ்தான் சர்க்கார் இன்னும் நிறைவேற்றவில்லை என்று கான் அப்துல் கபார்கான் கூறியிருப்பதைச் சகலரும் கவனிக்க வேண்டும். கான் அப்துல் கபார்கான் மீதுள்ள தடைகளைப் பாகிஸ்தான் சர்க்கார் இன்னும் அகற்றவில்லை. அப்படியிருக்க அவருக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்கள் எங்கு நிறைவேற்றப் போகிறார்கள்!

கான் அப்துல் கபார்கான் பிறந்த வடமேற்கு எல்லை மாகாணத்துக்கு அவர் செல்லக் கூடாது என்று பாகிஸ்தான் சர்க்கார் தடை விதித்திருக்கிறார்கள். அவரது செஞ்சட்டைக் கட்சியினர் மீது விதிக்கப்பட்டுள்ள தடையும் இன்னும் நீங்கவில்லை. கான் அப்துல் கபார்கான் கராச்சியையும் பஞ்சாபையும் தவிர வேறு எங்கும் செல்லக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் தலை சிறந்த தலைவரான அவரது ஆதரவையும் ஒத்துழைப்பையும் பாகிஸ்தான் சர்க்கார் எவ்வாறு பெற முடியும் என்பதுதான் தெரியவில்லை.

கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இராணுவ சர்க்காரால் சட்டசபையில் உள்ள ஜனப் பிரதிநிதிகள், மந்திரிகள் உள்பட ஆயிரம் பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட் டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு அரசியல் நீதிக்கும் ஜனநாயக தர்மத்துக்கும் முரணாக நடந்து கொள்ளும் பாகிஸ்தான் சர்க்கார், சத்திய சீலரும் சாத்வீக வீரருமான கான் அப்துல் கபார்கானைத் தேச விசுவாசமற்ற துரோகி என்று கூறுவது அக்கிரமமான பழிச் சொல் அல்லவா!

இதை யெல்லாம் கவனிக்கும்போது, பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி நடைபெறவில்லை, தலையாட்டிப் பொம்மை ஆட்சி நடைபெறுகிறதோ என்று எண்ண வேண்டி யிருக்கிறது. அதாவது பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்களின் இஷ்டப்படி ஆடும் பொம்மைகளைத் தவிர, வேறு எந்தத் தலைவருக்கும் பாகிஸ்தானில் இடம் இல்லையோ என்று நினைக்க வேண்டி யிருக்கிறது.


ஆசிரியர்
கல்கி
எழுதும்
அமர தாரா
சமூகத் தொடர்கதை
செப்டம்பர்
5உ
இதழில்
ஆரம்பமாகிறது
மணியம்

'கஸ்டம்ஸ்' சாவடியில் படும் கஷ்டம்

மலாய் நாட்டிலிருந்து தாய் நாட்டுக்கு வரும் இந்திய சகோதர சகோதரிகள் சென்னை, நாகப்பட்டினம் முதலிய நகரங்களில் உள்ள சுங்கச் சாவடிகளில் (Customs Depot) படும் பாடுகளைப் பற்றிய கடிதங்கள் சிங்கப்பூரில் உள்ள "ஸ்டிரெயிட்ஸ் டைம்ஸ்" என்ற பிரபல பத்திரிகையில் வெளியாகியுள்ளன. மலாய் நாட்டிலிருந்து இங்கு வந்து மறுபடியும் திரும்பிச் சென்ற அன்பர்கள் அக்கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். சென்ற ஜூலை மாதம் பல்வேறு தேதிகளிலும் வெளியான மேற்படி கடிதங்களைக் கத்தரித்து ஓர் அன்பர் நமக்கு அனுப்பியுள்ளார்.

உட்காருவதற்கு இடமின்றியும், உணவு, குடிக்கத் தண்ணீர் வசதி எதுவுமின்றியும் சுங்க அதிகாரிகளின் சோதனைக்காக ஒன்பது மணி நேரம் தவம் கிடக்க நேர்ந்ததாக ஒரு கடிதம் கூறுகிறது.

மிகுந்த அசௌகரியத்தைப் பொறுத்துக் கொண்டு பல மணி நேரம் காத்திருக்கும் பிரயாணிகளிடம் அதிகாரிகள் மரியாதையின்றி நடந்து கொள்வதாக மற்றொருவர் தமது கடிதத்தில் வருந்தியுள்ளார்.

சுங்க அதிகாரிகளுக்கு இரகசியமாக லஞ்சம் கொடுப்போரின் சாமான்களை அதிகாரிகள் சிறிதும் தாமதமின்றி உடனே சோதனை செய்து, அவர்களை அனுப்பி விடுகிறார்கள் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறிப்பாக நாகப்பட்டினத்தில் டெக் பிரயாணிகளின் கஷ்டங்களை விவரிக்க முடியாது; அவர்களை அதிகாரிகள் மனிதர்களாகவே கருதுவதில்லை; கரையில் இறங்கு முன் பிரயாணிகள் பல மணிநேரம் கடும் வெய்யிலில் படகுகளிலேயே காத்திருக்கவேண்டியிருக்கிறது. சிற்சில சமயங்களில் சுங்கச் சோதனைக்காகப் பிரயாணிகள் இரவு சுங்கச் சாவடிகளிலேயே தங்கும்படியான நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. டெக் பிரயாணிகளில் பெரும்பாலோர் ஏழைகளானதால், அவர்கள் கஷ்டங்களைத் தீர்க்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று வேறொரு கடிதத்தில் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

"இம்மாதிரியான கடிதங்கள் யாவும் தென்னிந்திய சகோதரர்களாலேயே எழுதப்பட்டு வருகின்றன. அவர்கள் இந்தியாவில் உள்ள சுங்கச் சாவடிகளில் படும் கஷ்டங்களே, அவர்களை அவ்விதம் எழுதுமாறு தூண்டி விடுகின்றன. இந்த மலாய் நாட்டில் வசிக்கும் பல சமூக மக்களிடையே இம்மாதிரியான செய்திகள், நம்முடைய அரசாங்கத்தைப் பற்றி எவ்விதமான தவறான எண்ணங்களை உருவாக்கும் என்பதைத் தாங்கள் அறியலாம்."

இவ்விதம் நமக்கு எழுதியுள்ள அன்பர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். மலாய் நாட்டிலிருந்து இங்கு வந்த சிலர் சுங்கக் காரியாலயத்தில் தாங்கள் பட்ட பாட்டைப் பற்றிச் சென்னை சர்க்காரிடம் நேரில் சென்று முறையிட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

வெளி நாடுகளிலிருந்து தாய்நாட்டுக்கு வரும் சகோதரர்கள் இவ்விதம் சிரக் கஷ்டத்துக்கும் மனவேதனைக்கும் உள்ளாகும்படி சுங்க அதிகாரிகள் நடந்து கொள்வது சென்னை ராஜ்யத்தின் நற்பெயருக்கே இழுக்கு ஆகும். இத்தகைய வருந்தத்தக்க நிலைமைக்குப் பரிகாரம் ஏற்படச் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டு வித அபிவிருத்திகள்!

நிதி மந்திரி தேசமுக் அவர்கள் தம் வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி துர்க்காபாய் அவர்களுடன் தேசமெங்கும் ஊர்வலம் சென்று வருகிறார். அவருடைய பிரயாணத்தின்போது ஆங்காங்கு பொது நிகழ்ச்சிகளில் பேசும்போது "தேசத்தின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைந்து வருகிறது" என்றும், "ஐந்தாண்டுத் திட்டம் முன்னேறி வருகிறது" என்றும் சொல்லி மக்களை உற்சாகப் படுத்தி வருகிறார். பல நிர்மாணத் திட்டங்களுக்குப் "பத்துக் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்!" "இருபது கோடி ரூபாய் செலவிடப்போகிறோம்!" என்றெல்லாம் சொல்லிக் கொண்டு போகிறார். "இலங்கையிலிருந்து வெளியேற்றப் படுகிறவர்கள் இங்கு வந்தால் சென்னை இராஜ்யத்திலும் சமாளித்துக் கொள்ள முடியும்!" என்று ஸ்ரீ தேசமுக் நமக்குத் தைரியம் கூறி யிருப்பதையும் தினப் பத்திரிகைகளில் படித்தோம்.

இவ்வாறு, நிதி மந்திரி ஸ்ரீ தேசமுக் அவர்கள் தேசத்தின் பொதுவான அபிவிருத்தியைப் பற்றிப் பேசிக் கொண்டு போகையில், வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம் [Employment Exchange] வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மற்றொரு வகை அபிவிருத்தியைச் சுட்டிக் காட்டுகின்றன.

1954-ம் வருஷம் ஜூன் மாதத்தில் மொத்தம் 1,43,354 பேர் உத்தியோகம் வேண்டும் என்று மேற்படி ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டார்களாம். ஜூன் மாதக் கடைசியில் 5,48,394 நபர்களின் பெயர்கள் மேற்படி ஸ்தாபனத்தின் ஜாபிதாக்களில் பதிவாகியிருந்தன!

[ஜூலை 26உ விட்டுப் புது டில்லியிலிருந்து வந்த செய்தியை ஜூலை 27உ தினப் பத்திரிகைகளில் பார்க்கவும்.]

மேற்படி மாதத்தில் தேசத்திலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களின் மூலம் 14,687 பேருக்குத்தான் வேலை தேடிக் கொடுக்க முடிந்தது.

எனவே, வேலையில்லாதாரின் பட்டாளம் நாளுக்கு நாள், மாதத்துக்கு மாதம், அபிவிருத்தி அடைந்து வருகிறதென்று ஏற்படுகிறதல்லவா!

திட்ட மந்திரி ஸ்ரீ நந்தா ரேடியோவில் பிரசங்கம் செய்த பிறகு வேலையில்லாதவர்களின் தொகை ஏறக்குறைய ஒன்றரை லட்சம் அதிகமாகி யிருக்கிறது!

வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனங்களைப் பற்றித் தெரிந்து கொண்டு, அந்த ஸ்தாபனங்களைத் தேடிச் சென்று தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருப்பவர்கள் இத்தனை பேர்!— பதிவு செய்து கொள்ளாமல் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகி யிருப்பவர்களின் தொகை இன்னும் பல லட்சக் கணக்கில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற வாரத்தில் சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு சிறுவன்,—எஸ். எஸ். எல். ஸி. தேறியவன்,—வேலை கிடைக்காத காரணத்தினால் தற்கொலை செய்து கொள்வதாக எழுதி வைத்துவிட்டு இறந்ததாகப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது.

நாளுக்கு நாள் பயங்கரமான அளவில் அபிவிருத்தி அடைந்து வரும் இந்த வேலையில்லாமைப் பிரச்னையைத் தீர்த்து வைக்க அரசியலாரும் நம் அரும் பெரும் தலைவர்களும் உடனே அவசர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால், நாட்டில் மற்றத் துறைகளில் ஏற்படும் அபிவிருத்திகளை யெல்லாம் மறைத்து விடும்படியான கோர ராட்சத வடிவத்தை இந்த வேலையில்லாப் பிரச்னை எடுத்துக் கொண்டு விடும். "அபிவிருத்தி" "முன்னேற்றம்" என்பதெல்லாம் வெறும் வார்த்தையாகப் போய்விடும்.

அதிகாரிகளுக்கு அநுதாபம் வேண்டும்!

உயர்தரப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் உதவாக்கரைப் படிப்பைப் படித்துவிட்டு வேலையில்லாமல் வேதனைப்படும் இளைஞர்களிடமிருந்து நமக்கு அடிக்கடி கடிதங்கள் வருகின்றன. ஸ்ரீ கந்தாவின் ரேடியோப் பிரசங்கத்தைப் பற்றி எழுதிய பின்னர் இன்னும் ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து வெளியிட்டுக் கொண்டு வருகிறோம்.

வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனங்களில் ஏற்படும் இன்னல்களைப் பற்றியும் சிலர் எழுதி வருகிறார்கள். அத்தகைய கடிதம் ஒன்றை இந்த இதழின் 36-ம் பக்கத்தில் காணலாம்.

இந்தக் கடிதம் எழுதியுள்ள ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் என்னும் இளைஞருடன், ஸ்ரீ ராஜாராமன், ஸ்ரீ எஸ். பாலசந்திரன், ஸ்ரீ கே. ராமஸ்வாமி, ஸ்ரீ எஸ். முத்துஸ்வாமி ஆகியவர்களும் அதை ஆமோதித்துக் கையொப்ப மிட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்க பரம்பரையின் சாபக்கேடு இன்னும் நம் நாட்டை விட்டுப் போகவில்லை. சிறிய அதிகார பதவிகளில் உள்ளவர்கள்கூடத் தங்களிடம் வருகிறவர்களை உதாசீனமாக நடத்துவது வழக்கமாயிருந்து வருகிறது.

'மரியாதை வாரங்கள்' எவ்வளவு நடத்தினாலும், பொது ஜனங்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள அரசாங்க அதிகாரிகளில் பலர் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

மரியாதை ஒருபுறம் இருந்து விட்டுப் போகட்டும்! வேலையில்லாத வேதனைக்கு ஆளாகி உள்ளம் சோர்ந்து, உடல் குன்றி வருகிற வாலிபர்களிடம் நம்மவர்கள் கொஞ்சம் அநுதாபம் காட்டியாவது நடந்து கொள்ளக் கூடாதா!

வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனங்களில் உள்ள அதிகாரிகளுக்கு முக்கியமாக இத்தகைய அநுதாபம் வேண்டும். வேலை தேடி வரும் வாலிபர்களிடம் அன்புடன் ஆதரவாகப் பேசி ஆறுதல் கூறி அனுப்ப வேண்டும்.

அதே சமயத்தில், நம்மவர்கள் மீது நாமே எவ்வித முகாந்திரமும் இன்றி எடுத்ததற்கெல்லாம் லஞ்சப் புகார் கூறும் வழக்கத்தையும் நாம் கண்டிக்க வேண்டியிருக்கிறது.

லஞ்சப் பேய் வேறு எங்கே குடி கொண்டிருந்தாலும், எங்கே தலைவிரித்துத் தாண்டவம் ஆடினாலும், வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் அதற்கு வேலை கிடையாது; இடமும் கிடையாது.

குறிப்பிட்ட கடிதம் எழுதிய வாலிபர்கள் தங்கள் மனவேதனை காரணமாக யோசித்துப் பாராமல் அத்தகைய புகார் சொல்லியிருப்பதாகவே கருதுகிறோம். அந்தப் புகார் அடங்கிய பகுதி அச்சிடப் பட்டதற்காக வருந்துகிறோம்.

அட்டைப்பட விளக்கம்

புதுமைப் பெண்ணே வருக!

நாகரிகம் என்ற சொல் நகரம் என்னும் சொல்லிலிருந்து வந்தது எனக் கூறுவார்கள்.

இன்று நம் பட்டணங்களில் கல்லூரியில் படிக்கும் மாணவிகளும், செல்வமும் செல்வாக்கும் பெற்ற பெண்மணிகளும், உதடுகளுக்கும் நகங்களுக்கும் சாயம் பூசிக் கொள்ளுகிறார்கள்; முகத்தில் பவுடர் பூசிக் கொள்கிறார்கள்; புஷ்பங்களைப் புதுமுறையில் சூட்டிக் கொள்ளுகிறார்கள்! 'இவர்கள் இம்மாதிரி கோலங்களில் கிராமங்களுக்குச் சென்றால், இவர்களைப் பார்த்துக் கிராமப் பெண்மணிகளும் நாகரிகத்தைப் பின்பற்றத் தொடங்கி விடுகிறார்கள்!' என்று சிலர் அங்கலாய்க்கிறார்கள்.

இன்னும் சிலர், "நவ நாகரிகம் வந்து கொண்டிருக்கிறது! வருக, வருக, நவ நாகரிகமே!" என்று வரவேற்புக் கூறுகிறார்கள்!

** ** ** **

பழைய நாட்களிலேயே பெண்கள் அலங்காரத்துக்காகக் காலத்தையும் நேரத்தையும் செலவழித்திருக்கிறார்கள் என்பதை இலக்கியங்களின் வாயிலாக நன்கு அறியலாம். ஏன், அஜந்தா சித்திரங்களில் காணும் பெண்மணிகள் தங்களை எத்தனை வகை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்! கூந்தலை எத்தனை விதமாகப் பின்னி முடித்திருக்கிறார்கள்! அந்தக் கூந்தல் அழகுகளையெல்லாம் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாமே!

ஆகவே, இன்று நம் நாட்டுப் பெண்கள் புது நாகரிக முறைகளினால் தங்களை அலங்கரித்துக் கொள்வதைக் கண்டு கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. சாயமும் பவுடரும் பூசிக் கொண்டு, கண்ணுக்கு அலங்கார மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டாலும் அவர்களால் நெற்றிக்குத் திலகமும் கூந்தலில் புஷ்பமும் அணிந்து கொள்ளாமல் இருக்க முடிவதில்லை! இவை இரண்டும் முக்கியமாகப் பாரதப் பண்புகளாகும்.

இத்தகைய உயர்ந்த பாரதப் பண்பானது புதிய அலங்கார முறைகளினால் அழிந்து விடாது என்ற நம்பிக்கையுடன் இந்தச் சுதந்திரத் திருநாளில் புதுமைப் பெண்ணுக்கு நல்வரவு கூறுகிறோம்!


அழகி வீட்டில்
இருக்கும் பொழுதும்
அழகிய வாயிலையே
அணிகிருள்.
பிரிண்ட் செய்த, சாயம்
ஏற்றிய, மெர்ஸிரைஸ்
செய்த
கடாவ்
வாயில்
சிறந்ததையே வாங்
குங்கள். சுதேசியே
வாங்குங்கள்
தி கடாவ் மகன்ஜி ஸ்பின்னிங் அன்டு வீவிங் கம்பெனி லிமிடெட்,
SISTA'S-KMS-104-TAMIL

குமாரி வஸந்தாவின் சிறந்த நாட்டியம்

கர்நாடகம்

கலியாணம் முதலிய சுப காரியங்கள் நடக்கும் சமயத்தில், சிலர் விசித்திரமாக நடந்து கொள்வதைப் பார்த்திருக்கிறோம். முக்கியமான சந்தர்ப்பங்களில், மேள தாளங்கள் தடபுடல் படும் சமயத்தில், அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கொள்வார்கள்! மணப் பெண் அல்லது மணமகன் தந்தை–தாயை இழந்தவரா யிருந்தால், "அவர்கள் இருந்து இந்த வைபவத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று வருத்தப்படுவார்கள். நவநாகரிகத்தில் சிறந்த 'பிராக்ஞர்'களாகிய நாம், "இது என்ன அசட்டுத்தனம்!" என்று எண்ணிக் கொள்வோம்.

இம்மாதிரி அநுபவம் ஒன்று சமீபத்தில் கலைத் துறையில் எனக்கு ஏற்பட்டது. ரஸிகமணி டி. கே. சி. யுடன் பழகியவர்களுக்கு அடிக்கடி அவருடைய நினைவு உண்டாவது இயல்பு. நல்ல சங்கீதம், நாட்டியம் முதலிய நிகழ்ச்சிகளின் போது ரஸிகமணியின் நினைவு கட்டாயம் உண்டாகும். ஆனாலும் "அடடா! ரஸிகமணி டி. கே. சி. இச் சமயம் இல்லாமற் போனாரே!" என்று வருத்தப்படும்படியான சந்தர்ப்பம் அடிக்கடி ஏற்படுவதில்லை. அபூர்வமாகத்தான் அத்தகைய உயர்தர கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. சில தினங்களுக்கு முன்பு ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களுடைய இல்லத்தில் குமாரி வஸந்தாவின் பரதநாட்டியம் நடந்த சமயத்தில் ரஸிகமணியின் நினைவு எனக்குப் பல முறை வந்தது. ரஸிகத் தன்மையில் இணையற்றவராக விளங்கிவந்த டி. கே. சி. அவர்கள் சங்கீதம், பரத நாட்டியம், சிற்பம், சித்திரம், கவிதை ஆகிய கலைகள் எவ்வளவுக்குப் பழமையாகவும் தூய்மையாகவும் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவற்றைப் பாராட்டுவார்கள். "விஞ்ஞானத்திலும் வாழ்க்கை வசதிகளிலும் புதுமை அவசியம்; கலைகளிலோ பழமையான சம்பிரதாய முறைகளில்தான் ஜீவன் உண்டு" என்பது டி. கே. சி. யின் தீர்க்க அபிப்பிராயம்.

ஆகையால், குமாரி வஸந்தாவின் நாட்டியத்தின்போது, "ஆகா! இந்தப் பழமையான, தூய்மையான, எழிலும் கனிவும் நிறைந்த, பாவ பூரணமான பரத நாட்டியத்தைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டுவதற்கு ரஸிக மணி டி. கே. சி. அல்லவோ இருந்திருக்க வேண்டும்! இந்த நாட்டியத்தை எவ்வளவு நன்றாக ரஸித்திருப்பார்! எவ்வளவு குதூகலமாகக் குமாரி வஸந்தாவைப் பாராட்டிப் பேசி உற்சாகப்படுத்தி இருப்பார்!" என்று அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது.

** **

புது டில்லியில் வசிக்கும் குமாரி வஸந்தா ஜெமினி இல்லத்தில் நடனம் ஆடுகிறார் என்று அறிந்த போது, ஏதோ தாட்சண்யத்துக்காகவே ஸ்ரீ எஸ். எஸ். வாசன் இந்த நடன நிகழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று கருதினேன். அதே காரணத்துக்காகவே நானும் சென்றேன். நடன நிகழ்ச்சியைச் சிறிது நேரம் பார்த்தவுடனேயே மிக்க வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. பின்னர் விசாரித்ததில், குமாரி வஸந்தா இப்போது புது டில்லியிலிருந்தாலும் தஞ்சாவூரைச் சேர்ந்தவர் என்றும், அவ்வூரில் ஸ்ரீ சின்னையா அவர்களிடம் நடனக் கலை பயின்றவர் என்றும் தெரிய வந்தன.

கர்நாடக சங்கீதம் அடிப்படையில் ஒன்றாக இருந்த போதிலும், மகா வித்வான்கள் தாங்கள் கையாளும் முறையினால் அதற்குப் பாணிகள் வகுத்திருக்கிறார்கள். ஒரே ராகத்தில் தியாகய்யரும் கீர்த்தனை செய்திருக்கிறார்; தீக்ஷிதரும் கீர்த்தனை செய்திருக்கிறார். பல்லவி ஆரம்பிக்கும் போதே "இது தியாகய்யரின் கீர்த்தனை" அல்லது "தீக்ஷிதர் கீர்த்தனை" என்று தெரிந்து கொள்ள முடிகிறது. ஒரே கீர்த்தனையைப் பாடும் விதத்திலிருந்து, "இது வீணை தனம்மாளின் பாணி" அல்லது "இது அரியக்குடியின் பாணி" என்று அறிந்து சொல்ல முடிகிறது.

இது போலவே பரத நாட்டியம் ஒரே சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட கலையான போதிலும், அதிலும் நாட்டிய ஆசிரியர்களின் பரம்பரையினால் பாணிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் மூலமாக ஸ்ரீ கந்தப்ப நட்டுவனாரின் பாணி புகழ் பெற்றது. ஸ்ரீமதி ருக்மணி தேவியின் மூலமாகப் பந்த நல்லூர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் பரத நாட்டிய பாணி உலகப் பிரசித்தியடைந்தது. ஸ்ரீ வழுவூர் ராமையாப் பிள்ளையின் பாணி, குமாரி கமலாவின் மூலமாகவும், மற்றும் பல சிஷ்யைகளின் மூலமாகவும் பிரபல மடைந்திருக்கிறது.

நம் சங்கீத—நாட்டியக் கலைகளுக்குப் பிறப்பிடமான தஞ்சாவூரில் ஒரு தனிப்பட்ட தூய்மையான நாட்டிய பாணி இருக்கிறது என்று குமாரி வஸந்தாவின் நாட்டியத்தின் மூலம் தெரிந்தது. மற்ற பாணிகளில் உள்ள பல நல்ல அம்சங்களுடன் அதில் கனிவு எழில் மிகுந்திருக்கிறது. (ஆங்கிலத்தில் 'Grace' என்று அடிக்கடி சொல்கிறோமே, அதைத்தான் இங்கே 'கனிவு எழில்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.)

பரத நாட்டியத்தில் நாம் சில முக்கியமான அம்சங்களை எதிர்பார்க்கிறோம். அந்த அம்சங்கள் இருந்தால்தான் 'நல்ல பரத நாட்டியம்' என்று ஒப்புக் கொள்வோம். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக லய சுத்தம் இருக்க வேண்டும். தாளம் அணுவளவும் தவறாமல், அடவுகளும் ஜதிகளும் எவ்வளவுக் கெவ்வளவு சாமர்த்தியமான பின்னல்களுடன் துரித காலத்தில் வருகின்றனவோ, அவ்வளவுக்கு நாட்டியக் கலையின் தரம் உயர்ந்துவிடுகிறது. மற்றொரு முக்கியமான அம்சம், அபிநயப் பகுதிகளில் முகத்தில் காணப்படும் உணர்ச்சி பாவங்கள். இவை மிகத் தெளிவாக மகிழ்ச்சி, துயரம், அன்பு, கோபம், பயம், அலட்சியம் முதலிய பாவங்களை வெளிப்படுத்திப் பார்ப்பவர்களின் உள்ளத்திலும் பதியச் செய்ய வேண்டும்.

நாட்டியக் கலைவாணிகளில் சிலர் ஆட்டத்தில் சிறந்து விளங்குவார்கள். ஆச்சரியமான அடவுகளையும் ஜதிகளையும் மிகத் துரித காலத்தில் பிரயோகித்துப் பிரமிக்க வைப்பார்கள். ஆனால், முகத்தில் உணர்ச்சிகளைத் தெளிவாகக் காட்ட முடியாத காரணத்தினால், "அபிநயம் அவ்வளவு போதாது" என்று சொல்லும்படி யிருக்கும்.

அபிநயத்தில் சிறந்தவர்களுக்கு ஆட்டம் சுமாராகத்தான் வரும்.

குமாரி வஸந்தாவின் நாட்டியம், ஆட்டத்திலும் அபிநயத்திலும் சமமாகச் சிறந்து விளங்கியது.



உசேனி வர்ணத்திலும், காபி ராகத் தில்லானுவிலும் ஆட்டக் கலையின் சிறப்பு வெளியாயிற்று. "தென்னந் தெளித்தேனைய !" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடலுக்குக் குமாரி வஸந்தா அபிநயம் பிடித்த போது, ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களை நான் அடிக்கடி நினைத்துக் கொள்ள நேர்ந்தது.

இவ்வாறு எல்லா நல்ல அம்சங்களும் பொருந்தியிருந்த ஆட்டத்தில் நளின எழிலும் இருந்தபடியால் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாயிற்று.

சாஸ்திரத்திலிருந்து அணுவளவும் பிறழாமலும், தாளம் தவறாமலும், சம்பிரதாய முறையில் சிலர் ஆட்டம் ஆடுவார்கள். ஆனாலும் ஏதோ குறைபாடு இருப்பதாகத் தோன்றும். அவர்கள் நாட்டியத்தைப் பார்ப்பதில் ரஸிகர்களுடைய உள்ளம் நிறைவு கொள்ளாது. காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால்,ஆட்டத்தில் மற்ற எல்லாம் இருந்தும் நளினம் இல்லை என்பது தெரிய வரும்.

நளினமில்லாத ஆட்டத்தில், கையைத் தூக்கி மறுபடி கீழே கொண்டு வரும்போது, கைகாட்டி மரத்தின் கை ரயில் சமீபத்தில் வந்ததும் 'டக்' என்று கீழே இறங்குவதையும், மறுபடியும் 'டக்' என்று மேலே போவதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி இருக்கும்.

இந்த நளினமில்லாத குறைபாடு, குறிப்பிட்ட நடன பாணியிலேயுள்ள குறையாகவும் இருக்கலாம்; அல்லது கற்றுக் கொண்டு ஆடுகிறவர்களின் குறையாகவும் இருக்கலாம்.

குமாரி வஸந்தாவின் ஆட்டத்தில் இந்தக் குறைபாடு சிறிதும் இல்லையென்று சொன்னால் மட்டும் போதாது. அவருடைய ஆட்டம் அபிநயம் எல்லாம், நளின எழில் பரிபூரணமாக நிறைந்த பரத நாட்டியக் கலைக்கு உதாரணமாக இருந்தது என்று சொல்ல வேண்டும்.

வர்ணம், தில்லானு முதலிய ஆட்டங்களில் ஜதிகளுடன், மேடையில் முன்னால் வந்து விட்டு, பின்னடை நடந்து போகும் போது குமாரி வஸந்தா அப்படியும் இப்படியும் தலையை அசைத்துக் கொண்டே நடந்தது, அன்னப் பறவையும் வன்ன மயிலும் கழுத்தை அசைத்து அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டு நடப்பதை நினைவூட்டுவதா யிருந்தது.

சமீபகாலத்தில் தமிழ் நாட்டில் பரதநாட்டியம் மிக்க வியாபகமாகி யிருக்கிறது. அநேக குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்குப் பரத நாட்டியம் கற்பித்து வருகிறார்கள்.

"மலைக் கள்ளன்" என்ற திரைப் படத்தில், காடு மலை பள்ளத்தாக்குகளைக் கடந்து மனித சஞ்சாரமில்லாத இடத்தில் வசித்தவர்களின் வீட்டிலே கூடப் பரத நாட்டியம் புகுந்திருப்பதைப் பார்க்கிறோம்.

நம் புராதனக் கலை இவ்வளவு பரவியிருப்பதில் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.

நம் குடும்பங்களில் பெண் குழந்தைகள் பரத நாட்டியம் கற்றுக் கொள்வது அவர்களுடைய ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது. அவர்களுடைய வாழ்க்கையைப் பண்பாடும் அழகும் உள்ளதாகச் செய்யக் கூடியது.

குழந்தைகளுக்குப் பரத நாட்டியம் கற்பிக்க விரும்பும் பெற்றோர்கள், பிரதிபலன் எதிர்பாராத கலையாக அதை எண்ணிக் கற்பிக்க வேண்டும்.

மேடையிலும் வெள்ளித் திரையிலும் ஆடிப் புகழடைய வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்துடன் குழந்தைகளுக்குப் பரத நாட்டியம் கற்பிக்கும் பெற்றோர் பலர் பிற்காலத்தில் வருத்தமும் ஏமாற்றமும் அடைய நேருகிறது.

ஆயிரம் பெண் குழந்தைகள் பரத நாட்டியம் கற்றுக் கொண்டால் ஒருவர், இருவர்தான் அம்மாதிரி பிரபலமும் புகழும் அடைய முடியும்.

பிரபலம் அடையும் ஆர்வத்தினால் சிலர் பரத நாட்டியத்தைக் கவர்ச்சிகரமாக்க முயல்கிறார்கள். பாம்பாட்டி நடனம், மார்வாரி நடனம், மீன் வலைஞர் நடனம் என்று நவீன நடனங்களைச் சேர்க்கிறார்கள். மயில் தோகையைக் கட்டிக் கொண்டு மேடைக்கு வந்து மயில் நடனம் ஆடுகிறார்கள். மீசை வைத்துக் கொண்டு வந்து குறவன் ஆட்டம் ஆடுகிறார்கள்.

இப்படி யெல்லாம் செய்வதனால் பரத நாட்டியம் கவர்ச்சிகரமாகும் என்று நம்புகிறார்கள்.

அவர்களுடைய நம்பிக்கைக்கும் ஆர்வத்துக்கும் நாம் தடையாக நிற்க வேண்டியதில்லை; ஏதோ நடத்திப் பார்க்கட்டும்.

ஆனால், குமாரி வஸந்தாவைப் போல் பரத நாட்டியக் கலையின் தூய்மை கெடாமல் அதைப் பயின்று போற்றி வருபவர்களை நாம் மகிழ்ந்து பாராட்டலாம் அல்லவா !

*　　*　　*

பயிற்சி அளித்த நடன ஆசிரியர் இல்லாமலும், பக்க வாத்திய சாதனங்கள் போதிய அளவு இல்லாமலும் குமாரி வஸந்தா அன்று ஸ்ரீ வாஸன் அவர்களுடைய இல்லத்தில் மூன்று மணி நேரம் பரத நாட்டியம் ஆடினார். பார்க்க வந்திருந்த பொறுக்கி எடுத்த ரஸிகர்களின் சபையை மெய்மறந்திருக்கச் செய்தார்.

மிருதங்க வித்வான் ஸ்ரீ துரைராஜன் லெளகீக பயிற்சியுடன் திறமையாகத் தாளம் தட்டி நட்டுவாங்கம் செய்தார்.

தஞ்சையிலிருந்து வந்திருந்த ஸ்ரீ மகாலிங்கம் எடுப்பான இனிய குரலில் பாடி உதவி செய்தார்.

ஆயினும் பக்க சாதனங்கள் போதவில்லைதான். பூரண பக்க வாத்திய உதவிகளுடன் குமாரி வஸந்தா மறுபடியும் பெரிய சபைகளில் நடனம் ஆடிச் சென்னை ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெறுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

இதோ ஒரு பொது ஊழியர்!

1952-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16ம் தேதி. பிற்பகல் சுமார் இரண்டு மணி.

வெய்யில் மண்டையைப் பிளக்கிறது.

உன்னியூர் கிராமத்தின் வயது வந்த ஆண் பெண் அனைவரும் ஓட்டுச் சாவடியின் வெளியே ஆவலே வடிவாகக் குழுமி யுள்ளனர். நேரம் ஆக ஆக மக்களின் பரபரப்பு அதிகரிக்கிறது.

தேர்தல் அதிகாரியும் நகை முகத்துடன் வெளியே வருகிறார்! "திரு விசுவநாதன் அவர்கள் அதிகமான வாக்குகளால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்" என்று அறிவிக்கிறார்.

மக்களின் உற்சாகமும் கரை புரண்டு ஓடுகின்றது. 'ஜே' கோஷம் வானளாவுகிறது!

கூப்பிய கரங்களுடனும் புன்முறுவலுடனும் ஒல்லியான இளைஞர் ஒருவர் வெளியே வருகிறார். அவர்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ விசுவநாதன். ஜனங்களின் சந்தோஷ ஆரவாரம் அடங்க வெகு நேரமாகிறது. இந்த விதமாக உன்னியூர் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற்றது.

கௌரவம் மிக்க பெரிய மிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்தவர் ஸ்ரீ விசுவநாதன். கோவை விவசாயக் கல்லூரியில் பயின்று தமது சொந்தப் பண்ணை நிலங்களை நேரில் கவனித்து, தீவிரமாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர். தாம் கிராமத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதும், சொந்த வேலைகளை எல்லாம் தமது காரியஸ்தர்கள் வசமே விட்டு விட்டுத் தமது முழு நேரத்தையும் கிராம அபிவிருத்தியிலேயே செலவிடுகிறார். பதவி ஏற்று சுமார் பதினெட்டு மாதங்களாகப் பல முக்கிய வேலைகளைத் திறமையுடனும், குறைந்தசெலவிலும், கண்டோர் மெச்சும்படியும் செய்துள்ளார்.

குருடும் செவிடுமா யிருந்த கிராமத்துக்கு ஒளியும் ஒலியும் ஊட்டினார். ஆம்! தெரு விளக்குகளும் பஞ்சாயத்து ரேடியோ நிலையமும் ஏற்படுத்தியதைத்தான் குறிப்பிடுகிறேன்! குப்பையும் கூளமும் குண்டுங் குழியும் மண்டிக் கிடந்த தெருப் பாதைகள் சுத்தமாக்கப்பட்டு, ரஸ்தாக்களை அகலப்படுத்தப்பட்டுள்ளன. சுகாதார வசதிகளும் கக்கூஸ் வசதிகளும் செய்திருக்கிறார். சுமார் ரூ. 4000 ஆகும் என்று அதிகாரிகளால் மதிப்பிடப்பட்ட வாய்க்கால் படித்துறைகள் நான்கும், தலைவரின் நேர் மேற்பார்வையாலும், பொது மக்களின் ஒத்துழைப்பாலும் சுமார் ரூ. 1400 செலவில் மிக்க அழகாகவும் வசதியாகவும் சிமிண்டினால் கட்டி முடிக்கப்பட்டன. பக்கத்துக் கிராமப் பஞ்சாயத்து நிர்வாகிகள் இவ்வளவு சிக்கனமாகவும் அழகாகவும் செய்து முடித்துள்ள வேலைகளைக் கண்டு ஆச்சரியமும் பிரமிப்பும் அடைகின்றனர். சில கண்டிராக்டர்களுக்குப் பொறாமையும் கூட!

இப் பஞ்சாயத்தைச் சேர்ந்த மஜரா கிராமத்தில் குடி தண்ணீருக்காக ஜனங்கள் பெரிதும் சிரமப்பட்டனர். பாதாளத்தில் ஆதிசேடன் தலையைத் தடவித் தாஜா பண்ணித் தண்ணீர் காண வேணு மென்றால் ஏழை மக்கள் என்ன செய்வார்கள்! நிலைமையை அறிந்த தலைவர், பொதுக் கிணற்றைப் புதுக்கித் தரவு எடுத்து, ஆழப்படுத்தி, ஜலவசதி செய்து கொடுத்தார். பெரும்பாலும் தாம் செய்யும் எந்த நல்ல காரியத்துக்கும் மேல் அதிகாரிகளின் தயவையோ, உத்தரவையோ எதிர் பார்ப்பதில்லை. 'இன்ன வேலை செய்யத் தொடங்குகிறேன்' என்று எழுதி அனுப்பிவிட்டு, வேலையை ஆரம்பித்து விரைவில் வெற்றிகரமாக முடித்து விடுவார். அதிகாரிகளும் ஆட்சேபிப்பதில்லை. ஆட்சேபித்தாலும், அந்தச் செலவு தன் சொந்தப் பணமாக இருந்து விட்டுப் போகட்டுமே என்ற பெருநோக்கு உள்ளவர்.

பஞ்சாயத்துக்கு வருவாய் போதாது. தற்போது வீட்டு வரி, வாகன வரி, தொழில் வரி முதலியன விதித்து, ஒழுங்காக வசூலாகி வருகிறது. புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்களின் ஏலக் குத்தகையையும், பரிசல் துறை ஏலக் குத்தகையையும் தற்போது மராமத்து இலாகா நிர்வாகத்திலுள்ளதைப் பஞ்சாயத்துச் சபைக்குக் கொடுத்து உதவ வேண்டும். தலைவரின் பெரு முயற்சியால், ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு தென்னை மரங்களின் குத்தகைத் தொகை இந்தப் பஞ்சாயத்துக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சலுகை வேறு எந்தப் பஞ்சாயத்துக்கும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. இதனால் இந்தப் பஞ்சாயத்துக்கு வருஷம் ரூ. 500-க்கு மேற்கொண்ட உபரி வருமானம் கிடைக்கிறது.

உன்னியூர் கிராமத்தைப் பற்றி இந்த முசிறி தாலுகாவிலேயே தெரியாம லிருந்தது. தற்

○ ✱ ○ ✱ ○ ✱ ○ ✱ ○ ✱ ○ ★ ○

திருமணப் பரிசு

சென்ற ஜூலை 25-ந் தேதி இதழில் நாகர் கோவில் சிறுமியின் கடிதத்தைப் படித்தேன். அதைப் படித்ததும், என் திருமணப் பரிசாகக் காந்தி மகான் ஞாபகார்த்த நிதிக்கு அளித்த நன்கொடைக்குச் சென்னை ராஜ்ய கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி ஞாபகத்துக்கு வந்தது. இத்துடன் அதைத் தங்களுக்கு அனுப்பி யுள்ளேன்.

Raj Bhavan
Guindy, Madras-22
July 23, 1954

Dear friend,

The Secretary of the Mahatma Gandhi Memorial Committee has forwarded to me a sum of Rs. 10/- being your contribution to the Mahatma Gandhi Memorial Fund on the occasion of your wedding. I am thankful to you for this donation and I greatly appreciate your ready response to my appeal. Your contribution is most welcome.

Please accept my best wishes for a happy and prosperous wedded life.

Yours faithfully,



(Sri Prakasa)
GOVERNOR OF MADRAS.

புது மணம் புரிந்து கொள்ளும் தம்பதிகள் அனைவரும் மகாத்மா காந்திஜியின் ஞாபகார்த்த நிதிக்கு மனமுவந்து நன்கொடை யளிக்க முன் வந்து கவர்னரின் வாழ்த்துச் செய்தியைப் பெற்று மகிழ்வார்களாக.

எழும்பூர், சென்னை
2—8—54

பி. எஸ். மணி

○ ✱ ✱ ✱ ○ ✱ ○ ✱ ○ ★ ○ ★ ○

போதைய தலைவரின் சிறந்த நிர்வாகத்தின் காரணமாக, இவர் மாகாண பஞ்சாயத்து யூனியனில் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகவும், தாலுகா பஞ்சாயத்துக்களின் சங்கப் பொக்கிஷதாரராகவும் நியமனம் பெற்றதோடு, அரசாங்க அலுவலகத்திலும் இக் கிராமத்தின் பெயர் நன்கு தெரியப் படுத்தப் பட்டுள்ளது.

பஞ்சாயத்தின் அங்கத்தினர்களில் சிலர் தங்கள் பொறுப்பை உணர்ந்து, கடமையைத் திருப்திகரமாகச் செய்வதில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பொது மக்களின் வோட்டுப் பெற்று அங்கத்தினர்களான ஒரு சிலர், தாங்கள் பொதுமக்களின் நன்மையை நாடும் ஊழியர்கள் என்பதாகத் தங்களைக் கருதுவதில்லை. தங்கள் வார்டு மக்கள் சொல்லும் குறைகளையும் கவனிப்பதில்லை.

சிறிய சிவில் வழக்குகள் எல்லாம் மிக்க நேர்மையுடன், வேண்டியவர் வேண்டாதவர் என்ற வித்தியாசமின்றி, இரு தரத்தாரும் சந்தோஷமாக ஒப்புக் கொள்ளும்படி, தர்ம நியாயமாகத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளன. தலைவர் தேர்தலுக்குப் பின், ஒரு சிவில் வழக்குக்கூட வெளியே கோர்ட்டுக்குப் போகவில்லை.

உன்னியூர்
25—7—54

யு. கே. பிரசன்னமூர்த்தி

வீண் செலவு கூடாது!

இப்போதைய நிலையிலே பஞ்சாயத்துத் தலைவர்கள் மக்களின் மனக் கசப்பைப் பெற்றுத் தான் தீர வேண்டும். ஏனெனில் அரசாங்கம் எல்லாப் பஞ்சாயத்துக்களும் சில வரிகளைக் 'கட்டாய வசூல்' செய்ய வேண்டுமென்று வரையறுத்திருக்கிறது. வீட்டு வரி, வண்டி வாகனாதிகள் வரி, தொழில் வரி முதலியவற்றை விதித்து வசூலிக்கத் தவறிய தலைவர்கள் மீது ஸர்சார்ஜ் செய்து வசூலிக்கத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் இந்த வரிகளை வசூலிக்கத் தவறினால் அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் செய்யும் எந்த வேலைக்கும் அநுமதி கிடைப்பதில்லை. உதாரணமாக, எங்கள் கிராமத்தில் வீதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்வதற்காக ஒரு தொழிலாளியை நியமிப்பதற்காகத் தீர்மானம் போட்டு மேலிடத்துக்கு அனுப்பினோம். அனுப்பிய தீர்மானம் அப்படியே திரும்ப வந்து விட்டது. கட்டாய வரிகள் விதித்து வசூலிக்கப்பட்டால் தான் அநுமதி கிடைக்கும் என்றும் பதில் வந்திருந்தது. இந்த நிலையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் என்ன செய்ய முடியும்!

இதுகாறும் பஞ்சாயத்துக்கு வரியே செலுத்தாதிருந்த கிராமவாசிகளிடம் போய், "வரியைக் கட்டுங்கள்" என்று கேட்டால் "என்ன ஐயா, வரி! என்றைக்கு மில்லாத வரி இன்று வந்து முளைத்துக் கொண்டு விட்டதா! இதற்குத் தான் நாங்கள் உங்களுக்கு 'வோட்' கொடுத்தோமா!" என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால்

தலைவராக வருகிறவர்கள் இதற்கெல்லாம் தக்க சமாதானம் கூறிச் சட்டத்தின் அமைப்பையும் வரிப் பணம் அந்த ஊருக்கே செலவழிக்கப்படுகிறது என்பதையும் விளக்கி அவர்களை வரி கட்டச் செய்து வருகிறார்கள்.

பொதுவாகப் பார்த்தால் வரி வசூலிக்காமல் எந்த ஆட்சி முறையுமே இயங்க முடியாது. உதாரணமாக ஒரு பஞ்சாயத்துத் தலைவர் அந்தப் பஞ்சாயத்துக்குச் சேர்ந்த கிராமங்களில் வரியே விதிக்காமல் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்தப் பஞ்சாயத்துக்கு வரும் வருமானம் நிலவரி ஸர்சார்ஜில் கொஞ்சம் பகுதியும், ரிஜிஸ்திரேஷன் கட்டணங்களின் ஒரு பகுதியும்தான். இந்தத் தொகையைக் கொண்டு அவர் காரியாலய நிர்வாகச் செலவுகளைக் கூடச் சமாளிக்க முடியாது. பிறகு ஊருக்கு உருப்படியான ஒரு காரியமும் செய்ய முடியாது.

வரிகள் வசூலிக்கும் விஷயத்தில் ஒரு அம்சத்தைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். அந்தந்த பஞ்சாயத்துக் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை முதலில் மதிப்பிட்டுப் பின்னர் வரியை நிர்ணயம் செய்ய வேண்டும். வியாபாரம், தொழிற்சாலை முதலியவற்றிற்கு வசூலிக்கும் லைசென்ஸ் கட்டணங்களைச் சற்று கூடுதலாகப் போட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால் வீட்டு வரி விஷயத்தில் மட்டும் தங்களுடைய கூரிய மதியை உபயோகிக்கும்படி தலைவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் கிராமாந்திரங்களில் வாழும் பெரும்பாலான வீட்டுக்காரர்கள் ஏழை மக்கள் என்பதாலேயே.

சுந்தரம்பள்ளி என்னும் எங்கள் ஊர் ஒரு மைனர்ப் பஞ்சாயத்து. இருநூற்றைம்பது வீடுகளுக்கும் குறைவான இந்தப் பஞ்சாயத்தில் வேறு எந்தக் குக்கிராமங்களும் சேர்க்கப்படவில்லை. வருட வருமானம் சுமார் மூந்நூறு ரூபாய்தான்.

பஞ்சாயத்துத் தலைவராகிய நானும் அங்கத்தினர்களும் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டோம். அனைவரும் இளைஞர்களே!

மிகக் குறைந்த வருமானம் வருவதை வீணாகச் செலவழித்து விடலாமா! ஆகவே கண்டதற்குச் செலவு செய்து விடாமல், வசூலுக்கு ஆள் வைக்காமல், கணக்கெழுத குமாஸ்தா வைக்காமல் நாங்களே எல்லாவற்றையும் செய்து கொள்கிறோம். அடிக்கடி பெரிய மனிதர்களையும் பொதுமக்களையும் கலந்து கொள்கிறோம்.

குறைவான வருமானம் இருந்துங்கூட ஊரில் பத்து தெரு விளக்குகள் இந்த ஆண்டில் போடப்பட்டு நிலாக் காலங்கள் தவிர மாதம் இருபது நாட்கள் தவறாமல் எரிய விடப்படுகின்றன.

ஊருக்குள்ளே குப்பை கூளங்கள் சேர்ந்து சுகாதாரம் கெடும்படி விடுவதில்லை. ஊருக்குள்ளே அதுவும் தங்கள் வீட்டுக் குள்ளேயே சாணியைக் கொட்டி வைத்திருந்தவர்களிடம் நேரில் சென்று அப்புறப்படுத்தும்படி கூறினோம். அப்படியும் அப்புறப்படுத்தாத சிலரை நோட்டீஸ் கொடுத்து 'மிரட்டி' (வெறும் மிரட்டல்தான்!) அப்புறப்படுத்தச் செய்தோம். பொதுவாகத் தெருக்கள் சுத்தமாக இருக்கின்றன.

சேரி வாழ் மக்களுக்கும் இந்தப் பஞ்சாயத்து தன் கடமையைச் செய்திருக்கிறது. இரண்டு தெரு விளக்குகள் போடப் பட்டிருக்கின்றன. குடி தண்ணீருக்கான கிணற்றைத் தண்ணீர்ப் பஞ்சம் வந்த கடந்த ஆண்டில் ரெவின்யூ இலாகாவின் துணையுடன் ஆழப்படுத்தித் தன் பங்கான 150 ரூபாயைக் கொடுத்திருக்கிறது.

ஊரின் உட்பகுதியில் ஒரு முக்கிய தெருவில் வண்டி போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்காக இரண்டு பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. இதற்கும் தீர்மானம் போட்டு ஆக வேண்டியவைகளைக் கவனித்து வருகிறோம்.

நியாய சபையில் இதுவரை 40 சிவில் வழக்குகளையும் 17 கிரிமினல் வழக்குகளையும் நல்ல முறையில் விசாரித்திருக்கிறோம்.

வாக்கெடுப்பு மறைமுகமாக நடப்பதுதான் நல்லது என்பது என் அபிப்பிராயம். மேஜர் பஞ்சாயத்துக்களில் நிர்வாக அதிகாரிகளின் தொல்லையை ஒழிப்பது நலம்.

ஊரில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும்பெற்று வசூலிக்கும்வரிப் பணத்தைப் பாழடிக்காமல், குமாஸ்தா, பில்-கலெக்டர் என்று சம்பளமாகக் கொடுத்து விடாமல், தாங்களே வசூலித்துக் கணக்கெழுதிப் பொது நலத்துக்கு நல்ல வருமானமுள்ள பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்கள் பாடுபட்டால், பஞ்சாயத்து ஆட்சி முறையை யாரும் குறை கூற முடியாது.

சுந்தரம்பள்ளி
12—7—54

பெ. சுந்தரமூர்த்தி
தலைவர், பஞ்சாயத்துச் சபை


SHOCK-PROTECTED!
WATER-PROOF!
STAIN-PROOF!
வெஸ்ட் எண்ட் ஆல் - ப்ரூப்
ஸோவர் ப்ரைமா
The SOWAR PRIMA SPECIAL
CENTRE-SECOND
Patent Everbright Steel ... Rs. 185
Stain-Proof, Water-Proof
and Shock-Protected
WEST END WATCH Co
BOMBAY
CALCUTTA

சக்கரவர்த்தித் திருமகன்

18. கைகேயி

ராஜ குல அந்தப்புர வழக்கத்தையனுசரித்து, கைகேயிக்கு, தோழியும் அந்தரங்க வேலைக்காரியுமாக ஒரு கூனியம்மை எங்கிருந்தோ வந்து சேர்ந்திருந்தாள். எஜமானி கைகேயிக்கு இவள் கொஞ்சம் சொந்தம் கூட; அதனால் நெருங்கிப் பழகும் உரிமையைக் கொண்டாடி வந்தாள். இவள் பெயர் மந்தரை. ராமாயணக் கதையில் மிகப் பிரசித்தி பெற்ற பாத்திரம். நம் நாட்டு மக்கள் அனைவரும், ஆண் பெண் குழந்தைகள் எல்லோரும் வெறுக்கும் பாத்திரம். இவளே ராமனைக் காட்டுக்கு அனுப்பச் செய்தவள். இவள் என்ன செய்தாள், எப்படிச் செய்தாள் என்பதை விவரமாக இனிப் பார்க்கலாம்.

தசரதன் ராஜ சபையைக் கூட்டி ராமசந்திரனுக்கு நாளைக்கே பட்டாபிஷேகம் செய்துவிட வேண்டும் என்று நிச்சயித்த அந்த நாள், மந்தரை தற்செயலாக அந்தப் புரத்து மேல் மாடி ஏறி அழகிய உப்பரிகையில் ஏறி நின்றாள். உயரத்திலிருந்து நகரத்தைப் பார்த்தாள். தெருவெல்லாம் தண்ணீர் தெளித்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஜனங்கள் தங்கள் வீடுகளின் மேல் பலவித அழகிய கொடிகள் பறக்கவிட்டிருந்தார்கள். ஆடை அணிகள் பூண்டு, சந்தனம் பூசி, புஷ்பம் அணிந்து, எங்கே பார்த்தாலும் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் ஏதோ பேசிக் கொண்டு மிகச் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தாள். கோயில்களில் எல்லாம் வாத்திய கோஷம். ஏதோ பெரிய மங்கள உற்சவம் நடக்கப் போவதாகத் தெரிந்தது.

மந்தரை பக்கத்தில் நின்ற அந்தப்புர வேலைக்காரியைப் பார்த்து, "என்ன நீ பட்டு உடுத்தியிருக்கிறாய்? என்ன விசேஷம் ஊரில்? கௌசல்யா தேவி பிராமணர்களுக்குத் தக்ஷிணை கொடுத்துக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறதே! பணத்தைச் சாதாரணமாக வீண் செலவு செய்ய மாட்டாளே! எங்கே பார்த்தாலும் திருவிழா வாத்தியமும் அலங்காரமுமாக இருக்கிறதே! உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா? நம் ராமசந்திரனுக்கு நாளைக் காலை யுவராஜ பட்டாபிஷேகம்" என்று அந்த வேலைக்காரச் சிறுமி சொல்லிவிட்டுக் கொண்டானடித்தாள்.

இதைக் கேட்டதும் மந்தரைக்கு அடங்காத கோபம் மேலிட்டது. மிக வேகமாகக் கீழே இறங்கினாள். நேராகக் கைகேயியின் அறைக்குச் சென்றாள். அப்போது கைகேயி படுத்திருந்தாள்.

"மூடப் பெண்ணே! எழுந்திரு, எழுந்திரு! தலைக்கு மேல் பெரிய வெள்ளம் வருகிறது. நீ மோசம் போனாய். உன் அதிர்ஷ்டம் வற்றிப் போச்சு. மூடப் பெண்ணே, தூங்குகிறாயே!" என்றாள்.

மந்தரையின் துக்கத்தைப் பார்த்து அவளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதோ என்று கைகேயி எண்ணி, "மந்தரை,

உனக்கு என்ன துயரம் ஏற்பட்டது? ஏன் இப்படித் துக்கப் படுகிறாய்?" என்று மெதுவாகக் கேட்டாள்.

ராஜாஜி

மிகக் கெட்டிக்காரியான மந்தரை பேச ஆரம்பித்தாள்.

"உனக்கும் எனக்கும் விநாசம் வந்து விட்டது, பெண்ணே! ராமனை யுவராஜனாகச் செய்து விடத் தசரதன் நிச்சயம் செய்து விட்டான். இதற்குமேல் எனக்கு என்ன துக்கம் வேண்டும்? உனக்குத் துக்கம் வந்தால் நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்? ஓடி வந்தேன். அரச குலத்தில் பிறந்து வளர்ந்தாய்; மகாராஜனுடைய வீட்டில் அரசியாகவும் புகுந்தாய். ஐயோ! கெட்டுப் போனாயே! ஒன்றும் அறியாத அப்பாவிப் பெண்ணாயிருக்கிறாய். இனிய மொழிகள் பேசிப் பேசி உன் புருஷன் உன்னை ஏமாற்றியே விட்டான். வஞ்சனைக்காரன், எல்லாம் கௌசல்யைக்குக் கொடுத்து விட்டு உன்னைத் தெருவில் திண்டாட விட்டு விட்டான் மோசக்காரன். பரதனை 'மாமன் வீட்டுக்குப் போ' என்று சொல்லி வெகு தூர தேசத்துக்கு அனுப்பி விட்டு, இங்கே அவசர அவசரமாக ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப் போகிறான். நாளைக்கே எல்லாம் முடிந்து விடப்போகிறது. நீயோ எல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா படுத்துக் கிடக்கிறாய். நீயும், உன்னை நம்பி யிருக்கிறவர்களும் எல்லோரும் அழிந்தார்கள்."

இப்படி மந்தரை அடுக்கிக் கொண்டே போனாள். கைகேயிக்கு இந்தப் பேச்சு காதில் பட்டதே யொழிய அதன் பொருளில் கவனம் செல்லவில்லை. அவள் ஒன்றே ஒன்றைத்தான் கவனித்தாள். அதாவது ராமனுக்குப் பட்டாபிஷேக மகோற்சவம் நடக்கப் போகிறது என்பதைத் தான்.

"என் குமாரன் ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்கிற செய்தியைக் கொண்டு வந்தாய், மந்தரா! இதைவிட என்ன சந்தோஷம் எனக்கு? இந்தா, இதைப் பெற்றுக் கொள்! இன்னும் என்ன வேண்டுமோ, கேள்!" என்று தன் கழுத்திலிருந்த மாலையை எடுத்து மந்தரைக்குக் கொடுத்தாள். மங்களச் செய்தி கொண்டு வந்தவர்களுக்கு ஏதாவது பொருள் உடனே தருவது ராஜ குல வழக்கம்.

* * *

மந்தரை விணைக் பயப்படுகிறாள். அவள் ஒரு வேலைக்காரிதானே! பெரிய வீட்டு விஷயங்களை அவளால் தெரிந்து கொள்ள முடியாது. அவளுடைய மூட பயத்தைப் போக்கி, தைரியம் உண்டாக்க ஆபரணத்தை அவளுக்குத் தந்து தன் மகிழ்ச்சியை அவளும் அடையச் செய்யலாம் என்று கைகேயி எண்ணினாள்.



கைகேயினுடைய உள்ளம் எளிதில் கெடவில்லை. நல்ல பண்பாடு பெற்றவள். க்ஷுத்ர புத்திக்கு உடனே இடம் கொடுக்க வில்லை. மந்தரைக்கோ இதைக் கண்டு துக்கம் இன்னும் அதிகரித்தது.

கைகேயி தந்த மாலையை அப்படியே வீசி எறிந்துவிட்டு, மந்தரை "ஐயோ, பைத்தியக்காரி! தலைக்குமேல் வந்திருக்கிறது வெள்ளம். மடப் பெண்ணே! நீயோ ஹா ஹா என்று சிரித்து மகிழ்கிறாய். தீராத கஷ்டம் வந்து உன் வாழ்க்கையைக் கவிழ்ப்பதற்கு நிற்கும் போது நீ கண்ணை மூடிக் கொண்டிருக்கிறாய். உன்னைப் பார்த்து நான் சிரிக்கவா, அழவா? உன் சக்களத்தியானவள் தன் மகன் பட்டத்துக்கு வர ஏற்பாடு செய்து விட்டாள். நீ இது வெகு மங்களம் என்று கூத்தாடுகிறாய். உன் மதியை நான் என்னென்று சொல்லுவேன்? ராமன் பட்டம் பெற்ற பின் பரதன் நிலை என்ன? பரதன் இருக்கும் வரையில் தனக்கு என்றைக்குமே அபாயம் என்று ராமன் எண்ணுவான் அல்லவா? இயற்கையின் போக்கு ராமனுக்குத் தெரியும். ஆனபடியால் பரதன் ராமனுக்குப் பகையாகி விட்டான். பயத்தினால்தான் விரோதிகளை அரசர்கள் கொல்லுவது. ராமன் பட்டம் பெற்ற பின் பரதனைக் கண்டு அவன் பயப்படுவான். பயத்தினால் அல்லவோ பாம்புகளைக் கண்டவுடன் கொல்லுகிறோம்? பரதன் உயிரைப் பற்றி இனிமேல் சந்தேகப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டியதாகும். நாளை பொழுது விடிந்ததும் கௌசல்யை பாக்கியவதியாவாள். நீ அவளுக்குத் தாசியாவாய். அவள் முன் கை கூப்பி வணங்கி ஒரு வேலைக்காரியாக நிற்பாய். நாளை முதல் உன் மகனுடைய சுதந்திரமும் முடிந்தது. அவன் இனிமேல் ராமனுக்கு ஒரு சாதாரண வேலைக்காரன். நம்முடைய அந்தப் புரத்தில் இனி மானம் சந்தோஷம் என்பது இல்லை" என்று சொல்லித் துக்கத்தினால் மேலே பேச முடியாமல் நிறுத்தினாள்.

கைகேயி இதையெல்லாம் கேட்டு உண்மையில் வியப்படைந்தாள். "ஏன் இவ்வாறு பயப்படுகிறாள், மந்தரை? ராமனுடைய குணம் இவளுக்குத் தெரியாதா? தருமமே வடிவம் கொண்டவன் அல்லவா அவன்?" என்று எண்ணினாள்.

"மந்தரா! ராமனுடைய சத்தியம், சீலம், அடக்கம் இவற்றை நாம் எல்லோரும் கண்டு மகிழ்கிறோம் அல்லவா? அவன் மூத்தவன், ராஜ்யம் அடைகிறான். அவனுக்குப் பிறகு பரதன் அடையப் போகிறான். இதில் என்ன கெட்டுப் போச்சு? ஏன், தோழி, நீ வருத்தப் படுகிறாய்? ராமனுக்குப் பிறகு நூறு வருஷம் பரதனும் அரசனாகி வாழ்வான். அழாதே, துக்கப்படாதே! ராமன் என்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறான்! தன்னைப் பெற்றவளிடம் கூட அவ்வளவு பிரியம் அவனுக்கு இல்லையே? தன் தம்பி ஒவ்வொருவனையும் தன் உயிராகவே அல்லவோ ராமன் கருதி வருகிறான். அவனைப் பற்றி நீ பயப்படுவது சரியே அல்ல" என்று சொல்லி இயற்கை அன்புடன் கைகேயி மந்தரையின் பயத்தைத் தணிக்கப் பார்த்தாள்.


"ஐயோ, உன் புத்திக்கு நான் என்ன சொல்வேன்! ஏன் உன் மூளை இப்படிக் கெட்டுப் போயிற்று? ராமன் அரசனாக அபிஷேகமான பின் பரதனுக்கு ஏது இடம்? ராஜ குல வழக்கம் உனக்குக் கொஞ்சமும் தெரியவே யில்லை. ராமன் சிம்மாசனம் ஏறினால் அத்துடன் பரதனுடைய ராஜ வாழ்க்கை முடிந்தது. ராமனுக்குப் பிறகு அவனுடைய மூத்த மகன், அவனுக்குப் பிறகு அவனுடைய மூத்த மகன், இப்படித்தான் உரிமை செல்லும். தம்பியைப் பற்றிப் பேச்சே கிடையாது. மூத்த மகன் மூத்த மகனாகவே சங்கிலி கோத்த வரிசைக் கிரமமாகப் போகும். தம்பி எவ்வளவு குணவானாக இருந்தாலும் அவனுக்கு இடமில்லை. இதுவே ராஜ குல வரிசைக் கிரமம். ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து முடித்த பின் உன் மகன் அநாதையாவான். ராஜ வம்சத்தில் அவனுக்காவது அவன் மக்களுக்காவது இடமில்லை. இது உனக்குத் தெரியவில்லையே, என் கண்மணி! நான் என்ன செய்வேன்?

"ராமன் பட்டம் பெற்றபின் அவன் பரதனைச் சும்மா விடமாட்டான். பரதன் உயிருக்கு ஆபத்துண்டாகும். பரதன் உயிரோடு இருக்க நீ வேண்டினாயானால் அவன் மாமன் வீட்டிலிருந்தே எங்கேயாவது போய் மறைந்து க்ஷேமமாக இருக்கட்டும். இங்கே வந்தால் அவனுக்கு ஆபத்தே உண்டாகும். கௌசல்யைக்கு உன் மேல் மிகக் கோபம். அரசனுடைய பிரீதியை நீ சம்பாதித் திருப்பதாக எண்ணி நீ அவளைப் பல தடவை அலட்சியம் செய்திருக்கிறாய். இப்போது பழி வாங்குவாள் நிச்சயம். சக்களத்தியின் கோபம் மிகப் பொல்லாதது. ராமன்

தேய்ந்த டயர்கள்


நீடித்து

உழைக்க



டிரக் டயர்

செப்பனிட்டுத் தருகிறோம் புதுப்பிக்கிறோம்



கார் டயர்

இதனால்

- சிலவு குறைவு
- பாதுகாப்பு
- நீடித்த உழைப்பு

இதற்கு

உத்திரவாதமளிப்பவை

முழு வட்ட
மோல்டுகளால்
தயாரிப்பு,
டி. வி. எஸ்.
அனுபவ சாதனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
புதுக்கோட்டை

(டி.வி.எஸ். ஸ்தாபனம்)


மணமும் மகிழ்வும் பெற...
TSR
சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
சதம்ப காய்கறி ஊறுகாய்கள்
வாசனைப் பாக்கு
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
தென்னிந்தியா
சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 18. ராயப்பேட்டை ஹைரோடு. ● கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்.


அம்மா சொல்லுகிருள்—
ப்ரூக்லாக்ஸ் உங்களை ஒரே இரவில் குணமாக்கிவிடும்
BROOKLAX
CHOCOLATE LAXATIVE
குழந்தைகள் ப்ரூக்லாக்ஸின் இனிய ருசியை விரும்புகின்றனர். கசந்த சுவையுள்ள மருந்துகளிலிருந்து முற்றிலும் மாறுனது. படுக்குமுன் ஒரு சிறு வில்லை சாப்பிட்டால் நிச்சயம் நிவாரணமுண்டு. உங்களுக்கோ, குடும்பத்திற்கோ பேதி மருந்து வேண்டும்பொழுது ப்ரூக்லாக்ஸை கேட்டு வாங்குங்கள். மலச் சிக்கலைத் திருத்த அருமையான வழி.
லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் லாபரேடரீஸ் லிமிடெட் தயாரிப்புகளில் ஒன்று.
ஏஜண்டுகள்: ஓரியண்டல் மர்க்கண்டைல் ஏஜன்ஸி
99-ஏ, அரமனைக்காரத் தெரு, மதராஸ்
OMA-10

பட்டமடைந்தால் நம்முடைய பரதன் செத்தான் என்றே வைத்துக் கொள். ஆனபடியால் உறுதியாகத் தீர்மானிப்பாய். எப்படியாவது பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டும். ராமனை ராஜ்யத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும்.''

இவ்வாறு முடித்தாள் மந்தரை. கைகேயியின் உள்ளத்தில் பயம் புகுந்து கொண்டது. மந்தரை வெற்றி யடைந்து விட்டாள். கிலி பிடித்த கைகேயியின் முகம் சிவந்து போய்ச் சுவாசம் வெப்ப மடைந்தது. இன்னது செய்வது என்று தெரியாமல் மந்தரை யிடம் தஞ்ச மடைந்து பேச ஆரம்பித்தாள்.

புத்திர பாக்கியம் பெறும விருந்த காலத்தில் கைகேயியைத் தசரதன் ராஜ குல வழக்கத்தை யனுசரித்து விவாகம் செய்து கொண்டான். அந்தச் சமயம் கைகேயியினுடைய தந்தை கேகய ராஜன் தசரதனிடம் வாக்குறுதி பெற்றான்,—இவள் வயிற்றில் பிறக்கும் மகனுக்குப் பட்டம் என்று. இப்படி அப்போது சொன்னதில் ஒன்றும் வியப்போ வித்தியாசமோ இருந்திருக்க இடமில்லை. அப்போது யாருக்குமே குழந்தைகள் இல்லை. மற்ற மனைவிகளுக்குப் புத்திரப் பேறு உண்டாகவில்லை. புத்திரப்பேறு ஆசைப்பட்டே மூன்றாவது மனைவியைக் கொண்டது. அந்த ஆசையும் நிறைவேறவில்லை. வெகு நாட்கள் கழித்து யாகம் செய்து மூன்று மனைவிகளும் குழந்தைகள் பெற்றார்கள். பட்ட மகிஷியின் மகனான ராமன் நான்கு புத்திரர்களுக்குள் மூத்தவனாகவும், சகல உத்தம குணங்களை யுடையவனாகவும், ராஜ்ய பாரம் வகிக்கும் தகுதியைக் கொண்டவனாகவும், மந்திரிமார்கள், நகரத்தார், கிராம வாசிகள், சிற்றரசர்கள் அனைவரும் யுவராஜ்யப் பதவிக்குத் தகுந்தவன் என்று அவர்களுடைய அன்பைச் சம்பாதித்தவனாகவும் இருக்க, எப்படி அவனுடைய உரிமையையும் ராஜகுல முறையையும் புறக்கணித்துப் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வது நியாயமாகும்? தவிர பரதனும் கைகேயியும் இதைப் பற்றி ஏதொரு ஆசை அல்லது எண்ணங் கூட வைத்தது கிடையாது. அதைப் பற்றிப் பேச்சே கிடையாது. ஆனபடியால் முறைப்படி ராமனை யுவராஜ்யப் பதவியில் அமர்த்துவதில் ஒரு சிக்கலும் ஏற்படாது என்று அரசன் எண்ணினான். அவ்வாறே கைகேயியின் உள்ளத்திலும் ஏதொரு கல்மஷமும் இருக்கவில்லை. இது கைகேயியின் நடவடிக்கைகளினால் வியக்தமாகத் தெரிகிறது. பரதன் உள்ளத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

ஆயினும் தசரதன் ராமனிடம் சொன்னதைப் போல் நல்லவர்களுடைய தூய சிந்தையும் திடீர் என்று திரிந்து போகும். கெட்டவர்களுடைய துர்ப் புத்தியும் அதனோடு விதியும் சேர்ந்து விட்டால் யாருமே கெட்டுப் போகலாம். இதுவே கைகேயி விஷயத்தில் நடந்து விட்டது.

> தீய மந்தரை இவ்வுரை
> செப்பலும் தேவி
>
> தூய சிந்தையும் திரிந்தது
> சூழ்ச்சியின் அரக்கர்
>
> மாய வானவர் பெற்றநல்
> வரம்உண்மை யாலும்
>
> ஆய அந்தணர் இயற்றிய
> அருந்தவத் தாலும்.

என்று பாடுகிறார் கம்பர். தாமதப்பட்டால் ஒருவேளை இடையூறு ஏற்படும் என்று எந்தக் காரணத்துக்காக பரதன் வருவதை எதிர்பாராமல் பட்டாபிஷேகம் முடித்து விடலாம் என்று தசரதன் அவசரப்பட்டானோ அதே காரணமும் அதே அவசரமும் கைகேயியின் சித்தத்தைக் கோணல் வழியில் செலுத்த மந்தரைக்கு நன்றாக உபயோகப் பட்டு விட்டது.

"பார், இவ்வளவு அவசரம் ஏன்? உன் மகன் ஊரில் இல்லாத சமயத்தில் அவனை மோசம் செய்யவே இந்த அவசர ஏற்பாடுகள் எல்லாம்! காதல் வேஷம் போடும் உன் அரசனுடைய வஞ்சக சமத்காரத்தைப் பார்!'' என்றாள்.

மந்தரை கைகேயியினுடைய உள்ளத்தைக் கெடுத்துத் தன் ஆலோசனைக்குச் சம்மதிக்கச் செய்து விட்டாள். மொத்தத்தில் கைகேயியினுடைய சுபாவம் சாதாரண ஸ்திரீ சுபாவம். நல்ல உணர்ச்சியும் பண்பாடும் உண்டு. கூர்மையான புத்தியும் உண்டு. ஆனால் லோக விவகாரம் அதிகமாக அறிந்தவளல்ல. பிடிவாதம் அதிகம். எளிதில் ஏமாற்றப் பட்டாள். செய்யும் காரியத்தின் முழுப் பலனை ஊகித்து அறியும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. ராமாயணச் சங்கடப் படலம் ஆரம்பித்து விட்டது.



நாமக்கல் கவிஞர்..
மு. கருணாநிதி..
S.M.ஸ்ரீராமுலுநாயுடு


பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
BHARAT
STUDIO

காருகுறிச்சி சகோதரர்களின் நாதஸ்வர கானம்

ஈ. கிருஷ்ணய்யர்

நமது தென்னாட்டில் கோவில் இல்லாத கிராமமோ நகரமோ கிடையாது. நாதஸ்வர வாத்யமில்லாத பெருங் கோவில்களோ மத ஸ்தாபனங்களோ இல்லை. நமது தேசிய வாழ்வு விழாக்கள் நிரம்பியது. மங்களகரமான நாதஸ்வர வாத்திய மில்லாது எந்த விழாவும் நடப்பதில்லை. குழந்தைப் பருவத்தில் தாயின் தாலாட்டுக்குப் பிறகு உயரிய சங்கீதத்தை முதல் முதலாகக் கேட்பது விழாக்களிலும், ஊர்வலங்களிலும், கோவில்களிலும் வாசிக்கப்படும் நாதஸ்வர வாத்தியத்திலிருந்துதான். உயரிய சங்கீதத்தைப் பண்டிதர்களும் பாமரர்களும் உள்பட பெருவாரியான மக்கள் திறந்த வெளியிலிருந்தும் எளிதில் கேட்டு அனுபவிக்க உதவி வந்திருப்பது நாதஸ்வர வாத்யம்தான். மிகவும் புராதன காலந் தொட்டு இந்த வாத்யம் தென்னாட்டில் வழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. உலகில் வேறெங்குமில்லாது தென்னாட்டுக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கும் வாத்யம் இதுவே. தொன்று தொட்டு வாழையடி வாழையாகப் பல பெரிய இசைவல்லோர்கள் அதைக் கையாண்டு பிரபலம் பெற்றிருக்கிறார்கள். கர்நாடக சங்கீதத்தில் இலக்கண முறையில் வகுக்கப்பட்ட ராக நிட்டமே மிகவும் முக்கியமானது என்றால், நாதஸ்வர வாத்யம் தான், அந்த ராக நிட்டத்தின் களஞ்சியமாய் இலங்கி வருகிறது.

ஆகஸ்டு மாதம் 1-ந் தேதி சென்னை கோபாலபுரம் சங்கீத சபையில் உயர்தரமான நாதஸ்வரக் கச்சேரி நடந்தது. பல பிரபல வித்வான்களும் ரஸிகர்களும் குழுமியிருந்தார்கள். நாதஸ்வரம் வாசித்தவர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் ஆப்த சிஷ்யரான காருகுறிச்சி ஸ்ரீ அருணாசலம் அவர்கள். புகழ்பெற்ற நாச்சியார் கோவில் ராகவன் பிள்ளை தவுல் வாசித்தார். கச்சேரி சுமார் நாலரை மணி நேரம் நடந்தது. ஆரம்ப முதல் இறுதி வரை வித்துவான்கள் ரஸிகர்களை இனிய நாத வெள்ளத்தில் ஆழ்த்தி மெய்மறக்கச் செய்து விட்டார்கள். பைரவம் ராகத்தில் 'மரியாத காதய்யா' உருப்படியுடன் தொடங்கி, பந்துவராளி, உசேனி, கல்யாணி ராகங்களையும் அவைகளின் திருதிகளையும் வனப்பு வடிவங்களாய்ச் சித்திரித்தார்கள். உசேனி ராகம் அபூர்வ எழில் கொண்டிருந்த தென்றால், கல்யாணியில் விழுந்த கம்பிதப் பிடிகள் மனத்தை அள்ளின. 'ஏதாவுனரா' என்ற கல்யாணி கிருதியின் அனுபல்லவியில் கேட்ட ஒரு சங்கதியின் அழகுக்கும் நாஸூக்குக்கும் 'அக்ஷர லக்ஷம்' கொடுக்கலாம். அக்கிருதியில் அமைந்த ஸ்வரப்ரஸ்தாரங்கள் வெகு ஜோராயிருந்தன. பல்லவி ராகமாய் எடுத்துக் கொண்ட தோடி விரிவாயும் கற்பனை நிறைந்ததாயும் கர்ணாம்ருதமாயுமிருந்தது. பல்லவியும் வெகு சாதுர்யமான லய வேலைப்பாடுகளுடன் திறம்பட விளக்கப் பட்டது. சபையோரின் வேண்டுகோளின்படி பல ருசிகரமான சில்லறை உருப்படிகளும் வாசிக்கப் பட்டன. அவற்றில் மோடி வெகு நேர்த்தியாகவும் உருக்கமாயுமிருந்தது.



காருகுறிச்சி ஸ்ரீ அருணாசலம்

இக்கக் காருகுறிச்சி சகோதரர்களின் வாத்தியத்தில், சுருதி சுத்தமும் அதி மதுரமான நாத வனப்பும் முதலில் கவனத்தைக் கவர்ந்தன. சஞ்சாரங்களில் அழகு பங்கீடும், கற்பனைப் பிடிகளில் எல்லாம் அபூர்வ லாகவ நாஸூக்கும் மனத்தை வசீகரித்தன. அவர்கள் சங்கீதத்தில் கமகம் சிறந்த அம்சமாயிருந்தது. அசாத்திய பிர்க்கா வேலைப்பாடு ஒரு புறம், வளைவுகுழைவுகள் மறுபுறம், கம்பீ இழைப்பு, அனுஸ்வரப் பெருக்கு, தாட்டுஸ்வர ப்ரயோகம் எல்லாம் பொருத்தமாய் அமைந்து அவர்களின் கானத்துக்குத் தனிபாணி யழகு கொடுத்தன. மந்தாஸ்தாயி சஞ்சாரத்தில் பலவிடங்களில் கொஞ்சிக் குலாவுவது போல் சுகம் கண்டது. மொத்தத்தில் காருகுறிச்சி சகோதரர்களின் நாதஸ்வரக் கச்சேரி அரியதோர் இசை விருந்தாய் அமைந்தது. அன்று கச்சேரிக்குத் தலைமை வகித்த கல்வி ஆசிரியர், ஸ்ரீ பெரியசாமித் தூரன், வேணுகான வித்வான் மாலி இவர்கள் ஸ்ரீ அருணாசலத்துக்கும் தவுல் வித்வான் ஸ்ரீ ராகவன் பிள்ளைக்கும் சூட்டிய புகழ்மாலை மிகப் பொருத்தமாயிருந்தது. ஸ்ரீ அருணாசலம் பத்து வயதிலிருந்து ஆறு வருஷ காலம் களக்காடு சுப்பய்யா பாகவதரிடம் முதலில் வாய்ப்பாட்டு கற்றுத் தேர்ச்சியடைந்தார். பிறகு திருவாவடுதுறைக்கு வந்து ராஜரத்தினம் பிள்ளையிடம் மூன்று ஆண்டு நாதஸ்வரம் பயின்று தேர்ச்சி பெற்று அவரது ஆப்த சிஷ்யருமானார். சுமார் பத்து வருஷங்களாகத் தனியாகக் கச்சேரி செய்து பிரபலம் பெற்று வருகிறார். இத்தகைய சிறந்த வித்வானின் உயரிய நாதஸ்வரக் கச்சேரியை ஏற்படுத்தி, சென்னை ரஸிகர்களுக்கு அரிய இன்னிசை விருந்தளித்ததற்காகக் கோபாலபுரம் சங்கீத சபையை மிகவும் பாராட்டுகிறேன்.

துளி விஷத்தில் சில துளிகள்

சாமா





அவ்வை புரடக்ஷன்ஸ், 139-B, லாயிட்ஸ் ரோடு, சென்னை-6

சிங்கச் சிலை

குண்டுமணி



2. பிரிவுத் துயரம்

மறுநாள் காலை. காலைக் கதிரவன் கருங்காட்டு மிருகங்களுக்கு ஒரு நற்செய்தியைத் தாங்கிக் கொண்டு வந்தான். கருங்காட்டு மிருகங்களுக்கு மகிழ்ச்சிப் பிரவாகம் கரை புரண்டோடக் கூடிய அந்தச் செய்திதான் என்ன? கருங்காட்டு ராணிக்கு ராஜகுமாரன் பிறந்திருக்கிறான் என்றால் அவைகளின் ஆனந்தத்துக்குக் கேட்கவா வேண்டும்? அரண்மனையில் குதூகலம் நிரம்பி வழிந்தது. சிங்க ராணிக்கு ராஜகுமாரன் பிறந்ததில் அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அருகில் சிங்க ராஜா இருக்கவில்லையே என்ற கவலையினால் அளவில்லாத வருத்தமும் தோன்றியது.

சிங்க ராஜ குமாரன் பிறந்திருக்கும் செய்தியைப் போருக்குச் சென்றிருக்கும் சிங்க ராஜாவுக்குத் தெரியப்படுத்த விரும்பியது. ராணியின் ஆசையை நிறைவேற்ற மான் தூதன் அரண்மனையிலிருந்து விரைந்து சென்றது.

மான் சந்தோஷச் செய்தியுடன் அதி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று இடி முழக்கக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றது. மானை வழி மறைத்துக் கொண்டு ஒரு பெண் சிங்கம் நின்றது. அந்தப் பெண் சிங்கம் வேறு யாருமல்ல; கருங்காட்டு மன்னன், பலாக்காட்டு ராஜகுமாரியை மணந்து கொண்டதில் கோபமடைந்த புலிக்காட்டு ராஜகுமாரியேதான்! மந்திர வித்தைகளில் கைதேர்ந்த அந்தப் புலிக்காட்டு ராஜகுமாரி அதட்டும் குரலில், "நீ யார்? எங்கே போகிறாய்?" என்று அதனிடம் வினவியது.

"நீ என்ன வழிப்பறிக் கொள்ளைக்காரியா? என்னிடம் ஒன்றுமில்லை. விட்டு விடு!" என்று கெஞ்சிக் கேட்டது மான்.

"ஓகோ! கேலியா செய்கிறாய்? உன்னை என்ன செய்வேன் தெரியுமா?" என்று மிரட்டியது புலிக்காட்டு ராஜகுமாரி.

"நான் கருங்காட்டு மன்னனின் சேவகன். எனக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் உன்னைக் கருங்காட்டு ராஜா சும்மா விடமாட்டார்!" என்றது மான்.

"அடாடா! நீ என்ன கருங் காட்டு மன்னரின் ஆளா? உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!"

"நீ வழியை விடு. அரசருக்கு முக்கியமான செய்தி கொண்டு செல்கிறேன்! சீக்கிரம் போக வேண்டும்!"

"அப்படியா? அது என்ன செய்தி? சொன்னால் உன்னை விட்டு விடுகிறேன்!" என்றது புலிக்காட்டு ராஜகுமாரி.

மானும் அதனிடமிருந்து விடுபடுவதற்காகச் சிங்கராணிக்குக் குட்டி பிறந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தது. கருங்காட்டு ராணியின் மீது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளச் சரியான சமயம் வந்து விட்டது என்று புலிக்காட்டு ராஜகுமாரி எண்ணி மகிழ்ந்தது.

மானுக்கு விடுதலையளித்து விட்டு, புலிக்காட்டு ராஜகுமாரி நேராகத் தன் குடிசையை நோக்கி விரைந்தது.

குடிசையில் தான் வளர்த்து வந்த ராட்சதப் பறவையை அழைத்து, "நீ உடனே கருங்காட்டுக்குப் போய்ச் சமயம் பார்த்துக் கருங்காட்டு ராஜகுமாரனைக் கவர்ந்து கொண்டு வந்து விட வேண்டும்!" என்று கட்டளையிட்டது.

ராட்சதப் பறவையும் தன் எசமானியின் கட்டளையை நிறைவேற்ற உடனே ஆகாயத்தில் பறந்து சென்றது.

கருங்காட்டு அரண்மனையில் சிங்க ராணியின் அருகில் சிங்கக்குட்டி விளையாடிக் கொண்டிருந்தது. ஒரு பெரிய விருட்சத்தின் அடியில் ராட்சதப் பறவை மறைந்து கொண்டு சிங்கக் குட்டியைக் கவர்ந்து செல்லச் சரியான சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தது.

அந்த நேரமும் வந்து விட்டது. சிங்கக் குட்டிக்கு ஆகாரம் எடுத்து வருவதற்காகச் சிங்க ராணி பிரிந்து சென்ற

பொழுது ராட்சதப் பறவை பறந்து வந்து சிங்கக் குட்டியை 'லபக்' என்று கௌவிக் கொண்டு வானத்தில் பறந்தது. சிங்கக் குட்டி வேற்று முகத்தைக் கண்டு 'குய்யோ முறையோ' என்று கத்தியது.



அருமைக் குட்டியின் அழுகுரலைக் கேட்டு ஓடி வந்த சிங்க ராணி ராட்சதப் பறவை வானத்தில் குட்டியுடன் பறந்து செல்வதைக் கண்டது. சிங்க ராணி பலமாகக் கத்தி ராட்சதப் பறவையைப் பயமுறுத்திப் பார்த்தது. ஆனால் வானத்தில் பறக்கும் ராட்சதப் பறவை அதற்கெல்லாம் பயந்துவிடுமா, என்ன? பெற்ற குட்டியைப் பிரிந்ததால் சிங்க ராணி அடைந்த துயரத்துக்கு அளவில்லை. சிங்க ராஜாவுக்கு இந்தத் துயரச் செய்தி தெரிந்தால் என்ன செய்யும் என்று எண்ணிப் பார்த்தது. அதை எண்ணியது தான் தாமதம்; சிங்க ராணி எப்படியாவது ராட்சதப் பறவையிடமிருந்து குட்டியை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் பாய்ந்தோடியது. அரண்மனையைக் காவல் காக்கும் புலிகள் தடுத்து நிறுத்தப் பார்த்தன. சிங்க ராணி நிற்கவில்லை. அடர்ந்த காட்டினுள் குட்டியைத் தேடித் திக்கு, திசை தெரியாமல் அலறிக் கொண்டே ஓடியது.

சிங்க ராணி ஓடிக் கொண்டேயிருந்தது. அதற்குப் பசி, தாகம் எடுக்கவில்லை. கருமமே கண்ணாகக் கல்லிலும் முள்ளிலும் விழுந்து எழுந்து சென்றது.

அரண்மனையை விட்டு ஓடி வந்த சிங்கராணி தன் குட்டியைக் காடு முழுவதும் சுற்றி யலைந்து தேடியது. எங்கு தேடியும் அகப்படவில்லை. அலுத்துப் போய் ஒரு மரத்தினடியில் போய்ப் படுக்கலாம் என்று சிங்க ராணி திரும்பிய போது ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசை வாசலில் தன் அருமைக் குட்டி குதித்து விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

சிங்க ராணி அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. களைத்துப் போயிருந்த சிங்க ராணிக்குத் தன் குட்டியைக் கண்டதும் ஊக்கமும் உணர்வும் மிகுந்தது. அதை நோக்கி விரைவாக ஓடியது. (தொடரும்)

மற்றும் ஒரு சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா...

Glaxo

கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்



இவை உலகப்பிரசித்தி பெற்ற பாலுணவான கிளாக்ஸோ வின் புஷ்டியான போஷாக்கு சத்து முழுவதும் அடங்கி யிருக்கும்படி தயாரிக்கப்பட்டு, உபரிவிடமின்களும் சேர்க்கப் பட்டவை.

சிறந்த பிஸ்கோத்துகள்

பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX-11 TM

வீரப்பன் நல்லவன்



டி. எஸ். கோதண்டராமன்

சிறைக் காவலர், "ஏய், ஐம்பத்தியேழு" என்று அழைத்ததும் கைதி வீரப்பன் ஓடி வந்து அவர் முன் நின்றுன்.

"உன் பேருக்கு ஒரு கடிதாசு வந்திருக்கு."

"கடிதாசா?"

"ஆமாமப்பா, ஆமாம். கடிதாசி!..."

"எனக்கா?"

"அட, நீ என்னப்பா, மயக்கம் போட்டு விழுந்திடுவே போலிருக்கே! உனக்கே தானப்பா, கடிதாசி! இந்தா......"

குழம்பிய மனத்துடன் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட வீரப்பன், கடிதத்தில் எழுதப் பட்டிருந்த நாலைந்து வரிகளில் கண்ணேட்டத்தைச் செலுத்தினுன்.

"வீரப்பனுக்கு.

நாளையதினம் விடுதலையானதும் உடனே என் இருப்பிடத்துக்கு வா. உன்னைக் காண வேண்டுமென்று நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

சதாசிவம் பிள்ளை,
ரிடையர்டு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர்."

கடிதத்தைப் படித்து முடித்த வீரப்பன் பற்களை நறநறவென்று கடித்தான். கையிலிருந்த கடிதம் கசக்கப்பட்டு அறையின் மூலையில் அடைக்கலம் புகுந்தது.

"சதாசிவம் பிள்ளை! நீர் என்னைக் காணத் துடித்துக் கொண்டிருக்கிறீர்! இல்லையா?... ஹஹ் ஹஹ ஹா... கவலைப்படாதீர். கட்டாயம் உம்மைப் பார்க்கிறேன். சிறையிலிருந்து வெளியே வந்ததும் என்னுடைய முதல் வேலையே அதுதானே!" என்று தனக்குள் வீரப்பன் பேசிக் கொண்டான்.

** ** **

அறைக் கதவு மெல்லத் திறக்கப்படுவதை அறிந்ததும், மேஜையடியில் உட்கார்ந்து கொண்டு கடிதம் எழுதிக் கொண்டிருந்த மாஜி ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் சதாசிவம் பிள்ளை தலையை நிமிர்த்தினுர். இரண்டு வருடங்களுக்கு முன் அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் பல தரப்பட்ட புத்தகங்களைப் படிப்பதில் தம்முடைய காலத்தைக் கழித்து வந்தார் அவர்.

"வீரப்பா!......"

பிள்ளையின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்து அவர், பயந்து விட்டாரா, ஆச்சரியப் படுகிறுரா அல்லது வரவேற்கிறுரா என்றே வீரப்பனால் சிறிதும் புரிந்து கொள்ள முடியவில்லை.

அறையின் கதவை உட்புறமாகத் தாழிட்டு விட்டு அடிமேல் அடி வைத்து மேஜை அருகே வந்தான் வீரப்பன்.

"வா, வீரப்பா. உன்னைத்தான் எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். விடுதலை ஆன அன்றைய தினமே வருவாய் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். இரண்டு நாட்களாக நீ எங்கே சுற்றிக் கொண்டிருந்தாய்?"

வீரப்பனின் தீட்சண்யமான கண்கள் சதாசிவம் பிள்ளையை ஊடுருவிக்கொண்டிருந்தன.

"...சதாசிவம் பிள்ளை!..."

சதாசிவம் பிள்ளையைத் தவிர வேறு யாராக வேனும் இருந்திருந்தால், அந்தக் குரலிலிருந்த கொடுமையும் அலட்சியத்தையும் கண்டு நிச்சயம் நடுங்கி யிருப்பார்கள்.

"நான் ஒன்றும் ஏமாந்த சோணகிரியல்ல. உங்கள் கையில் மறுபடியும் அகப்பட்டுக் கொள்வதற்கு!"

"வீரப்பா, என்னைத் தவருக எடுத்துக் கொண்டு விட்டாய். சற்று அமைதியாக உட்கார்ந்து நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேள்..." என்று பொறுமையாகச் சொன்னுர் பிள்ளை.

"ஆகா! உம்முடைய தந்திரம் எனக்குத் தெரியும். விடுதலையானதும் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ள எப்படியும் உம்மைத் தேடி வருவேன் என்பதைப் புரிந்து கொண்டீர். உம் கடிதத்தைக் கண்டதும் விடுதலையான அன்றே ஓடி வந்து, ஆத்திரத்தில் தகாத காரியத்தைச் செய்யப் போய், அறைக்கு வெளியே தயாராகக் காத்திருக்கும் போலீஸாரிடம் சிக்கி, மறுபடியும் சிறையில் அடைபட்டு, வாழ்நாள் முழுதும் வெளியே வர முடியாமல் தவிப்பேன் என்று பலவிதமாகக் கற்பனைசெய்துபார்த்திருப்பீர்! ஆனுல், உம் தந்திரத்தைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நான் வடிகட்டின முட்டாளல்ல! அதனுல் தான் வீட்டில் வேறு யாரும் இல்லாத சமயம் பார்த்து வந்திருக்கிறேன்."

"வீரப்பா, இதெல்லாம் என்ன வீண் பேச்சு? நான் உன்னைப் பார்க்க விரும்பியதற்குக் காரணம் வேறு. எனக்கு உன் உதவி இப்போது அவசியம் தேவை..."

"என்னுடைய உதவியா?...உங்களுக்கா... ஹஹ்ஹா......நல்ல வேடிக்கை இது, சதாசிவம் பிள்ளை! சரி, நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். ஆனுல், ஒரே ஒரு உதவி தான் செய்ய முடியும். அதுவும் எப்படிப்பட்ட உதவி தெரியுமா?... நீங்கள் உடனடியாக எமலோகம் போக வேண்டுமென்று விரும்

பினால் நான் முழு உதவியும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்! ஹஹ்ஹா...ஹா."

வீரப்பன் சதாசிவம் பிள்ளையின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். பீதியினால் அவலட்சணமாக மாற வேண்டிய பிள்ளையின் முகத்தில் புன்னகை உண்டாவதைக் கண்டு அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. சதாசிவம் பிள்ளைக்கு அவ்வளவு தைரியமா?

"வீரப்பா, உனக்கு நான் எவ்விதத்தில் நன்றி கூறப் போகிறேன்! என் உள்ளத்தில் இருப்பதை எப்படியோ நீ அறிந்து கொண்டு விட்டாய்! இந்தா, இந்தா..." என்று கூறியபடியே, மேஜையின் டிராயரைத் திறந்தார் சதாசிவம் பிள்ளை. ஒரு சிறிய கைத்துப்பாக்கியை எடுத்து வீரப்பனிடம் நீட்டினார்.

"இதை வாங்கிக் கொள் வீரப்பா. இந்த உதவிக்காகத் தான் நான் உன்னை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்."

அயர்ந்து போய் நின்ற வீரப்பனின் கண்கள் சில கணங்களில் செம்பிழம்பாகச் சிவந்தன.

"பிள்ளைவாள், உங்கள் சூழ்ச்சியை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களைக் கொலை செய்த குற்றத்தை வேறு என் தலையில் சுமத்தி, சிறையில் தள்ளி விடலாம் என்று கனவு காண்கிறீர்கள். இல்லையா? ... இனி தப்பித்துக் கொள்வதற்கு வழியில்லை என்று தெரிந்ததும் உங்கள் மூளை அபூர்வமான யோசனைகளை யெல்லாம் சுடுபடுகிறது!..."

"பதறாதே, வீரப்பா. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைச் சுட்டுக் கொன்று விடு. ஆமாம். உன்னை எவரும் சந்தேகிக்க முடியாது. உன் கையிலிருப்பது என் துப்பாக்கியல்லவா? உனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்பட வில்லையானால், நானே சுட்டுக் கொண்டு விட்டதாகக் கடிதம் எழுதி வைத்து விடுகிறேன். சரி தானே?"

வீரப்பனின் மூச்சு இரைந்தது. சதாசிவம் பிள்ளை கடிதம் எழுதுவதைச் செயலிழந்த அவன் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன.

"வயிற்றுவலி தாங்காததால் நானே சுட்டுக் கொண்டு விட்டேன். என் மரணத்துக்கு வேறு யாரும் காரணமல்ல. சதாசிவம் பிள்ளை"

கடிதத்தை எழுதி முடித்து விட்டு வீரப்பனிடம் நீட்டினார், பிள்ளை.

வீரப்பன் தலையைத் தாழ்த்தி, கையிலிருந்த துப்பாக்கியைப் பார்த்தான்.

"என்ன வீரப்பா, பார்க்கிறாய்? சீக்கிரம் என்னைச் சுட்டு விடு! என் மன வேதனையை என்னால் தாங்க முடியவில்லை, வீரப்பா! உனக்கு மகத்தான அநீதியைச் செய்து விட்டதை உணர்ந்து கொண்ட என் மனம் புழுப் போலத் துடித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு விடுதலை உன் கையிலிருக்கும் துப்பாக்கியில் தான் இருக்கிறது!"

சடாரென்று வீரப்பன் தலையைத் தூக்கினான். "எனக்கு அநீதி செய்து விட்டீர்களா?"

"ஆம், வீரப்பா, ஆம். உனக்கு அநீதி இழைத்து விட்டேன்! அதன் பயனாக நான் படும் வேதனையை அளவிட்டுக் கூற முடியாது. வீரப்பா! மன வேதனை என் இதயத்தைச் செல்லரித்து விட்டது. உன்னைக் கண்டு, உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பின் உயிரை விட வேண்டுமென்று தான் உயிரை உடலில் வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் பிள்ளை.

"........."

"நீ செய்த குற்றத்துக்கு ஐந்து வருஷ சிறைவாசம் கொடுத்தாரல்லவா நீதிபதி? அதை ஏழு வருஷக் கடுங்காவலாக உயர்த்த வேண்டுமென்று அப்பீலில் பலமாக வாதாடியது நான் தான்! ஏன் அப்படி வாதாடினேன் என்று கேட்காதே. உன்மேல்



வேலை தேடித் தரும் ஸ்தாபனம்

நாங்கள் நாலைந்து மாணவர்கள் இன்று தஞ்சையில் உள்ள "வேலை தேடித் தரும் ஸ்தாபனத்துக்கு" ரயில்வே விண்ணப்ப மனு பெற்று வருவதற்காகச் சென்றோம்.

அங்கு எங்கள் மாதிரி பல பிரேஜிதர்கள் சுமார் 50 பேர் ரயில்வே விண்ணப்ப மனுப் பெற வந்திருந்தார்கள். மணி 12க்கு மேல் தான் விண்ணப்ப மனு கொடுக்கப் போவதாக விசாரிக்கும் குமாஸ்தா' மூலம் அறிந்தோம். மணி 12 வரை காத்திருந்தோம். மேலும் பத்து நிமிஷங்கள் காத்து இருந்தோம். மறு முறை போய் மிகுந்த மரியாதையுடன் கேட்டதற்குச் சள்ளென்று விழுந்தார். பிறகு அவர்களாகவே மணி 12-15க்குக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

பின் அந்த விசாரணைக் குமாஸ்தா காரியாலய வேலைக்காரர் மூலமாக எங்களை விரட்டி, "'க்யூ' வில் நின்றுலொழிய மனுவைக் கொடுக்க மாட்டேன்" என்றார். நாங்கள் அதற்கும் பணிந்து 'க்யூ' வில் நின்றோம். காலையில் ஒன்பது மணியிலிருந்து பசியைப் பொறுத்துக் கொண்டிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டோம். மனுக்களைப் பெற்றுக் கொண்டதும் அல்லாமல் அங்குள்ள குமாஸ்தாக்களின் அர்த்தமற்ற கோபத்தையும் சாபத்தையும் பெற்றுக் கொண்டோம்.

நம் நாடு காந்தீயத்தைப் பின்பற்றும் நாடு. சாந்தமும் அன்பும் குடி கொண்ட நாடு. வேலையில்லாமல் தவிக்கும் எங்களுக்கு இம்மாதிரியான குமாஸ்தாக்களின் சாபமும், அந்த ஸ்தாபனத்தின் வேலைக்காரரால் நாங்கள் நாய் போல விரட்டப் படுவதும், சாந்தமும், அன்பும் குடி கொண்ட பாரத நாட்டிலே தான்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்தான் முன்பு லஞ்சப் பேய் தலை விரித்தாடிக் கொண்டிருந்தது. பிரதமர் ராஜாஜி அவர்களின் காலத்தில் இருந்த இடம் தெரியாமலிருந்து மறுபடியும் அது தலை விரித்தாடத் தொடங்கி விட்டது. முக்கியமாக மத்திய சர்க்காரினால் நடத்தப்பட்டு வரும் ஸ்தாபனங்களில் முதன்மையாக விளங்குவது இந்த வேலை தேடித் தரும் காரியாலயத்தில்தான்.

மேலும் இந்த ஸ்தாபனத்தில் அதிகாரி அவர்களே மேல் பாராவில் குறிப்பிட்ட மாதிரி இருக்கிறார் என்றால் அவரிடம் வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள், வேலைக்காரர்கள் எப்படி இருப்பார்கள் என்று தாங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

வேலையற்று இருக்கும் எங்கள் சமூகத்துக்கு ஆறுதல் கூற இம்மாதிரி ஸ்தாபனங்களில் உயர்தர உத்தியோகஸ்தர்களும் பொறுமையுள்ள குமாஸ்தாக்களும் தேவை என்பதை மேலதிகாரிகள் உணர வேண்டும். இம்மாதிரி இந்த ஸ்தாபனங்களில் நடை பெறும் காரியங்களுக்கு அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பதுடன் அல்லாமல் தஞ்சையிலேயே நீண்ட காலமாக இருந்து வரும் குமாஸ்தாக்களையும் வேலைக்காரர்களையும் மாற்றினால்தான் மேற்படி காரியாலயத்தினால் என் போன்ற வேலையில்லாமல் திண்டாடும் சகோதர, சகோதரிகளுக்கு நலம் உண்டாகும்.

தஞ்சாவூர்
23-6-54

ஆர். வெங்கட்ராமன்

எனக்கிருந்த வெறுப்பும் கோபமும் காரணமாக இருக்கலாம்...வீரப்பா, என்னுடைய முப்பது வருஷ உத்தியோகத்தில் நூற்றுக் கணக்கான வழக்குகளை நான் நடத்தியிருக்கிறேன். ஆனால், அவைகள் ஒன்றிலாவது நான் அநியாயமாக எவருக்கும் தண்டனை வாங்கிக் கொடுத்ததாக எனக்கு ஞாபகமே இல்லை. உனக்கு நான் செய்தது பெரிய அநியாயம். அந்த அநியாயத்தை என் மனம் பொறுக்க வில்லை; வேதனையால் வெந்து சாம்பலாகிக் கொண்டிருக்கிறது. எனக்கு விடுதலை தா என்று நான் உன்னைக் கேட்கிறேன் வீரப்பா. அது மட்டுமல்ல; உன்னைக் கண்டு நான் பொறாமைப்படுகிறேன், வீரப்பா!"

சிலை போல நின்று கொண்டு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த வீரப்பன் உயிர் பெற்று விட்டவனைப் போலத் தலையைப் பலமாக அசைத்தான்.

"ஆமாம், நான் பொறாமைப் படுகிறேன்! ஏன் தெரியுமா? நீ செய்த குற்றங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. நாவால் சொல்லக் கூசும்படியான பல குற்றங்களையும் நீ செய்திருக்கிறாய். அப்படியிருந்தும், மனம் கலங்காமல், நெஞ்சம் பதைக்காமல், அறிவு சிதையாமல் நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்! ஆனால் வீரப்பா, உன் ஒருவனுக்கு மட்டும் நான் செய்த ஒரே ஒரு குற்றம் என் உள்ளத்தை வறுத்தெடுக்கிறது."

கடைசி வாக்கியத்தைச் சொல்லும் போது சதாசிவம் பிள்ளையின் குரல் கம்மியது. அவர் கண்களில் நீர் சுரந்தது. முழங்கையை மேஜையில் ஊன்றி, உள்ளங் கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டார். மார்கழி மாதத்தில் விடியற் காலையில் எழுந்து விட்டவரைப் போல அவருடைய கீழ் உதடு லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

"உன் பழைய சரித்திரத்தை நீ மறந்திருக்க மாட்டாய், வீரப்பா. மறந்திருந்தாலும் இப்போது ஞாபகத்துக்குக் கொண்டு வா. கல்பகனூர் மிட்டாதாரின் அந்தரங்கக் கையாளாக இருந்த அந்தக் காலத்தில்......"

வீரப்பனின் மனத்தில் நினைவுச் சித்திரங்கள் கோவையாகத் தோன்றி எழலாயின. பிள்ளை ஆரம்பித்தார்:

"மிட்டாதாரின் தோட்டத்தில் வேலை செய்து வந்த சோமுவின் மகள் வள்ளி உன் எஜமானனின் ஈனத்தமான விருப்பத்துக்கு இணங்காததால், அவனுடைய குடிசைக்கு நடு இரவில் தீ வைத்து விட்டு, குடிசை வெந்து சாம்பலாகும் வரை வேடிக்கை பார்த்தாயே, வீரப்பா, உனக்கு ஞாபகம் இருக்கிறதா?......"

ஆக்ரோஷத்துடன் இரண்டு கைகளையும் குலுக்கினான் வீரப்பன். சோமுவின் குடிசையைக் கபளீகரம் செய்த தீ, அவன் இதயத்தைச் சூழ்ந்து கொண்டது.

"பாவம், சோமு! 'குடிசை தீப்பிடித்துக் கொண்டது தற்செயலான சம்பவம் அல்ல.

மிட்டாதாரின் சதிதான்' என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை பெண்டாட்டி பிள்ளைகளை நடுத் தெருவிலே நிற்க வைத்துக் கொண்டு, கதியற்றுக் கிடந்த சோமுவைப் பார்த்து நீ கொக்கரித்தாய். மிட்டாதாரின் இஷ்டத்துக்கு இணங்கினால் புதிய குடிசை போட்டுத் தரச் சொல்லுவதாக ஆசை காட்டினாய். ஆனால் மானமுள்ள அவன் பட்டணத்திலே வேலை தேடப் போய் விட்டான்."

"பின்னை, எனக்கு இந்தப் பழங்கதை யெல்லாம் தேவை யில்லை..." என்று கத்தினான் வீரப்பன்.

"பொறு, வீரப்பா. இத்தகைய பாதகத்தைச் செய்த நீ மனம் கலங்காது வாழ்கிறாய்! உன் மனத் திண்மையை வாழ்த்துகிறேன். என் மனம் மிகவும் பலவீனமானது, வீரப்பா! உனக்குச் செய்த அநீதியைக் கூடத் தாங்க மறுக்கிறது. அது போகட்டும், முத்துப் பண்டாரத்தின் மகனைக் கொன்றாயே, ஞாபகம் இருக்கிறதா?..."

'இது இவருக்கு எப்படித் தெரிந்தது?' என்ற ஆச்சரியத்தில் வாயைப் பிளந்துநின்றான் வீரப்பன்.

"முத்துப் பண்டாரத்துக்கு இருந்த தெல்லாம் பத்து மாநிலமும் ஒரே ஒரு பிள்ளையும் தான். அவனுடைய துரதிருஷ்டம், அந்தப் பத்து மாநிலமும் ஒரே 'தாக்'காக வாய்க்காலுக்குப் பக்கத்திலேயே இருந்தது. அவன் நிலத்தை ஒட்டினாற்போல், உன் எஜமானனின் வயல். ஏதோ நொண்டிச் சாக்கைச் சொல்லி, நீர்த் தகராறை ஆரம்பித்தார் மிட்டாதார். அவருடைய தொந்தரவு பொறுக்காமலாவது, அந்தப் பத்து மாநிலத்தையும் பண்டாரம் விற்றுவிட மாட்டானா என்ற நினைப்பு மிட்டாதாருக்கு. ஆனால், பண்டாரத்துக்கு நிலத்தை விற்க மனமில்லை. அது, அவனுடைய பாட்டன் காலத்திலிருந்தே அவன் குடும்பத்துக்குச் சொந்தமானது. பிதுரார்ஜிதமல்லவா? விற்பதற்கு அவனுக்கு எப்படி மனம் வரும்?"

சிறு குழந்தையைப் போல, கதையைக் கேட்டுக் கொண்டிருந்தான் வீரப்பன்.

"ஒரு நாள். முத்துப் பண்டாரத்தைக் கண்டபடி ஏசி விட்டார் மிட்டாதார். வீட்டுக்கு வந்த பண்டாரம், தன் மகனிடம் இதைக் கூறி வருத்தப்பட்டுக் கொண்டார். மகன் தங்கவேலுக்கு இளம் வயது. மனசு பொறுக்கவில்லை, அவனுக்கு. 'தன் தகப்பனாரை மமதை காரணமாக ஒருவன் ஏசுவதா?' என்று கொதித்தான். நேராக, வயற்காட்டுக்கு வந்து, தன் நிலத்தைத் தாண்டி மிட்டாதார் நிலத்துக்குத் தண்ணீர்

இந்த வாழ்வு எத்தனை நாளோ?

ரா. கோபாலன்

எஸ்.எஸ்.எல்.சி. படிச்சாச்சு!
எங்கெங்கேயோ தேடியாச்சு!

எவரும் வேலை கொடுக்கவில்லையே-இறைவனே!
எனக்கு ஒண்ணும் புரியவில்லையே.

பஸ்டிக்கட் கொடுக்கும் வேலை
பார்த்து எழுதும் கிளார்க்கு வேலை
பணத்தை எண்ணும் கணக்கு வேலையும்—
கொடுத்திட்டால்
பாங்காகச் செய்திடுவேனே.

எத்தனைபேர் காலில் விழுந்தேன்
எண்ணி யெண்ணித் தொலையாது
எவரும் கண்ணெடுத்துப் பார்க்கலே
என்னஎழுத்து எழுதி வச்சயோ!

சித்தம் கலங்கி நின்றபோது
சீறிவிழும்பேர் எத்தனையோ
அத்தனையும் பொறுத்து நின்றேனே
அதற்கேனும் வேலை கிட்டாதோ!

ரெயில் வேலைக்கு அப்ளிகேஷன்
ரெண்டு ரெண்டாப் போட்டுவச்சேன்
மெயிலில் தபால் போகவில்லையோ-என்னவோ
செய்தி ஒண்ணும் தெரியவில்லையே!

போஸ்டாபீஸில் வேலையென்றார்
போட்டு வச்சேன் மூணுமனு
போஸ்டை எதிர் பார்த்துநிற்கிறேன்-தினம்தினம்
பொங்கிப் பொங்கிக் குமுறுதுமனம்.

அண்ணன் வீட்டில் ரெண்டுமாதம்
அக்கா வீட்டில் ஆறுமாதம்
உண்ணும்சோற்றுக்காக யிருந்திட்டேன்-ஐயனே!
யார் மனசும் இரங்கவில்லையே!

தண்டச்சோற்றுத் தடியன் என்று
தகப்பன் தாயும் ஏசுகிறார்
கண்ட கண்ட பேர்களிடத்தே-என்னைப்பற்றிக்
கண்யமின்றித் தூற்றுகின்றாரே.

போகாதபடி மடையை நன்றாய் அடைத்து விட்டான். மறுநாள் காலையில்தான் மிட்டாதாருக்கு அந்த விஷயம் தெரிய வந்தது.

"அன்று இரவு. முன்னிருட்டுக் காலம். வயற் காட்டைச் சுற்றிவிட்டு, தங்கவேலு ஆற்றங்கரை மேட்டிலே தனியாக வந்து கொண்டிருந்தான். குளுகுளு வென்று தென்றல் வீசியது. சொந்த நிலத்தை உழுது விட்டு வந்த சந்தோஷம் வேறு! ஏதோ ஒரு ஏற்றப் பாட்டின் முதல் அடியை அவன் வாய் பண்ணிசைத்துக் கொண்டிருந்தது. அவனுக்குப் பின்னால் வந்த ஒரு உருவம், ஒரு நீண்ட கழியால் அவன் மண்டையில் ஓங்கி அடித்து விட்டு இருளில் மறைந்து விட்டது. 'ஐயோ, அப்பா' என்று அலறியபடியே தங்கவேலு கீழே விழுந்தான்.

"இரவு வெகு நேரமாகியும் மகன் வராததைக் கண்ட முத்துப் பண்டாரம், நாகப்பனை வெளியே அனுப்பினார். அவன் வந்து சொன்ன அந்தத் துயரச் செய்தி......!

"மறுநாள் காலையில், ஒன்றுமே தெரியாதவன் போலக் கிழவனிடம் நீ ஓடினாய். கண்ணால் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாய். பண்டாரத்துக்கு நீ ஆறுதல் கூறினாய், வீரப்பா, நீ ஆறுதல் கூறினாய்! அந்த மன வலிமை எனக்கு இல்லை, வீரப்பா. அதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன்.

"நீ செய்த குற்றத்துக்காக நீதிபதியளித்த தண்டனையை இரண்டு வருஷம் அதிகமாக்கி விட்டேன். ஐந்து வருஷ சாதாரண சிறைவாசத்தோடு உன்னை நான் விட்டிருக்கலாமே? அப்படிச் செய்யவில்லை நான். அதிகப்படியாக இரண்டு வருஷம் நீ சிறையில் வாட விரும்பியது. என் மனம் அதற்காக என்னை மன்னித்துவிடு, வீரப்பா..."

வீரப்பனால் நிற்க முடியவில்லை. கால்கள் வலுவிழந்து விட்டதைப் போல் இலேசாக ஆடின. அவன் முகத்தைக் கப்பியிருந்த கோபம் மறைந்து, சோகம் படர்ந்திருந்தது.

"இன்னொரு சம்பவம் உன் ஞாபகத்துக்கு வருகிறதா, வீரப்பா? உன் மிட்டாதாரிடம் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்பட்ட ராகப் படையாச்சியின் உடைமைகளை அநியாயமாகப் பறித்துக் கொண்டாயே? கர்ப்பமாயிருந்த அவன் மனைவியையும் அவனையும் ஓட்டாண்டி யாக்கி, வீட்டை விட்டுத் துரத்தினீர்களே?"

வீரப்பன் கூவினான்: "பிள்ளை!"—அவன் உள்ளத்தை உருக்கி எடுத்த வார்த்தை அது!

அவன் கையிலிருந்த துப்பாக்கி நழுவிக் கீழே விழுந்தது. திடுக்கிட்டு விட்டவர் போலச் சதாசிவம் பிள்ளை பரபரப்புடன் நாற்காலியிலிருந்து எழுந்தார்.

"வீரப்பா, உன் கண்களிலே கண்ணீரா?"

வீரப்பன் பேசவில்லை. அவன் மனத்துக்கும் சிந்திக்கும் சக்தி இருந்தது.

அப்பப்பா! எப்படிப்பட்ட குற்றங்களை, அநீதிகளை, அக்கிரமங்களை அவன் செய்திருக்கிறான்? எல்லாக் குற்றங்களிலிருந்தும் தப்பித்துக் கொண்டே அவன் வந்து விட்டான்! கடைசியில், எக்கச்சக்கமாக, ஒரு குற்றத்தில் மாட்டிக் கொண்டு விட்டான்.

அவனாகவா மாட்டிக் கொண்டான்?

இல்லை, இல்லை. தம் அந்தஸ்துக்கு ஆபத்து என்று அறிந்ததும் மிட்டாதார் அவனை மாட்ட வைத்து விட்டார்! வழக்கை விசாரித்த நீதிபதி அவனுக்கு ஐந்து வருஷ தண்டனையை அதிகப்படுத்த வேண்டுமென ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் சதாசிவம் பிள்ளைதான் அப்பீல் செய்து வாதாடினார். பிள்ளையின் பேரில் நீதிபதிக்கு நம்பிக்கையும் மரியாதையும் உண்டு. ஆகவே, தண்டனையை ஏழு வருஷக் கடுங்காவல் ஆக்கினார்.

கைதிக் கூண்டிலிருந்து இறங்கும்போது சதாசிவம் பிள்ளையை வீரப்பன் பார்த்த பார்வை! "இரும், இரும். வெளியே வந்ததும் உம்மை ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்ற சபதம் அவனுடைய கண் வீச்சில் இருந்தது.

ஆனால்?......

சதாசிவம் பிள்ளையின் பேரில் குற்றமேயில்லை. தம் கடமையைத்தான் நிறைவேற்றினார் அவர். அப்படியிருந்தும் தாம் அநீதி இழைத்து விட்டதாகக் கூறி, வீரப்பனைத் தமக்குத் தண்டனை யளிக்கச் சொல்கிறார். அதுவும் எவ்வளவு கடுமையான தண்டனை!

தன் கடமையைச் செய்வதில் சற்றுக் கடுமையாக இருந்ததற்கே இத்தகைய தண்டனை இந்த உலகத்திலேயே கிடையாதே!

அப்படியானால், அவன் மகா பாபியல்லவா? இவ்வளவு மட்டமான மனிதனாகவா அவன் வாழ்ந்து விட்டான்?

சதாசிவம் பிள்ளைதான் எவ்வளவு நல்லவர்!

பாவி வீரப்பனுக்கு மன்னிப்பே கிடையாதா? அவன் குற்றங்களுக்குப் பிராயச்சித்தமே இல்லையா?

"பிள்ளை, என்னை மன்னித்து விடுங்கள்..."

"உன்னை நான் மன்னிப்பதா? விளையாடாதே, வீரப்பா. இதோ, துப்பாக்கி. என்னைச் சுட்டுக் கொன்று விடு. என் மனம் என்னை வதைத்துக் கொண்டேயிருக்கிறது. உனக்கு நான் இழைத்து விட்ட அநீதிக்கு ஏற்ற தண்டனை சாவு ஒன்றுதான். நீ செய்த குற்றங்களுக்கெல்லாம் சேர்ந்து உனக்கு ஐம்பது வருஷக் கடுங்காவல் தண்டனை கொடுத்தால் கூடப் போதாது. அந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ளும் திடம் உன் மனசுக்கு உண்டு. என்னால் முடியாது, வீரப்பா."

வீரப்பனின் இதயத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடந்த ஒரு ஜீவ ஒளி அவனுள் படரத் தொடங்கியது. நடுங்கும் குரலில் வார்த்தைகள் வெளியே வந்தன.

"பிள்ளை, இனிமேல் நான் வீரப்பன் இல்லை; நல்லப்பன்!"

அடுத்த கணம், அறைக் கதவைத் திறந்து கொண்டு வீரப்பன் வெளியே செல்வதைக் கண்டு திகைத்து நின்றார் சதாசிவம் பிள்ளை.


மைசூர் பாகு
டால்டா சமையல் புத்தகத்தில்
தரப்பட்டுள்ள 300 ருசிமிக்க தின்பண்டங்களில் இது ஒன்று.
இப்புத்தகம் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, வங்காளி என்ற பாஷைகளில் கிடைக்கிறது. இதில் 300 செய்முறைக் குறிப்புகள், பல படங்கள், சமையல், ஊட்டம், இவைகளைப் பற்றிய குறிப்புகள் முதலியவை அடங்கியுள்ளன.
விலை ரூபாய் இரண்டு தான்
தபால் செலவு அணா 12 தனி.
உங்கள் பிரதிக்கு இன்றே பணம் அனுப்புங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1.
இதில் வட இந்தியா, குஜராத், மஹாராஷ்டிரா, தென் இந்தியா, வங்காளம், ஐரோப்பா முதலான பிரதேசங்களைச் சேர்ந்த பல தின்பண்டங்களின் செய்முறைக் குறிப்புகள் உள்ளன.
HVM. 221-X25 TM


ஒரு விநாடி கூட கவலை வேண்டாம்
அவன் லாக்டோஜென் அருந்துவதால்—ஏனெனில் தாய்ப்பாலுக்கு ஈடாக இருக்க விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது அது.
நம்புங்கள்
LACTOGEN
தாய்ப்பால் இல்லாதபோது
இலவச லாக்டோஜென் போல்டர் பெற இக்கூப்பனை எழுதி தபாலில் இவ்விலாசத்துக்கு அனுப்புக.
நெஸ்லீஸ் ப்ராடக்ட்ஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி 396, கல்கத்தா.
பெயர் ....
விலாசம் ....
LG/G9

சங்கரனின் கல்யாணம்

பீஷ்மன்



தோட்டத்தில் இருவாட்சி மலர்ந்து மணத்தது. அதன் மெல்லிய சுகந்தம் அறையில் பரவிவருகையில் அவன் கண் விழித்துக் கொண்டிருந்தான். கனவுக் குமைப்பிலிருந்து விடுபட்டுச் சோம்பல் முறித்தவாறு தலையணையில் சாய்ந்தான்.

"சங்கரா, இன்னும் எழுந்த பாடில்லையா!" என்று கேட்டவாறே அறை வாசற்படியில் அவன் அத்தை, பளிச்சென ஒளி வீசும் குங்குமப் பொட்டுடன், கோதி முடித்த கூந்தலுடன் லட்சுமீகரமாய் வந்து நின்றாள். அவள் ஒளி அவன் கண்களைக் கூசச் செய்தது.

இடுப்பு வரையில் இழுத்து மூடியிருந்த போர்வையைக் காலாலேயே உதறி வெறிந்து விட்டுக் கைகளை உயர்த்திச் சொடுக்கிக் கொண்டு, ஆடி அசைந்து எழுந்திருந்தான். அவன் நடையிலே இன்னும் 'தூக்கம்' கலையவில்லை. படுக்கையை வாரிச் சுருட்டிச் சலவைத் தொழிலாளிக்குத் துணிகளைக் குவித்துப் போடுவதுபோல, கட்டிலின் மூலையில் புரட்டி விட்டுப் புறப்பட்டான்.

அத்தை சிரித்தாள்.

"நல்ல பிள்ளையடா, நீ!"

அவனும் சிரித்துக் கொண்டே நடந்து அவளைத் தாண்டி உள்ளே போனான்.

கிணற்றடியில் தயாராய்க் கையில் பல் பொடியுடன் அவன் வருகையை எதிர் நோக்கியது போல நின்றாள் அவன் அத்தை மகள் சியாமளா. காணாமும் ஏதோ இனந் தெரியாத மகிழ்வும் அலை மோதும் அவள் முகத்தில் ஏதோ ஏக்கத்தின் சாயையும் ஒன்டியிருப்பதை, தூக்கக் கலக்கத்திலும்கூட அவனால் காண முடிந்தது.

"காப்பி ஆறிக் குளிர்ந்து போயிருக்கப் போறது!" என்றாள் அவள்.

பல்லைத் தேய்த்துக் கொண்டே அசுவாரஸ்யமாய் 'உம்' என்று முனகினான் அவன்.

முகம் கழுவிக் கொண்டு அவன் நிமிர்ந்த போதும் வாசற்படி அருகில்தான் சியாமளா நின்றாள். அவள் கையில் வெள்ளை வெளேரென்று சுத்தமான துண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

"இதோ!" — அவன் தேவையை நன்றாக உணர்ந்தவள் போல் அவளாகவே அந்தத் துண்டை அவனிடம் நீட்டினாள்.

முகத்தைத் துடைத்துக் கொள்கையில் அவளிடமிருந்து உறக்கச் சோர்வு விடுபட்டதும் அவன் மனத்தில் சரசர வென ஏதேதோ எண்ணங்கள் வேகமாய்ப் புரண்டன.

'என்னிடம் அப்படி என்ன அன்பு இவர்களுக்கு எல்லாம்! ஏன் இந்தப் பரிவு!'

அவனுக்கு இவை ஏனோ ஆச்சரியமாகத்தான் இருந்தன. அவன் பத்து வயதுச் சிறுவனாயிருக்கும் போது அத்தையைப் பார்த்ததுதான். அதற்குப் பின் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு நேற்றுத்தான் அவர்களைப் பார்த்திருக்கிறான். அப்படியிருந்தும் எத்தனையோ ஆண்டுகளாக ஒன்றிப் பழகியது போல் நேசமாகவும் ஆதரமாகவும் அவர்கள் நடந்து கொள்வது அவன் வரைக்கும் விநோதமாகத்தான் இருந்தது. இந்தச் சியாமளாவுக்கு அவனை நினைவுகூட இருந்திருக்க முடியாது. கடைசியாக அவளை அவன் பார்த்த போது அவளுக்கு ஏழெட்டு வயதிருந்திருக்கும். ஒரு கௌனைப் போட்டுக் கொண்டு சதா அழும் ஒரு சின்னஞ் சிறு உருவம் அவன் மனக் கண் முன் தோன்றி மறைந்தது. அந்தச் சியாமளா என்னடா என்றால்...

"இன்னும் தூக்கம் கலையலையா, என்ன! காப்பியைக் கீழே கொட்டி விட்டீர்களே!"

அவன் அப்பொழுதுதான் அதைக் கவனித்தான். யோசனையின் அழுத்தத்தில் சிக்கியவாறே டம்ளரில் இருந்த காப்பியை டம்ளரில் விட்டு ஆற்றுவதற்குப் பதில் தரையில் விட்டே ஆற்றி விட்டான்!

"பரவாயில்லை. வேறே கொண்டு வரேன்!"

அவன் எழுந்து அசட்டுச் சிரிப்புடன் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தான்.

"சின்ன வயசிலெல்லாம் கலகலன்னு எத்தனை அரட்டையடிப்பே! இப்போ ஒரே மௌனியாய்ப் போயிட்டியேடா! அதிசயம்தான், போ!"

"இரண்டு நாளா சரியா ரயிலிலே தூக்கமே இல்லையா! நேற்று இரவு அப்படியே அசத்திப் போட்டுடுத்து, அத்தை! பம்பாயிலே யெல்லாம் இதுக்குள்ளே குளிச்சுச் சாப்பிட உட்கார்ந்திருப்பேன்," ஒரு வழியாய் அவனும் பேச்சில் மாட்டிக் கொண்டான்.

"ஏன்! இங்கேயும் தான் இப்பவே சாப்பிட உட்காரலாம். போய்க் குளிச்சுட்டு வா! தொட்டி நிறையத் தண்ணீர் கொட்டி யிருக்காளே சியாமளா! எழுந்திரு. அதிகாலையிலே குளிச்சுட்டா சொடக்கெடுத்த மாதிரி உடம்புக்கும் தெம்பா இருக்கும்."

பழக்க வாசனையால் அவனுக்கு வயிற்றில் பசி கிளம்பித் தானிருந்தது. ஆகவே பேசாது எழுந்து குளிக்கப் போனான் அவன்.

சாப்பிடும்போது அவன் கேட்டான்:

"அத்திம்பேர் இங்கே எப்போ வருவார், அத்தை!" என்று வினவினான்.

நேற்று வந்ததும் வராததுமாய்த் தான் ஆண் பிள்ளை என்ற தோரணையிலோ, என்னவோ அவன்

அவரைப் பற்றித்தான் விசாரித்தான். 'ஊரிலே யில்லே!'' என்ற சுருக்கமான பதில்தான் அப்போது அவனுக்குக் கிடைத்திருந்தது அமைதியாக உட்கார்ந்து சாப்பிடுகையில் நினைவுகள் அவன் நெஞ்சில் புரள்கையில் அவரைப் பற்றிய விசாரணை தானே கிளம்பியது.

அத்தை முகத்திலே ஒளிரும் லட்சுமீகரத்தினூடு சற்றுக் கடுமை படர்வதை அவன் கண்டான். அவள் முகத்தையே அவன் கண்கள் கூர்மையாய்ப் பார்த்தன.

"அவருக்கு எப்போது தோன்றுகிறதோ அப்போத்தான் வருவார்."

"அப்படி யென்றால்......?"

"அவர் போக்கே மாறிப் போயிடுத்துடா, சங்கரா! ஊர்க் கோவிலிலே மணியடிச்சிண்டிருந்த போது என்னமோ தெய்வ புண்ணியத்திலே காலம் நன்னாத்தான் ஓடித்து. புதிசா ஒரு தர்மகர்த்தா வந்தான். படித்தரத்தை யெல்லாம் குறைக்க ஆரம்பிச்சான். இவருக்குப் பொறுக்கலே. 'முன்னைப் போல சம்பளம் உண்டானால் நான் இருக்கேன். இல்லையானா, வேறே ஆள் பார்த்துக்கலாம்' என்று சொல்லி விட்டார். அவ்வளவுதான். அவனுக்கு ஆளா கிடைக்காது! 'நான் நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். ஒரு 'ஆமாம் சாமி' இப்போ இவர் இடத்துக்கு வந்துட்டான். 'போனாப் போறதுடா! எத்தனையோ கோவில்!' என்று பேசிக் கொண்டு வந்து விட்டுத் திண்ணையில் 'ஹாய்'யாகப் படுத்துக் கொண்டு விட்டார். துண்டை விரித்துப் படுத்துக் கொண்டு விட்டா தூக்கம் வரும்! சோறு வருமா! ஒரு மாசம் வரை சோம்பலிலேயே கழிந்து விட்டது. அந்த ஓய்வு அவரையே மாற்றி விட்டது. வேலை செய்ய அவர் சரீரம் வணங்கலே இல்லே. பக்கத்து ஊரிலே ஏதோ கிருஷ்ணன் கோவில் பூஜைக்கு ஒப்புக்கொண்டு போனார். இரண்டு வாரம் ஓடியது. அப்புறம் செங்கணத்தூரில் போய் ஒரு மாதம் தள்ளினார். முன்னெடுத்தான் பட்டிக் கோவிலிலே ஒரு பதினைந்து நாள். இப்படிப் பத்துப் பன்னிரண்டு கோவில் பார்த்தாச்சு. ஒரு இடத்திலேயும் நிலை கொள்ளவில்லை. குடும்பம் எப்படி நடக்கும், சொல்லு. பகவான் என்னமோ நம்ம நிலைமை தெரிஞ்ச ஒரு குழந்தையைத்தான் கொடுத்திருக்கார். அந்த ஒன்னுக்காவது வழி வகை பண்ணிவைக்க வேண்டாமா! — இதை நான் எப்பவாவது சொன்னால் போதும்! அவ்வளவுதான். பொறுக்காது. கோபம் வந்துடும்! மறு பேச்சுப் பேசாமல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு போய் விடுவார் பார்க்கிறவாளுக்குப் பாங்காகப் பூர்வீக மனுஷாள் கட்டி வைச்ச இந்த வீட்டிலே நானும் பெண்ணும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருப்போம். அப்புறம் திடீரென நினைத்துக் கொண்டு ஒரு நாள் வந்து நிற்பார். ஊரில் அகப்பட்ட சேதியெல்லாம் பேசுவார். அவருக்கென்ன ஆண் பிள்ளை! எப்படியோ சுற்றித் திரிந்து கவலையை மறந்துவிடுகிறார். நம்மாலே அப்படி இருக்க முடிகிறதா, சங்கரா! இருந்துட்டா அப்புறம் குடும்பம்தான் என்ன ஆகிறது! ஸ்யாமளா என்ன என்னிக்கும் குழந்தையா!'' என்றாள் அவன் அத்தை.

அவன் மனத்தில் சொல்ல முடியாத வகையில் ஏதோ ஒரு வேதனை எழுந்தது. ஸ்யாமளாவைத் தேடி அவன் பார்வை அலைந்தது. சாப்பிட்டு விட்டுக் கையலம்பினான்.

இவர்கள் பேச்சிலே கவனம் செலுத்தாத பாவனையில் வாசலையடுத்த நடையில் உட்கார்ந்து ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் அவள். புஸ்தகத்தின் பக்கங்களைத் தாறுமாறாக அவள் விரல்கள் புரட்டிய முறையில் இருந்தே அவள் கவனம் புத்தகத்தில் இல்லை என்பது தெளிவாயிற்று.

அவன் விசனம் நிறைந்த முகத்துடன் அத்தையைப் பார்த்தான். அத்தை புடவை முந்தானையால் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

துயரத்தைப் பற்றிக் கேட்டும், படித்தும் விசனப்படும் அவன் உள்ளம், அது தனக்கு வேண்டியவர்களையே தாக்கும் கோரத்தைக் கண்ணெதிரே காணும்போது சாம்பிக் கருகியது.

அத்தை ஓய்ந்து பெருமூச்சு விட்டாள்.

அவன் இதயத்தில் கனன்று கொண்டிருந்த வேதனையின் உயிர்ப்பாய் அது வெளி வந்தது.


கல்யாணத்தைப் பற்றி அவன் கொண்டிருந்த சிந்தனைகளும் லட்சியங்களும் எவ்வளவு அஸ்திவாரமற்றவை என்று சங்கரன் தனக்குள் பேசிக் கொண்டிருந்தான்.

"போ! நம்ம கதை இருக்கவே இருக்கிறது. 'உண்ட மயக்கம்' உன் கண்ணைச் சுற்றுகிறது போலிருக்கே! கொஞ்ச நேரம் படுத்திண்டிரு!''

உண்மையில் அவன் கண்கள் எந்த மயக்கத்திலும் இறங்கவில்லை. அவன் மனத்தில் தான் ஏதோ மயக்கம் சுழன்றது.

ஊஞ்சலில் வந்து படுத்துக் கொண்டான் அவன்.

அத்தை உள்ளே சாப்பிடப் போய் விட்டாள். ஸ்யாமளாவும் சமையலுள்ளுக்குப் போய் விட்டாள். ஊஞ்சல் மெதுவாக அசையும்போது



எழுந்த 'கிரிங்...கிரிங்' என்ற ஓசை அங்கு நிலவி யிருந்த மோனகீதத்தின் கருநியாய் ஒலித்தது.

அவன் நினைவுகள் அந்தப் பின்னணியின் சொடுக்கில் தாமாக இயங்கின.

சங்கரனின் தகப்பனார் பம்பாயில் ஒரு பிரபல மருந்துக் கம்பெனியில் 'ஸ்டெனோ' வாக இருந்தார். சங்கரனுக்குப் பத்து வயதில் தான் அவர் அங்கே போய் அந்த வேலையை ஒப்புக் கொண்டார்! அதன் பின் அவர்கள் பம்பாய் வாசிகளாகவே ஆகி விட்டனர். சங்கரன் இருபதாவது வயதிலே பி. ஏ., தேர்ச்சி பெற்று விட்டான். அந்த வருஷம் அவன் எதிர்பாராத விதத்தில், யாருமே நினையாதபடி, அவன் தந்தை ஒரு நாள் மாரடைப்பில் கண்ணை மூடிவிட்டார். சங்கரன் வலுக்கட்டாயமாய் வேலை தேடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தந்தை உத்தியோகம் செய்த கம்பெனி முதலாளியே அவனைக் கூப்பிட்டனுப்பினார். எப்படியோ சிரமமின்றி அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. அவன் பாடு சௌகரியமாகத்தான் நடந்து கொண்டிருந்தது. அப்பா தன் ஆயுளில் சேமித்து வைத்த சொற்பப் பணமும், அவனது வருவாயும் அவன் குடும்பத்தைத் தாராளமாய்த் தாங்கிப் பிடித்தன. அவன் தம்பி ரங்கநாதன் கலாசாலையில் படித்துக் கொண்டு இருந்தான். அவனுக்குக் கூடப் பிறந்தது அந்தத் தம்பி ஒருவன்தான். மூன்று பேர் கொண்ட அக் குடும்பம் அவனுக்கு அதிகக் கவலை அளிக்கவில்லை.

இங்கே அத்தை வீட்டிலும் மூன்றுபேர்தான். சொத்து, சுதந்திரம் அந்த வீட்டைத் தவிர வேறு ஒரு மண்ணும் கிடையாது. வருமானம் பூஜ்யம்! அவர்கள் எப்படித்தான் வாழ்கிறார்களோ! அதை நினைப்பதற்கே கஷ்டமாகத் தான் இருந்தது.

''கஷ்டம்' என்ற வார்த்தை அவனுக்கு ஒருசம்பவத்தை நினைப் பூட்டியது.

அவன் நண்பன் ஒருவன் கலியாணம் ஆகிப் புதுக் குடித்தனம் வைத்திருந்தான். இரண்டு மூன்று மாதங்கள்தான் ஆகி யிருக்கும்! ஒற்றைக் கட்டையாய் அதுவரை வாழ்ந்து செலவழித்து விட்டுத் 'திடும்' எனக் குடும்பம் என்று ஏற்பட்டபோது அவன் திணறித் திண்டாடினான். அவன் நிலைமை மிகவும் பரிதாபமாக ஆகிவிட்டது. பதினைந்து தேதி ஆகிவிட்டால் மனிதன் முகம் வாடிக் கருகித்தான் கிடக்கும்.

ஒரு நாள் அவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் சங்கரன் அம்மாவிடம் சொன்னான்:

'' இப்போ இவனுக்கென்ன அம்மா கல்யாணம் வேண்டிக் கிடந்தது! தன்னாலே ஒரு குடும்பம் நடத்த முடியுமா என்கிறதை முதலிலேயே இவன் யோசனை பண்ணி யிருக்கணும். இப்போ கிடந்து அவதிப்படுறான்.''

அவன் தாய் அதைக் கேட்டு சிரித்தாள்.

''கஷ்டப்படாமலேயே வாழ்ந்திட முடியாதுடா, சங்கரா! எந்த அனுபவமும் புதிசிலே சமாளிக்கிறது கஷ்டமாகத் தான் இருக்கும். நாளா வட்டத்திலே தான் நிலைமை சரியாகும். இதுவரை 'பொறுப்பு' என்றால் என்ன என்றே தெரியாமல் இருந்து விட்டான். இப்போ திடும் எனத் தலையிலே அது இறங்கினதும் ரொம்பக் கனக்கிறது! வெளிச்சத்தி லிருந்து மங்கலான இடத்துக்கு வந்தால்கூட அங்கே ஒரே இருட்டா யிருக்கிற மாதிரிதான் தோணும். அப்புறம் பார்வைப் பழக்கத்திலே கொஞ்ச நாழிகையில் எல்லாம் சரியாயிடும்.''

''அது சரிதான் அம்மா! அதுக்காகத் தானாகவே தலைமேலே பாரத்தை ஏற்றிக் கொண்டு அவதிப் படுகிறதா!'

அவன் அன்னை சிரிக்கத்தான் செய்தாள்.

''ஒதுங்கி ஒதுங்கிப் போறதிலே ஒன்றும் கெட்டிக்காரத்தனம் இல்லையப்பா! குடும்ப பாரம்

பஸ் கிடைக்காத தொல்லை

சென்ற மாதம் நான் குடும்பத்துடன் சென்னை வந்திருந்தேன். மூன்று வருடங்களுக்குப் பின் நான் போயிருந்ததால் பல நண்பர்களையும் பந்துக்களையும் பார்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். குழந்தைகள் மனைவியுடன் பஸ் ஸ்டாண்டில் வந்து மணிக்கணக்காகத் தவம் கிடந்தாலும் பஸ்ஸில் உட்காரவோ நிற்கவோ இடம் கிடைக்கவில்லை. 15, 20 பேர்களை மூன்று தினங்களில் பார்த்து விட்டு வரப் போட்டிருந்த திட்டம் போக்குவரத்துக் கஷ்டத்தினால் தகர்ந்தது. ஐந்து தினங்களிருந்தும் மூன்று உறவினர் சிநேகிதர்களைக்கூடப் பார்க்க இயலவில்லை.

டிராம் வண்டி போய் விட்டது. ஜட்கா வண்டிகள் குறைந்து விட்டன. கோச்சு வண்டிகளையும் காணவில்லை. டாக்ஸி சத்தம் கடுமை. பஸ்ஸிலோ எந்நேரமும் தேர், திருநாள் கூட்டம். இந்நிலையில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த என்னைப் போலொருவன் சென்னையில் ஒன்றிரண்டு நாள் தங்குவதே பாபம் போலும்.

போக்குவரத்துச் சாதனங்கள் சற்று அதிகப்பட வேண்டும். பம்பாயிலும் கல்கத்தாவிலும் சென்னையை விட ஜனத்தொகை அதிகம். ஆனால் பஸ்ஸுக்கு இவ்வளவு லாட்டரி அடிக்க வேண்டாம்! பம்பாயிலுள்ள 'க்யூ' வரிசையின் அமைதியும் அழகும் இந்தியாவில் வேறெங்கும் பார்க்க முடியுமா! சென்னையில் 'க்யூ' என்பதையே பார்க்க முடியவில்லை. யாருக்கு புஜபலம் அதிகமோ அவரேதான் 'க்யூ'வில் முதல்வர்.

மாகாண சர்க்கார் இது விஷயமாய்ச் சற்று அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

காசி
22-7-54 கே. பி. அய்யர்

கஷ்டம் என்று நினைத்துக் கலியாணம் வேண்டாம் என்று இருக்கிறது என்றால் அது சுத்தக் கோழைத்தனம் இல்லையா!"

அந்தப் பேச்சை அவன் மேலே வளர்த்தவில்லை. ஆனால், கலியாணம் என்ற வார்த்தையே அவனுக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது.

எத்தனையோ இடங்கள் வந்தபோதும் ஏதேதோ காரணங்கள் சொல்லித் தட்டிக் கழித்து விட்டான்.

ஒவ்வொரு தடவையும் அவன் தாய் அவனை எவ்வளவோ வற்புறுத்துவாள். அவன் ஏனோ பயந்துதான் நடுங்கினான்.

இப்போது அவன் சிந்தனை ஜீவனுடன் ஓடியது.

'எங்கிருந்தெல்லாமோ யார் யாரோ வந்து கேட்டு விட்டுப் போனார்களே! இந்த அத்தை மட்டும் தன் பெண்ணை எனக்குக் கேட்கவேயில்லையே! ஏன்!'

அவன் கண்களை மூடிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தவாறே நித்திரையில் வீழ்ந்து விட்டான்.

'கிரீம்...கிரீம்' என்று ஊஞ்சல் தாலாட்டியது.

"பிள்ளை ராஜாவாட்டமா இருக்கான். நல்ல சம்பாத்தியம்! கிடைச்சால் ஆகாதா! எதற்கும் நீ அவனை கேளேன் ஒரு வார்த்தை கேட்டுப் பாரு! ஆயிரம் இருந்தாலும் உறவு-முறை என்று ஒண்ணு இருக்கே!"

"அதில்லை, பாட்டி. நான் இருக்கிற நிலைமை எங்கே! அவன் இருக்கிற நிலைமை எங்கே! சீரும் செல்வாக்குமாக அவனுக்குப் பெண்ணைக் கொடுக்க எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருப்பா! நம்மாலே என்ன செய்ய முடியும்! 'பொண்ணைத் தொட்டுத் தாலி கட்டற செலவு கூட நீதான் ஏத்துக்கணும்' என்று சொல்லற நிலையிலே இருந்து கொண்டு அவனைப் பார்த்து எப்படிக் கேட்கிறது! மனசிலே என்னமோ ஆசை அடிச்சுக்கிறது. வாய் திறந்து கேட்கவே சங்கோசமாக இருக்கே!"

"சங்கோசமா இருக்கு என்றுதான் நாலு வரி எழுதிக் கேக்காமலே இருந்துட்டே! இப்போ அவன் நேரிலே வந்திருக்கிறபோது கேட்டுப் பார்க்கக் கூடாதோ! அவனிடம் நைச்சியமாய்ச் சொல்லிப் பாரேன்!"

சங்கரன் அப்பொழுதுதான் கண் விழித்து ஊஞ்சலில் மெதுவாய் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்துக் கொண்டிருந்தான். நடையில் நடந்த சம்பாஷணையின் இந்தப் பகுதி அவன் காதில் தெளிவாக விழுந்தது.

"அப்படியென்றால்..."

அவன் தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

கலியாணம் – என்றால் உறவு முறை, பெண்ணுக்கும் பிள்ளைக்கும் உள்ள மன ஒற்றுமை, இவையெல்லாம் கூட நடைமுறையில் அவசியமில்லை. ஆனால், இதைவிட மேலான ஒன்றுதான் இன்று தேவைப்படுகிறது. பணம்......! சொத்து, செல்வாக்கு!

இங்கே வந்து சரியாக இருபத்து நாலு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் அவன் எவ்வளவு கற்றுக் கொண்டு விட்டான்!

கையில் ஏதோ கதைப் புத்தகத்துடன் வாசற் புறத்திலிருந்து ஸியாமளா வந்தாள்.

அவன் கண்கள் புதிய பார்வையில் அவளை அப்போது நோக்குகையில் அவனுள் ஏதோ மலர்ந்து மணத்தது.

"அடேயப்பா! நல்ல தூக்கம்!" என்று சொன்னாள் அவள் அவனைப் பார்த்து, கேலியாகச் சிரித்துக்கொண்டே!

அவள் நடையில், அந்தக் கேலிப் பேச்சில், கள்ளங்கபடற்ற சிரிப்பில் எல்லாம் புதியதொரு கவர்ச்சியிருப்பதாக அவனுக்குப் பட்டது.

அவன் பார்வையின் இந்த மாறுதல் அவளுக்கு ஒரு கணம் வியப்பாக இருந்திருக்க வேண்டும்! அந்தப் பிரமிப்பில் அப்படியே நின்று விட்ட அவள் மறுகணத்திலேயே தன்னைச் சுதாரித்துக் கொண்டு விட்டாள்.

"அடுப்பு மூட்டட்டுமா, அம்மா!" என்று கேட்டுக் கொண்டே ஏனோ வீணாகத் துள்ளிக் கொண்டே சமையலுள்ளுக்கு ஓடினாள் அவள்.

அவன் மனத்தில் தீவிரமாக ஏதோ தீர்மானம் உருப் பெற்று விட்டது.

பாட்டியை அனுப்பி விட்டு, "அம்மாஞ்சி எழுந்திருந்து விட்டானா, ஸியாமளா!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் அத்தை.

சிந்தனையின் அழுத்தத்திலும் தூங்கி விழித்த களைப்பிலும் கூட நிஜமாகவே 'ராஜா'வாக ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த சங்கரனைப் பார்த்ததும், பாட்டி மூட்டிய ஆசை அவள் முகத்திலே படர்ந்து ஜொலித்தது. ஆயினும் அவள் எதிர்பார்த்தபடி வார்த்தைகள் தான் அவன் வாயினின்று முற்படவில்லை. ஒவ்வொரு தடவையும் எதையோ சொல்ல முற்பட்டு, பின் ஏதோ நினைத்து மறந்து போனது போல அதைச் சொல்ல முடியாத அவஸ்தையில் அவன் திணறுவதை அவள் நன்றாகக் கண்டு கொண்டாள்.

அவன் மனம் என்னவோ அத்தை வாய் விட்டு அது விஷயமாகப் பேசும் அந்தக் கணத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

அன்றையப் பொழுது ஏதேதோ பேச்சுக்களில் கழிந்தது. மறுநாள் அவன் அருகிலேயிருந்த குன்றைச் சுற்றிப் பார்க்கப் போய் விட்டு வந்தான். மூன்று நாட்கள் எப்படியோ கழிந்து விட்டன.

அவனுக்கே பொறுக்க வில்லை.

"அத்தை! அடுத்த திங்கட்கிழமை நான் புறப்பட வேண்டும்!" என்றான் அவன் ஏதோ பேச்சு வாக்கில்.

அத்தை சற்று நேரம் மௌனமா யிருந்தாள்.

"கூட ஒரு வாரம் இருந்து விட்டுப் போகக் கூடாதா! வராதவன் வந்திருக்கிறாய்!"

"லீவு இல்லையே, அத்தை!"

அத்தை மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தாள்.

"என்னமோ சங்கரா, ஸியாமளா விஷயம் தான் எப்படி ஆகப் போகிறதோ, தெரிய வில்லை. உங்கப்பா இருந்திருந்தால் இந்த நிலைமைக்கு வந்திருக்காது. வாய்க்கு வாய் 'சங்கரனுக்கும் ஸியாமளாவுக்கும் முடி போட்டு வைச்சுட வேண்டியது தான்' அப்படீன்னு நீங்கள் குழந்தையாக இருக்கிறபோது சொல்லிக் கொண்டேயிருப்பார். இப்போ எங்கள் நிலைமையோ ஒரேயடியாகக் கை தாழ்ந்து போய் விட்டது! அவளும் போய்ச் சேர்ந்து விட்டாள்! எப்படிக் கேட்கிறது இனிமேல் என்று தான் கடிதாசிகூட எழுதவில்லை. என்னமோ இப்போ உன்னை நேரிலே பார்த்ததும் உங்கப்பா சொன்னது நினைவுக்கு வந்தது."

அவன் கண்களில் நீர் முட்டி நின்றது.

என்ன பேசுவது என்று தெரியாமல் அவன் உட்கார்ந்திருந்தான்.

"நீ மனசு வைச்சா எப்படியும் வழி பிறக்கும்! என் கவலையும் விட்ட மாதிரி இருக்கும்! உறவு முறை விட்டுப் போகக் கூடாது என்றது மட்டு மில்லை. இந்தப் பெண்ணுக்கு வேறே வழி பிறக்க வகையும் இல்லையே!"

அவன் குனிந்து யோசிப்பதாகப் பாவனை செய்தான். அப்புறம் என்ன தோன்றிற்றோ!

"அத்தை, எங்கப்பா ஆசைக்கு விரோதமாக ஒன்றும் நடக்கவிட மாட்டேன். ஸ்யாமளாவைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் நாளைக்கே பம்பாய்க்குப் போய் அம்மாவையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்."

"என்ன சொல்கிறாய், சங்கரா!"–அவள் எதிர் பாராத வகையில் அவன் ஏதோ அவசரமாய்ச் சொல்வதைக் கேட்கையில் அவளுக்கு ஒன்றுமே சரியாகப் புரியவில்லை.

"நான் தீர்மானம் செய்து விட்டேன், அத்தை, எனக்கு ஜாதகம் கிடையாது. ஆகவே அந்தக் கவலை இல்லை. பொருத்தம் எல்லாம் மனப்பொருத்தம் தான்!" என்றான்.

"நிஜமாகத்தான் சொல்றயா, சங்கரா!"

"நான் இன்னும் விளையாடக் குழந்தையில்லை, அத்தை!"

அவன் தீவிரம் அத்தையின் நெஞ்சில் மகிழ்ச்சி அலைகளாகப் பரவியது.

இங்கே நடந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்யாமளா, அடுப்பிலே பொங்கி வழியும் பாலைக்கூடக் கவனியாது கற்பனையில் மூழ்கி விட்டாள்.

சங்கரனின் தாயார் தன் மகன் ஊரிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் திடீரெனத் திரும்பியது கண்டு திடுக்கிடவில்லை. ஏனென்றால், உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் விஷயங்களைத்தையும் சங்கரனே சொல்லி விட்டான்!

அவள் அண்ணிக்கு இந்தச் சம்பந்தத்தைக் குறித்து அவ்வளவாக மகிழ்ச்சி இல்லை. ஆயினும் மகனின் தீவிரத்தை உத்தேசித்து அவளும் சம்மதித்து விட்டாள்.

சங்கரன் நெஞ்சில் ஏதோ தியாக உணர்வின் பெருமை பொங்கியது. ஸ்யாமளா தன் அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்ந்தாள்.

வந்தனை செய்கிறோம்

"கல்கி" ஆடி 10-ந் தேதி இதழைக் 'குடிசைத் தொழில்' மலராக வெளியிட்டு அவற்றில் தீக்குச்சி வீட்டுத் தொழிலுக்குப் பிரதானம் அளித்திருப்பதைப் பார்த்தோம்.

வீட்டுத் தொழிலான தீப்பெட்டித் தொழிலைக் காப்பாற்றத் தீப்பெட்டி உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் அரசியலார் ஆதரவின்றி, பண வசதியின்றி முப்பது ஆண்டுகளாகப் போராடி வந்துள்ளதை 'பரதன்' அற்புதமாக வர்ணித்துள்ளார். அதைப் படித்துக் கொண்டு வரும் பொழுதே தொழில் தந்த இருவர்களான திருவாளர்கள் ஏ. சண்முக நாடார், பி. அய்ய நாடார் ஆகிய பெரியார்களை, பூத தத்துவத்தை விளக்கிய கெலிலியோ, காந்த சக்தியையும் அதன் விளைவுகளையும் கண்ட நியூடன் ஆகியோர்களுக்குச் சமமாக ஒப்பிடலாமா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தண்ணீரே யில்லாத ஆறு, மேடாகி விட்ட கண்மாய், இந்த இரு பாசன சக்தியையும் நம்பியுள்ள நிலங்கள், இத்தகைய சூழ் நிலையிலும் எலும்பு தேய உழைத்து இருதயம் கெடக் கவலை கொண்டு, இகத்தின் சுகமிழந்து, பரலோகப் பிரயாணச் சீட்டுக்குப் பணம் கிடைக்குமா என்ற நிலையிலிருந்த மக்களுக்குப் புது வாழ்வு கிடைக்க வழி செய்தவர்களல்லவா அவர்கள்!

தீப்பெட்டித் தொழில் பற்றி இதற்கு முன்னர் யாராவது எடுத்துக் கூறினால் அது ஒரு தொழிலா என்ற அலட்சிய மனப்பான்மையே பலரிடமிருந்து தோன்றியது. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் புல்லும் புதருமாகத் தெரிந்தது. துருவிப் பார்த்துப் பொன்னும் மணியும் கிடைக்கிறது என்று உலகுக்கு 'கல்கி' பத்திரிகை எடுத்துக் கூறிவிட்டது. பல்லாயிர மக்களுக்கு வாழ்வு அரசியலாருக்கு வருமானம், மகாத்மாவுக்குப் பிடித்தமான குடிசைத் தொழில். ஆகிய உயர்ந்த பண்புகள் அமைந்தது அத் தொழில் என்பதை 'கல்கி' மலர் அருமையாகச் சித்திரித்து விட்டது.

அமைச்சர்கள், உயர்தர அதிகாரிகள், தலைவர்கள் ஆகியோர் இப்பகுதிக்கு அடிக்கடி வந்து தீப்பெட்டித் தொழில் நிலைமையை நேரில் கண்டார்கள். இப்படி வருகிறவர்களை வரவேற்று உபசரிக்கவே உற்பத்திச்சாலை சங்கத்தார்களுக்கு நாள் முழுவதும் நேரம் சரியாக இருந்தது. வந்தவர்களெல்லாம் 'கவனிக்கிறோம்' என்ற வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இது நாளடைவில் மக்களுக்கு மிகவும் அலுப்பாகிக் கவனிக்க வருகிறவர்களிடமும் அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

புதுடில்லி கைத்தொழில் கண்காட்சிச் சாலைக்கு வீட்டுத் தொழில் மூலம் தீப்பெட்டி செய்யும் விதத்தைக் காட்டுவதற்குச் சில தொழிலாளர்களை அழைத்துச் சென்றனர் அரசியலார்.

புது டில்லி கண்காட்சி பற்றிச் செய்தி இலாகா வெளியிட்ட படம் தென்னாட்டில் பல சினிமா தியேட்டர்களில் காட்டப் பட்டது. தீப்பெட்டித் தொழிலாளர்கள் விழுந்தடித்துக் கொண்டு அந்தக் காட்சியைப் பார்க்கப் போனார்கள். தீப்பெட்டித் தொழில் நடப்பதைப் பற்றிச் செய்தி இலாகா விவரமாகப் படம் பிடித்திருப்பார்கள் என்று அவர்கள் எண்ணி யிருந்தார்கள். "கல்கி" தலையங்கக் குறிப்பில் எழுதி யிருப்பதுபோல் தேங்காயின் கொட்டாங்கச்சியில் விசித்திரமான வேலைப்பாடுகளை அமைத்திருப்பது, செம்பு, பித்தளையில் அற்புதமான இனி வடிவத்தை அமைத்திருப்பது ஆகியவற்றிற்கே அதிக பாகம் கொடுத்துத் தீப்பெட்டி செய்யும் விதத்தைக் கண் மூடித் திறப்பதற்குள் காட்டி விட்டார்கள். இது இப்பகுதி மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

தமிழகத்தின் சிறப்பான தொழிலான நெசவுத் தொழிலையே இயந்திர சக்தி முறியடித்தது. ஆனால் தீப்பெட்டி குடிசைத் தொழிலிடம் இயந்திர சக்தி பணிந்தது. சில மாதங்களுக்கு முன்பு தீப்பெட்டி உற்பத்தி செய்யும் ஆலை முதலாளிகள் குடிசைத் தொழில் உற்பத்தியாளர்களிடம் பேரம் பேசிக் கொள்ள வந்தார்கள்.

இவ்வளவு மகத்தானதும், வெற்றி ஜோதியாக விளங்குவதுமான தீப்பெட்டித் தொழிலின் சிறப்பு பற்றி மலர் வெளியிட்டமைக்கு சாத்தூர் தாலுக்கா மக்கள் வந்தனை செய்கிறார்கள்.

சாத்தூர்
3-8-54

பா. இராசமணி



குழந்தை
அவைகளை
விரும்புகிறது

ஜே. பி. மங்காராமின்
'NOURISHING
நரிஷிங் பிஸ்கட்ஸ்



நரிஷிங் பிஸ்கட்டுகளை குழந்தை ருசி பார்க்கட்டும். அவைகளில் அதிக மான மனங்கவர் மணமும் இனிய ருசியும் ஆரோக்கிய மளிக்கும் வைடமின்களும் அடங்கி யிருப்பதால் அவைகளை அவன் மிகவும் விரும்புகிறான்.

தரமேன்மை பெற்றது
வைடமின்கள் மிகுதியானது


ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்
சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

NAS M. 1

வண்டி நகர்ந்தது

அநுத்தமா





ஸ்ரீதரன் வாசற்படி பக்கத்தில் ஒரு விநாடி தயங்கி நின்றான். அந்தப் பங்களாவின் முன் விரிந்திருந்த பூஞ்சோலை கண்ணைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.

ஸ்ரீதரன் இப்படியும் அப்படியுமாகப் பார்த்து விட்டு உள்ளே நான்கு அடி எடுத்து வைத்தான். சற்றுத் தொலைவில் மர நிழலில் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த ஒரு பெண் அவனைப் பார்த்ததும் வீட்டுக்குள் சிட்டாகப் பறந்தாள். பிறகு எண்ணெய் வழியும் தன் முகத்தை வெளியே நீட்டி, "நீங்கள் யார் என்று தெரியவில்லையே!" என்று ஸ்ரீதரனை விசாரித்தாள்.

"நான் கல்கத்தாவிலிருந்து......" என்று அவன் ஆரம்பித்துச் சொல்வதற்குள், "சாந்தா, யாரது!" என்று அதட்டிய குரலுடன் கேட்டவாறு இருபது வயது வாலிபன் ஒருவன் அங்கே வந்து சேர்ந்தான்.

"நான் தங்கள் தகப்பனாரைப் பார்த்துப் போக வந்திருக்கிறேன். கல்கத்தாவிலிருந்து கடேசய்யர் பிள்ளை வந்திருப்பதாகச் சொல்லுங்கள்" என்றான் ஸ்ரீதரன்.

சாந்தா ஸ்ரீதரனைப் பார்த்து, "சற்று உட்காருங்கள். அப்பாவைக் கூப்பிடுகிறேன்" என்றாள். பிறகு, தன் தமையனைப் பார்த்து, கண்களால் சாடை காட்டிப் பேசிக் கொண்டிரு என்று தெரிவித்து விட்டு வீட்டினுள் சென்றாள். ஆனால் அவள் அண்ணன் காது கேளாதவன் போல் உள்ளே திரும்பிப் போய் விட்டான்.

ஸ்ரீதரன் அந்தப் பெண் சொன்ன மரியாதைக்காக ஹாலில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்தான். ரேடியோவில் யாரோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீதரனின் கண்கள் அவ் வறையைச் சுற்றி ஆராய்ந்தன. அப்பொழுது தான் ரேடியோவின் அருகில் ஒரு பெண் இருப்பதை அவன் கண்டான். அவள் மெத்தை விட்ட நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தாள். தன்னை வந்து எதிர் கொண்ட சாந்தாவின் சாயல் கொஞ்சம் இருந்ததால் இந்தப் பெண் அவனுடைய தமக்கையாக இருக்க வேண்டும் என்று நினைத்தான் ஸ்ரீதரன். அவள் நெற்றியில் குங்குமப் பொட்டோ, சாந்துப் பொட்டோ இல்லை. தங்கையின் முகத்தைப் போலவே அவள் முகத்திலும் எண்ணெய் வழிந்து கொண்டிருந்தது. மூக்கிலும் மூக்குத்தியைக் காணோம். கேசம் கலைந்திருந்தது. முகம் மட்டும் எடுப்பான மூக்குடனும், படர்ந்த நெற்றியுடனும் களையாக இருந்தது. அவள் ஸ்ரீதரனைக் கவனித்ததாகவே தெரியவில்லை. மேலேயே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

'பாவம், இவளுக்கு ஏதேனும் மூளைக் கோளாறு இருக்குமோ! நெற்றி, மூக்கு, செவி யாவும் மூளியாக இருக்கின்றனவே! எங்கோ பார்க்கிறாளே!' என்று யோசிக்கலானான் ஸ்ரீதரன். அப்பொழுது அவன் இருதயத்தில் தயை நிரம்பியது. அவன் அப் பெண் மீது பரிதாபப் பட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான். பொழுது போகாததால் ரேடியோ பேச்சை அவனும் கேட்கலானான்.

ரேடியோவில் நகைச் சுவையுடன் பேச்சாளர் ஏதோ கூறிய போது அவனுக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. எதிரே யிருந்த பெண்ணும் சட்டென்று நிமிர்ந்து பேச்சைக் கவனித்து இலேசாக முறுவலித்தாள்.

'பரவாயில்லையே! பேச்செல்லாம் கவனிக்கத் தெரிகிறதே!' என்று எண்ணிய ஸ்ரீதரன் அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்ப்போமா என்று நினைத்தான். ஆயினும் முன்பின் அறிமுகம் இல்லாத மனிதன் பேசினால் அவள் எப்படி நடந்து கொள்வாளோ என்று பயந்து பேசாமலிருந்தான்.

அறையில் மாட்டியிருந்த சுவர்க் கடிகாரத்தில் அரை மணி அடித்தது. தான் உள்ளே நுழையும்போது அதே கடிகாரம் ஐந்து அடித்தது ஸ்ரீதரனுக்கு நினைவு வந்தது. அவன் எழுந்தான். வெளி வராந்தாவில் வந்து நின்று தோட்டத்தைக் கவனித்தான். கீழே இறங்கி ஒரு சுற்று வந்தான். மறுபடியும் தோட்டத்து ஊஞ்சலுக்குப் போய் விட்டிருந்தாள் சாந்தா. ஸ்ரீதரன் அவளிருந்த பக்கம் போகாமல் மற்ற இடங்களைப் பார்த்து விட்டு வந்தான். கொய்யாவும், மாதுளையும் காய்த்துத் தொங்கின. அணில் கொறித்து விடா

மல் இருப்பதற்காகக் கம்பிக் கூண்டுகள் போட்டுப் பழங்களைப் பாதுகாத்திருந்தனர்.

“தோட்டத்தில் மிகச் சிரத்தை போல் இருக்கிறது!” என்று தனக்குள் சொல்லிக் கொண்டே மீண்டும் தான் உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்தான் ஸ்ரீதரன். கடிகாரம் ஆறு அடித்தது. அவன் ஒரு கணம் நின்று பார்த்தான். யாரும் வரவில்லை. ரேடியோ கேட்டுக் கொண்டிருந்த பைத்தியக்காரப் பெண்ணும் அசையாமல் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.

ஸ்ரீதரன் வெளியே வந்து விட்டான். ஒரு மணி நேரமாகியும் யாரும் வெளியே வரவில்லை. அவன் படிக்கட்டில் ஒரு கணம் தாமதித்தான். யோசனையுடன் மேலும் மேலும் நோக்கினான். சாதாரணமாக எல்லா வீட்டு வாயிலிலும் இருக்கும் கோலமும் அங்கே காணோம். அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

‘ஒருவேளை இவர்கள் வீட்டில் ஏதேனும் துயரச் சம்பவம் நேர்ந்து விட்டதோ! அந்தப் பெண் பரிதாபகரமாகச் சித்தப் பிரமை பிடித்தவள் போல இருந்தாளே! அவளுக்கு ஏதேனும் துயரமோ! குழந்தை இறந்து விட்டதோ! மூக்கு, காது யாவும் நகையின்றி இருந்தனவே! என்ன நினைப்பது! சாந்தா என்ற பெண்ணும் அப்படியே தான் இருந்தாள். வாசலில் விளக்குப் போடக்கூட யாரும் வரவில்லையே! மனையிலே கஷ்டம் நேர்ந்து விட்ட சமயங்களில் யாருக்குத்தான் விருந்தினர்களை உபசரிக்கப் பிடிக்கும்!’

இவ்வாறு சிந்தித்துக் கொண்டே ஸ்ரீதரன் எழுந்து வெளியே போய் விட்டான். அவன் வாசலை அடையும் போது ஒரு முறை ஊஞ்சலில் இருந்த பெண்ணை நோக்கினான். தான் திரும்புவதை அவளிடம் சொல்லிவிட்டுப் போகலாமா என்று எண்ணிப் பார்த்தான். அவள் தொலைவில் இருந்தபடியால் உரக்கப் பேச அஞ்சி அவன் பேசாமலே போய் விட்டான்.

ஸ்ரீதரன் தன் விடுதிக்குச் சென்றதும் நண்பர்களுடன் சினிமா பார்க்கச் சென்று விட்டான். இரவு பத்து மணிக்கு அவன் திரும்பி வந்த போது விடுதியின் வாசலில் ஒரு வாலிபன் நிற்பதைக் கண்டான். “ஸ்ரீதரன்!” என்று கூப்பிட்டுக் கொண்டே அந்த வாலிபன் அவன் பக்கம் வந்தான்.

“உள்ளே வாருங்கள்!” என்று அவனை வரவேற்று விடுதியினுள் அழைத்துச் சென்ற ஸ்ரீதரன் விளக்கைப் பொருத்தி விட்டு நாற்காலி ஒன்றை அளித்து உட்காரச் செய்தான். சாந்தாவின் அண்ணன் என்று அவனுக்குத் தெரிந்தது.

“மாலை நீங்கள் வந்திருந்தபோது அப்பா...” என்று அவ்வாலிபன் ஆரம்பிப்பதற்குள் ஸ்ரீதரன் குறுக்கிட்டான்.

“அதெல்லாம் என்ன பிரமாதம்! அந்தமாதிரி நிலைமையில் நானும் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பேன். இதற்காக...”


“இல்லை. அப்பா மிகவும் வருத்தப்படுகிறார். நீங்கள் நாளைக் காலை எங்கள் வீட்டுக்கு வர வேண்டும். இல்லையேல்...”

“அதற்கென்ன! வருகிறேன். உங்கள் தகப்பனார் என் தகப்பனாருடன் படித்தவராம். இருவரும் பழைய பள்ளித் தோழர்களாம். அப்படிப்பட்டவர்களிடத்தில் நான் சம்பிரதாய மரியாதைகளையெல்லாம் எதிர்பார்ப்பேனா!” என்று சொன்னான் ஸ்ரீதரன்.

‘ஐயோ, பாவம்! பண்புள்ள மனிதர்கள். தங்கள் தவறை உணர்ந்து பையனை உடனே அனுப்பியிருக்கின்றனர்’ என்று ஸ்ரீதரனின் எண்ணங்கள் ஓடின. வந்த வாலிபனை எப்படியாவது ஆசுவாசப்படுத்தி அனுப்ப வேண்டும் என்று அவன் எண்ணி அதிலேயே கவனமாக இருந்தான்.

“உங்கள் பெயர் என்ன என்று நீங்கள் சொல்லவில்லையே! கொஞ்சம் ஓவல்டின் சாப்பிடுங்கள்” என்றான் ஸ்ரீதரன்.

“என் பெயர் ராமன். ஓவல்டின் எதற்கு! வேண்டாம், சார்! இன்று மாலை தவறு நடந்து



விட்டது. பல பேர்கள் வருகிருர்கள். யாரோ வென்று..." என்று இழுத்தான்.

"அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, ராமன்! அதெல்லாம் பரவாயில்லை. உங்கள் நிலையில் நான் இருந்திருந்தால்..."

ராமன் தன்னை வியப்புடன் நோக்கியது போல் தோன்றிற்று ஸ்ரீதரனுக்கு. ராமன் விடை பெற்றுக் கொள்ள எழுந்தான். "நாளைக்கு வருவீர்கள் அல்லவா! ஏதோ நீங்கள் யார் என்று நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை. அப்பா கூறின பிறகுதான் தெரிந்தது. அறிந்திருந்தால்......"

"நன்ருக இருக்கிறது! நான் நாளைக்காலை வந்து விடுவேன். காலைக் காப்பியே அங்கேதான் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நமக்குச் சொந்தமான ஒரு வீடு இருக்கிறது என்று அறிந்த பிறகு வேறு எங்கே இருந்தால் எனக்குப் பிடிக்கும்!" என்று அடித்துக் கூறி ஸ்ரீதரன் ராமனை வழி அனுப்பிவிட்டுத் தன் அறைக்கு மீண்டான்.

அதுவரை ஒன்றிலும் கலந்து கொள்ளாமலும் பேசாமலும் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். "ஸ்ரீதர், நீ பலே கெட்டிக்காரனுக மாறிவிட்டாயே! இன்று மாலை நீ போயிருந்தது கைலாசத்தின் வீட்டுக்குத்தானு! எங்களிடம் சொல்லிக் கொள்ளாமலேயே கம்பி நீட்டி விட்டாயே!" என்றனர்.

"கம்பியும் நீட்டவில்லை, வளையமும் வளைக்கவில்லை. தேய்த்துக் குளிக்கச் சோப்பு இல்லை என்று வாங்குவதற்குக் கடைப் பக்கம் போனேன். அப்பொழுது வழியில் அவர்கள் வீடு தென்பட்டது. எங்கள் அப்பா சொல்லி அனுப்பியிருந்தார், போய்ப் பார்க்கும்படி. அகஸ்மாத்தாக உள்ளே நுழைந்தேன்" என்ருன் ஸ்ரீதரன்.

"எங்களையும் அழைத்துக் கொண்டு கடைக்குப் போவதுதானே! எங்களுக்கும் ஏதாவது சாமான் வேண்டுமா என்று கேட்டாயா!" என்று கேட்டான் ஒருவன்.

"ஐயோ, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்ப்பதுபோல் அல்லவா இருக்கிறது! கைலாசத்துக்கு ஓர் அழகான பெண் சாந்தா என்ற பெயருடன் கல்யாணத்துக்கு இருக்கிருள். அந்த வீட்டில் 'அகஸ்மாத்தாக' நுழையும் போது வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல நம் நான்கு பேர்களையும் கூட்டிக் கொண்டு போவானு! தனியாக மிகமிக அகஸ்மாத்தாகத் தானே நுழைவான்!" என்ருன் மற்ருெருவன்.

"போங்கடா, கொஞ்சம்கூட யோசனையே கிடையாது. ஒருவன் ஒரு வீட்டுக்குச் சென்று அந்த வீட்டில் ஒரு பெண் இருக்க நேர்ந்தால், உடனே அவன் அவளை மணந்து கொண்டுவிட வேண்டுமோ! உங்களுக்கு யாருக்கேனும் அந்தப் பெண் மீது கண்ணே! சொல்லுங்கள், நான் சிபார்சு செய்கிறேன்!" என்ருன் ஸ்ரீதரன்.

"செய்வாயப்பா, செய்வாய்! அப்படியிருக்கும் பொழுது' சொந்த வீடு இருக்கும்போது வேற்றிடம் பிடிக்குமா அப்பா!' என்று எப்படி சொன்னுய்!" என்று கேட்டான் ஒரு நண்பன்.

ஸ்ரீதரன் அவர்களுக்கு மறுமொழியளிக்காமல் படுக்கையில் படுத்தான். அப்பொழுதும் அவர்கள் விடாமல் கேலி செய்யவே அவன் அவர்களை அடக்கினுன். "போடா! அவர்கள் வீட்டில் ஏதோ கஷ்டம். துக்ககரமாக விருந்தனர், அவர்கள் வீடும் கிலையும்!" என்ருன்.

“அப்படியா!” என்று கேட்டு விட்டு மற்றவர்கள் வாயை அடைத்துக் கொண்டனர்.

காலையில் எழுந்தவுடன் ஸ்ரீதரன் கைலாசத்தின் வீட்டை அடைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை அளவற்ற வியப்பில் ஆழ்த்தியது. முன் புறத்து அறை துப்புரவாகவும், அலங்காரமாகவும் அமைக்கப் பட்டிருந்தது. ஸ்ரீதரன் கதவருகில் போய் நின்றதுமே ராமன் ஓடோடி வந்து அவனை எதிர் கொண்டழைத்து, நாற்காலியில் அமரச் செய்து மின்சார விசிறியை முடுக்கி விட்டான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் கைலாசம் வந்து சேர்ந்தார். “வா, அப்பா! உன் அப்பாவும் நானும் முதல் வகுப்பிலிருந்து ஆறுவது பாரம் வரை ஒன்றாகப் படித்தோம். பிறகு பிரிந்து விட்டோம். நேற்றுத்தான் பகல் தபாலில் உன் தகப்பனாரின் கடிதம் வந்தது. நீ இங்கே பந்தாட்டத்துக்காக வந்திருக்கிறாயாக்கும்!” என்று சகஜமாகப் பேசிக்கொண்டே அவனருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

‘பாவம்! நமக்காக எவ்வளவு சந்தோஷமாகப் பேசுகிறார்!’ என்று எண்ணிய ஸ்ரீதரனுக்கு அவர் மீது மிக்க அனுதாபம் தோன்றியது. வீட்டு மனிதன் போன்ற தன்னிடம் இவர் எதற்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான்.

அவரிடம் அதைக் கூற வேண்டும் என்று அவன் வாயைத் திறப்பதற்குள் சாந்தா, அவள் தமக்கை, தாயார் மூவரும் உள்ளே வந்தனர். ஒருவர் காப்பியும் ஒருவர் காரப் பலகாரமும், ஒருவர் தித்திப்பும் கொண்டு வந்து ஸ்ரீதரன் முன் வைத்து விட்டு எதிரே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கொண்டனர்.

“இவள் காந்தா, என் மூத்த பெண். இவள் சாந்தா சின்னவள். இதுதான் இந்த வீட்டு மாமி” என்று கைலாசம் அறிமுகப்படுத்தினார்.

ஸ்ரீதரன் புன்முறுவல் பூத்து விட்டுப் பேசாமல் இருந்தான். அவனைப் பேச விடாமல் செய்து விட்டது அங்கே அவன் கண்ட காட்சி. காந்தாவும் சாந்தாவும் பளிச்சென்று அலங்காரம் செய்து கொண்டு அழகாக இருந்தனர்.

‘நாம் நினைத்ததற்கும் இவர்கள் இருப்பதற்கும் சம்பந்தமே காணோமே!’ என்றது ஸ்ரீதரனின் மனம். தெளிவு படுத்திக் கொள்ள எண்ணி அவன் பேச ஆரம்பித்தான்.

“நேற்று நான் வரும்போது...” என்று அவன் தொடங்குவதற்குள் கைலாசமே ஆரம்பித்து விட்டார். “நேற்று மாலை நீ வந்தபொழுது நான் காரியாலயத்தில் இருந்து வீட்டுக்கு வரவில்லை. யாரோ என்று நினைத்துக் கொண்டு யோசனையோடு இருந்து விட்டார்கள். நான் வந்து சொன்னதும் மாமிக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. பையனைத் துரத்தினான். இப்படித்தான் நம்மையும் அறியாமல் சில தவறுகள் நடந்து விடுகின்றன” என்றார் அவர்.

“மாமி, இருந்தீர்களா!” என்று மட்டுமே கேட்டான் ஸ்ரீதரன்.

“ஏன், நான் கூட இங்கே இருந்தேனே, ரேடியோ கேட்டுக் கொண்டு! என்னைப் பார்க்கவில்லையா நீங்கள்!” என்று காந்தா கேட்டதும் ஸ்ரீதரன் திடுக்கிட்டான்.

‘பார்த்தேன். உன் கோலத்தைக் கண்டு நான் ஏதேதோ நினைத்தேன்!’ என்று சொல்லலாமா! ஒரு விநாடி அவன் யோசித்தான். ஆனால் வெளியே மட்டும், “அப்படியா! நான்

"கவனிக்கவில்லையே!" என்று சொல்லி வைத்தான்.

"எனக்குத் தூக்கமாக வந்தது. பேசாமல் அசங்காமல் இருந்து விட்டேன். அதுதான் நீங்கள் கவனிக்கவில்லை. மேலும் நீங்கள் யாரோ அப்பாவிடம் வேலையாக வந்தவர் என்று எண்ணி அப்படியே இருந்து விட்டேன். சோம்பலாக இருந்தது!" என்று காந்தா பேசும்போது செல்லமாக வளர்க்கப் பட்ட பெண்ணின் கொஞ்சுதல் தொனித்தது அவள் குரலில்.

★ பல்லாரி ஜில்லாவிலுள்ள மந்திராலயம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்த ராஜாதி ராஜ குருராஜ ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் மகாராதனை மகோத்ஸவம் அவருடைய பக்த கோடிகள் உள்ள பல இடங்களிலும் நடைபெறுகிறது. வருகிற 16—8—54 அன்று தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள ஒழியத்தூரில் வெகு விமரிசையாக நடத்தப் பிரமாத ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். ★



"பலகாரம் சாப்பிடு. முதலில் தித்திப்பு சாப்பிடு" என்று வற்புறுத்தினார் கைலாசம்.

ஸ்ரீதரன் ஒன்றும் புரியாத நிலையில் ஒருவாறுகப் பலகார கட்டத்தை முடித்துக் கொண்டு எழுந்து விடை பெற்றுக் கொள்ள எழுந்தான்.

ஸ்ரீமதி கைலாசம் தன் மகளுக்கு ஏதோ சைகை காட்டினாள். அவள் எழுந்து உள்ளே சென்று பை நிறையக் கொய்யாப் பழங்களும், மாதுளம் பழங்களும் கொண்டு வந்தாள்.

"அவரிடம் கொடுக்க வேண்டாம், அம்மா! ஆளிடம் அனுப்பி வைப்போம்" என்றான் ராமன்.

"என்னது!" என்று கேட்டான் ஸ்ரீதரன்.

"வீட்டில் காய்த்த கொய்யாவும், மாதுளையும் கொண்டு வந்திருக்கிறாள். உன் நண்பர்களுக்குக் கொண்டு கொடு. நீ அங்கே எதற்காகத் தங்க வேண்டும்! இங்கேயே வந்து விடேன்!" என்றார் கைலாசம்.

"இல்லை, என்னோடு மற்றவர்கள் இருக்கிறார்கள். எங்களுக்கு அதுவே சௌகரியம்" என்று கூறி விட்டு ஸ்ரீதரன் விடைபெற்றுக் கொண்டான்.

அவன் நண்பர்கள் அவனைக் கண்டதும் சூழ்ந்து கொண்டு கவலை யுடன், "அவர்கள் வீட்டில் என்னடா!" என்று கேட்டனர்.

"பழம் பழுத்ததாம். நமக்கும் ஒரு பை அனுப்புவார்கள். வாங்கிக் கொள்ளுங்கள்!" என்று கூறி விட்டு அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் தட்டிக் கழித்து விட்டான் ஸ்ரீதரன்.

அன்று பிற்பகல் தபாலில் ஸ்ரீதரனுக்கு அவன் தகப்பனரிடமிருந்து கடிதம் வந்தது.

"நீ உன் விவாக விஷயத்தில் பிடி கொடுத்தே பேசவில்லை. இதுவரை உனக்கு எந்தவிதமான பெண் பிடிக்கும் என்று உன் அம்மாவாலும் கண்டு கொள்ள முடியவில்லை. பெண் பார்க்கச் செல்ல உனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தான் நான் உன்னிடம் ஒன்றும் விவரம் கூறி அனுப்பவில்லை. கைலாசம் என்னுடன் படித்தவன். அவனுக்கு ஒரு பெண் இருக்கிறாளாம். படித்திருக்கிறாளாம். பாடுவாளாம். அழகாகவும் இருக்கிறாளாம். நீ நேற்று பார்த்திருப்பாய். உனக்குப் பிடித்திருக்கிறதா என்று தெரியப்படுத்தினால் நான் மேற்கொண்டு கைலாசத்துக்கு எழுதுகிறேன்."

அதைப் படித்த ஸ்ரீதரனுக்குத் தன் நண்பர்களின் வகம் நினைவு வந்தது. உடனே தன் தந்தையின் பெயருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"அப்பா, நான் விவாகம் செய்து கொள்ள விருப்பமில்லாமல் இல்லை. ஆனாலும் பெண்ணைப் பார்ப்பது என்று ஒரு மரபு வைத்திருக்கிறோமே! அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. பெண் இனத்துக்குள்ள கௌரவத்தை அளிக்காமல் அவர்களைச் சந்தையில் மாடு பார்ப்பது போல் பார்வையிடுவது என் மனதுக்கு அருவருப்பாக இருக்கிறது. மேலும் ஒருநாள் ஒரு கணம் ஒரு பெண்ணைப் பார்ப்பதினால் அவளுடைய குணம் தெரிந்துவிடுகிறதா! நான் நேற்று கைலாசம்—அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அழகான தோட்டம் அமைத்திருக்கிறார்கள். ஆனால் வீட்டில் நான் எதிர்பார்க்கும் அழகு இல்லை. தெரு வாசலில் கோலமில்லை. பெண்களின் நெற்றியில் குங்குமம் இல்லை, பேச்சில் நயமில்லை, வீட்டில் விளக்கில்லை. நான் சென்றது அந்தி மங்கும் நேரம்" என்று ஆரம்பித்து அவன் தான் அங்கு கண்டவற்றை விவரமாக எழுதினான்.

"அவர்கள் மேல் நாட்டு நாகரிகத்தில் மிகவும் பற்றுள்ளவர்கள் என்று தெரிகிறது. எனக்கு மாமியாராகவும், மனைவியாகவும், மைத்துனியாகவும் வரப் போகிறவர்கள் கதவிடுக்கில் மறைந்து நின்று கொண்டு பேசவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; அதை நான் விரும்பவும் இல்லை. ஆனால் நம்முடைய வீட்டுக்கு வரும் பெண்ணை நாம் கிருஹ லக்ஷ்மியாக அல்லவா கொண்டாடுகிறோம்! அவள் அவலக்ஷணங்களைக் கொண்டாடலாமா!

"மேல் நாட்டவர்கள் நெற்றியில் பொட்டிடாமல் இருக்கலாம். வாசலில் சாணி தெளித்துக் கோலம் போடாமலும் இருக்கலாம். ஆனால் அவர்கள் தங்கள் சம்பிரதாயங்களைத் துறந்து விடுவதில்லை. கணவனிட்ட மோதிரத்தை வேறு விரலுக்குக் கூட மாற்றுவதில்லை. கல்யாணத்தன்று கறுப்பு ஆடை அணிவதில்லை. வீடு தேடி வந்தவர்களை அவர்கள் அவமதிப்பதில்லை. அவர்கள் பண்டிகையன்று வீட்டை வெறிச்சிட வைத்துக் கொள்வதில்லை.

"நான் அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது கண்ட காட்சி என்னை எண்ணாததெல்லாம் எண்ணும்படி செய்து விட்டது. என் மனதைக் கைப்புக் கொள்ளச் செய்து விட்டது. உங்கள் நண்பரின் பெண் எனக்குப் பிராப்தமில்லை.

"எனக்காகத் தாங்கள் பார்க்கும் பெண்ணை நான் பார்க்க வேண்டியதே யில்லை. நீங்களும் அம்மாவும் போய்ப் பார்த்து விட்டு வந்து நிச்சயம் செய்தால் எனக்குத் திருப்திதான்.

"நான் இனி அவர்கள் வீட்டுக்குப் போகமாட்டேன். நீங்களே அவர்களுக்குத் தெரியப்படுத்தும் விதத்தில் தெரியப் படுத்தி விடுங்கள்" என்று ஸ்ரீதரன் அந்தக் கடிதத்தில் எழுதி முடித்தான்.

தகப்பனுருக்கு எழுதிய கடிதத்தை ஒரு முறை ஸ்ரீதரன் படித்துப் பார்த்தான். பிறகு அதை உறையில் போடுவதற்காகத் திரும்பிய பொழுது வாசலில் 'டக்' 'டக்' என்ற செருப்பின் ஒலி கேட்டது. தனது காரியத்தையும் மறந்து அவன் வாசலை நோக்கினுன்.

அப்பொழுது ராமன் அங்கே வந்து நின்றுன், பழக் கூடைகளுடன். "அப்பா, உங்களை அழைத்து வரச் சொன்னுர். ஏதோ பேச வேண்டுமாம்" என்றுன் அவன்.

ஸ்ரீதரனுக்கு ஏனோ மிகக் கோபம் வந்து விட்டது. "நான் இன்று மாலையே திருவனந்தபுரம் போகவேண்டும், மன்னிக்கவும்" என்றுன் அவன்.

"இல்லை, உங்களுடன் முக்கியமான விஷயம் ஏதோ பேச வேண்டுமாம்" என்றுன் ராமன்.

"என்னை மன்னிக்கவேண்டும், ராமன்! இந்தப் பழங்களையும் கொண்டு போய் விடுங்கள். இங்கே யாருக்குமே அவை பிடிக்காதாம். என் தகப்பனுர் உங்கள் தகப்பனுர் கேட்பதற்குப் பதில் எழுதுவார்" என்றுன் ஸ்ரீதரன்.

அச்சமயம் ஸ்ரீதரனின் நண்பர்கள் யாருமே அங்கிருக்க வில்லை. எனவே, ராமன் சற்றுத் துணிவாகப்பேசினுன். "உங்களுக்குச் சாந்தாவைப் பிடித்திருக்கிறதல்லவா! அதை நேரடியாகவே தெரிவிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லையே!" என்று கேட்டான்.

"அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா! சரி, இதோ என் தகப்பனுருக்கு நான் எழுதிய பதில். உங்கள் அப்பாவிடம் கொடுத்து விடுங்கள்" என்று கூறிக் கடிதத்தை அவனிடம் நீட்டினுன் ஸ்ரீதரன்.

ராமன் அதைப் பெற்றுக் கொண்டு தன் வீட்டுக்குப் போய் விட்டான்.

அன்று மாலை ஸ்ரீதரனும் நண்பர்களும் திருவனந்தபுரம் செல்லும் வண்டியில் அமர்ந்திருந்தனர். கைலாசம் வந்து அவனை அழைத்தார். ஸ்ரீதரன் வண்டியை விட்டு இறங்கி அவரைத் தொடர்ந்தான். அவர் சற்று அப்பால் சென்றதும் காலையில் ஸ்ரீதரன் கொடுத்த கடிதத்தைத் திருப்பி அவனிடமே கொடுத்தார்.

"நேற்று ஏதோ வெள்ளிக் கிழமை. என்னைத் தேய்த்துக் குளித்தவர்கள் கைகளைப் போட்டுக் கொள்ள வில்லை" என்று ஆரம்பித்தார் கைலாசம்.

"மாமா, என்னை மன்னிக்க வேண்டும். அப்பாவுக்கும் உங்களுக்கும் உள்ள சிநேகத்துக்கு ஒரு குறைவும் வராது. இந்தப் பந்தம் இருந்தால் தானு நட்பு நீடிக்க முடியும்! என் மனசு தங்கள் பெண்ணை ஏற்க வில்லை. வெள்ளிக் கிழமை மாலைதான் லக்ஷ்மியைக் கொண்டாடுவார்கள். மேலும் நான் வந்தேன். நடை, உடை பாவனையிலிருந்து என்னைப்பற்றி ஒரு கண்யமான மனிதன் என்று தங்கள் குழந்தைகளால் தெரிந்துகொள்ள முடியவில்லை. வீட்டைத் தேடி வந்தவனை இன்முகத்துடன் அழைக்க வில்லை. அதற்குப் பதிலாகத் தேங்காய் திருடுவதற்குச் சுவரேறிக் குதித்தவனை மிரட்டுவது போல் ராமன் 'யார், யார்' என்று என்மேல் சீறி விழுந்தார். தங்கள் மூத்த பெண் ஒரு ஆடவன் இருக்கிறுன் என்று கவனித்தும் அடக்கமற்று உட்கார்ந்து உதாசீனம் புரிந்தாள். அதற்கு அவள் அளித்த பதிலை நீங்களே கேட்டீர்கள்" என்றுன் படபட வென்று.

"என்ன சொல்வது அப்பா! நாகரிகம் என்று நினைத்துக் கொண்டு அப்படி யெல்லாம் வளர்ந்து விடுகிறுர்கள், குழந்தைகள்!"

"இருக்கலாம். வீட்டைத் தேடி வந்தவன், தங்களிடம் யாசகத்துக்கு வந்தவனுகவே இருக்கட்டும், அவனை ஒரு மணி நேரம் கவனிப்பாரற்று விட்டு விடவேண்டுமா! அவனும் ஒரு மனிதன்தானே! நீங்கள் வருத்தப்பட வேண்டாம். என் மனசில் அபசகுனமாகப் பட்டு விட்டது. இதோடு பேச்சை விட்டு விடுவோம். பதினெட்டு வருஷமாகத் திருந்தாத பெண்கள் இனி திருந்தவே மாட்டார்கள். என் மனைவி வெள்ளிக்கிழமை மாலை உங்கள் வீட்டில் இருந்தபடி இருந்து, யாரேனும் அவளை வித்தியாசமாக நினைக்க நேரிட்டால் என் மனம் என் ஆயுள் முழுவதும் அச்சத்துடனேயே தவிக்கும். எனக்கு நிம்மதியே இராது" என்றுன் ஸ்ரீதரன்.


மணி அடித்து விட்டது. ஸ்ரீதரன் வண்டியில் ஏறிக் கொண்டான். கைலாசம் வாடிய முகத்துடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றுர்.

'பாவம், நல்ல மனிதர், ஆனுல் குடும்பத்தை நல்லபடியாக நடத்திக் கொண்டு வரத் தெரியவில்லையே!' என்று நினைத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

"என்னடா, உன் மாமனுர் பழங்கள் கொடுக்காமலேயே ஏமாற்றி விட்டாரே!" என்று அவனைக் கேட்டார்கள் அவன் சிநேகிதர்கள்.

"மாப்பிள்ளையாகப் போகிறவர்களுக்குத்தான் கொடுப்பாராம். உங்களில் யாருக்குச் சாந்தா வேண்டும்! சொல்லுங்கள், சிபார்சு செய்கிறேன்" என்றுன் ஸ்ரீதரன்.


மற்றவர்கள் அவனை வியப்புடன் நோக்கினர். அவன் அதற்குமேல் ஒன்றுமே சொல்லவில்லை. அதற்குள் வண்டியும் நகர்ந்தது!



நீங்கள் இன்று உங்கள் பற்களை


மக்ளீன்

செய்தீர்களா?



ஆம், அதன் இரகசியம் இதுதான்...

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம்: பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமண முள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீனிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.



க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-37-TAM.



13. காதலர் உலகம்

“என்ன? என் கணவரைப் பட்டப் பகலில் வந்து கவர்ந்து சென்றுவிடப் போகிறாயா?” என்று கேட்ட கோகிலா கலுக்கென்று சிரித்தாள். விஜயலக்ஷ்மி என்னவோ அந்த வாக்கியத்தைச் சொல்லி விட்டாளே யொழிய, சொன்ன பிறகுதான் அவளுக்கு அந்த வாக்கியத்தின் பொருள் தெளிவாக விளங்கியது. ஜகதீசைக் கவர்ந்து செல்லப் போகிறேன் என்று சொல்லி அவள் தன் உள்ளத்து உணர்ச்சியை அல்லவா கோகிலாவிடம் கொட்டி விட்டாள்!

இளம் பெண்கள் தங்களுக்குள் எப்படிப் பேசிக் கொள்வார்கள் என்பதை அறிந்தவர்களுக்கு விஜயலக்ஷ்மியின் இந்தப் பேச்சில் ஒரு புதுமை தோன்றாது. ஆனால் அந்த வாக்கியத்தைச் சொல்லிமுடித்தபிறகு விஜயலக்ஷ்மிக்கே தன் சொல்லில் முற்றிலும் ஒரு புதுமை தொனிப்பதாகத் தோன்றியது. ‘நான் என்ன சொன்னேன்? அடா! இப்படிப் பேசி விட்டேனே! உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே வெளியிட்டு விட்டேனே! ஆகா! எவ்வளவு சரியாகச் சொல்லி விட்டேன், இந்த வார்த்தையை! ஆமாம், இந்த ஆடவனைக் கவர்ந்து செல்ல வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுவானேன்?’

இவ்வாறு எண்ணியவாறே விஜயலக்ஷ்மி தலை நிமிர்ந்து கோகிலாவைப் பார்த்தாள். மாசுமறுவற்ற உள்ளம் படைத்த மனைவி கணவனின் நினைவுக் கனவில் மூழ்கி மயங்கி உட்கார்ந்திருந்தாள். ‘ஆகா! என்ன கள்ளங்கபடமற்ற உள்ளம்!’ என்று வியந்தது விஜயலக்ஷ்மியின் உள்ளம்.

கோகிலா ஈரக் கைக் குட்டையை ஜகதீஷின் தலையில் ஒற்றி ஒற்றி எடுப்பதை மட்டும் நிறுத்தவில்லை. அவள் கைக் குட்டையைத் தன் கை விரல்களால் லாகவமாகப் பிடித்திருந்த முறையே தன் உள்ளத்து மென்மை முழுவதையும் தன் விரல்கள் வழியே ஜகதீஷின் சிரசில் செலுத்துவது போலிருந்தது.

‘பாவம்! இந்தப் பேதையின் கணவனை யாராவது கவர்ந்து சென்றால் இவள் மனம் என்ன பாடு படும்? கவர்ந்து செல்பவர்களுக்கு எத்தகைய பாவம் சம்பவிக்கும்?’

ஜகதீஷுக்குக் கோகிலா செய்து கொண்டிருந்த பணிவிடைக் காட்சியைக் கண்ட விஜயலக்ஷ்மியின் மனத்திலே இரக்கம் ஊற்றெடுத்துப் பரிதாப உணர்ச்சியைப் பொங்கச் செய்து மேற்கூறியவாறு சிந்திக்க வைத்தது.

இதே சமயம் வாசற் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அடுத்த சில கணங்களுக்கெல்லாம் விஜயலக்ஷ்மியின் வீட்டு வேலையாள் டாக்டரை அழைத்துக் கொண்டு

உள்ளே வந்தான். டாக்டர் வந்ததும் நோயாளியைப் பரிசோதித்தார். ஜுரம் மிகக் கடுமையாக இருந்தது. ஜுர வேகத்தில் ஜகதீஷ் தன் நிலை மறந்து மூர்ச்சையுற்றுக் கிடந்தான்.

நோயாளிக்குச் சூடும் அதிகம் படக் கூடாது. குளிரும் அதிகம் ஏற்படக் கூடாது. உடலில் களைப்பு ஏற்படக் கூடாது. களைப்பு ஏற்பட்டால் இருதயத்தைப் பாதிக்கும்.

இவ்வாறெல்லாம் எச்சரிக்கை செய்த டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்தார். பிறகு தாமே மருந்து கொடுத்து அனுப்புவதாகக் கூறி வேலையாளையும் தம்முடன் கூட்டிச் அழைத்துக் கொண்டார்.



மாதா மாதம் பில் அனுப்பி லால்ஜியின் வீட்டிலிருந்து டாக்டர் பணம் வாங்கிக்கொள்வது வழக்கம். அதனால் அவர் கட்டணத்தைப்பற்றிய பிரச்னையே அங்கு எழவில்லை. அதைப் பற்றி அவர் கவலைப்பட்டதாகவும் காட்டிக் கொள்ள வில்லை. இருந்தாலும் கோகிலா வந்த டாக்டரை வெறுங் கையோடு அனுப்ப மனம் இல்லாமல் பணம் கொண்டு வந்து கொடுத்தாள். டாக்டர் எத்தனை ஏது என்று எண்ணிப் பாராமலேயே அவள் கொடுத்த பணத்தை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டார்.

பணம் பைக்குள் சென்றதும் டாக்டரின் முகத்தில் பரோபகார சிந்தனை பீறிட்டுக் கொண்டு வெளியாகியது. அவர் கோகிலாவைப் பார்த்து, "கவலைப்படக்கூடிய விஷயம் ஒன்றும் இல்லை. ஜுரம் சீக்கிரமே இறங்கி விடும். தேவை ஏற்பட்டால், எந்த நேரமாயிருந்தாலும் என்னைக் கூப்பிடுங்கள். சிறிதும் யோசிக்காதீர்கள்!" என்றார்.

பிறகு விஜயலக்ஷ்மியைப் பார்த்து லால்ஜி ஸேட்டைப் பற்றி விசாரித்து விட்டு டாக்டர் விடை பெற்றுக் கொண்டார்.

மாலைப் பொழுது வந்தது. அது வெகு சீக்கிரமாகவே இரவாகவும் மாறி விட்டது. ராதாவுக்கு இந்த வைத்தியம் எல்லாம் ஒன்றும் புரிபடவில்லை. 'ஜுரம் வந்தால் இவ்வளவு கெடுபிடியும் பரபரப்பும் காட்டுவானேன்? இவ்வளவு மனம் குழம்புவானேன்?' என்றுதான் அவளுக்குத் தோன்றியது. ஆனால் விஜயலக்ஷ்மியைப் போன்ற பணக்காரப் பெண்மணியும் கோகிலாவைப் போன்ற கல்வி கேள்விகளில் சிறந்த பெண்மணியும் இத்தனை பிரயாசை எடுத்துக் கொள்ளவே, அவளுக்கு நிலைமை கம்பீரமாகத்தான் இருக்க வேண்டும் என்று பட்டது. எனவே, நிலைமையை அனுசரித்து அவளும் கம்பீரமே உருவானாள். அதற்கேற்றவாறு செயல்களிலும் இறங்கினாள். நன்றாக இருட்டிவிடவே, ராதா எழுந்து சென்று விளக்கு ஏற்றினாள்.

அதே சமயம் ஒரு ஆள் விஜயலக்ஷ்மியிடம் வந்து, "எசமானர் வந்து விட்டார். உங்களைக் கையோடு கூட்டி வரச் சொன்னார்!" என்ற தகவலைச் சொன்னான்.

"வருகிறேன், போ!" என்று வெகு அலட்சியமாகப் பதில் சொன்னாள் விஜயலக்ஷ்மி.

ஸேட் என்னும் சொல் விஜயலக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லை. எனவே, அவள் தன் வேலைக்காரர்களுக்கு 'எசமான்' என்றோ 'ஐயா' என்றோதான் கூப்பிட வேண்டும் என்று கடுமையான உத்தரவு போட்டிருந்தாள்.

அந்த நேரத்தில் அவளுக்கு அங்கிருந்து எழுந்து செல்லப் பிடிக்கவில்லை. அவளை அப்பொழுது அங்கேயே உட்கார்ந்திருக்க அநுமதித்தால் அவள் தன் கணவருக்கு எல்லையற்ற நன்றி தெரிவித் திருப்பாள். ஆனால் சமூகம் எத்தனையோ தொடர்புகளைக் கூறி அத்தொடர்புகளைச் சம்பிரதாயத்தின் மூலமாகக் காபந்து செய்து காத்து ரட்சிக்க அல்லவா செய்கிறது!

இரவு நேரத்தில் தன் வீட்டை விட்டுப் பிறர் வீட்டில் போய் மனைவி உட்கார நினைத்தால் கணவன் அதை நல்ல கண்கொண்டு பார்ப்பானா? அப்படியே அவன் பார்க்க நினைத்தாலும் அது முடியக் கூடிய காரியமா? சமூகம் சும்மா விட்டு விடுமா?

ஆயினும் அவள் அந்த வேளையில் பக்கத்து வீட்டுக்காரிக்கு உள்ள கடமையைத்தான் செய்து கொண்டிருந்தாள். சமூகத்தின் சட்ட வரம்புக் குட்பட்டு விதிவிலக்கும் உண்டல்லவா? பக்கத்து வீட்டில் ஒருவருக்கு உடம்பு சரியில்லையென்றால் ஒருவர் போகாமல் பேசாமல் பார்த்துக் கொண்டு தன் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க முடியுமா?

உடல் நலம் சரியில்லாததால் ஜகதிஷுக்கு அவள் உதவிபுரிந்தாள். அது நியாயம்தான். ஆயினும் இரவு முழுவதும் அவள் அங்கே உட்கார்ந்திருக்க வேண்டிய அவசியம் ஒன்றும் வந்து விடவில்லையே! எனவே, அவள் எழுந்திருக்க மனமின்றி இருந்த பொழுதிலும் விதியே என்று எழுந்தாள். எத்தனையோ விஷயங்கள் சொல்லிக் கோகிலாவை ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னாள். பிறகு புறப்பட்டுப் போகும் போது ஜுரம் எப்படி இருக்கிறது என்று அறியும் சாக்கில் ஜகதீஷின் தலையில் மறுபடியும் கைவைத்துப் பார்த்தாள்.

"ஜுரம் இன்னும் அப்படியே இருக்கிறதே!" என்று சொல்லி ஜகதீஷின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள்.

ஜகதீஷ் கண்களைத் திறந்து எதிரே நின்று கொண்டிருந்த விஜயலக்ஷ்மியைப் பார்த்தான். பிறகு மெதுவான குரலில், "அட, இன்னும் நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா? பாவம்! எனக்காக எத்தனை கவலைப் படுகிறீர்கள்? எத்தனை சிரத்தை எடுத்துக் கொள்கிறீர்கள்?" என்றான் உபசாரமாக.

விஜயலக்ஷ்மியின் உடல் முழுவதும் ஒரு முறை வேகமாக ரத்தம் ஓடியது. மயிர்க்கால் முதற்கொண்டு ஒரு தடவை நடுங்கியது. அவளுடைய இருதயப் பூங்காவிலே தண்ணிலவு பொழியும் வெண்ணிலவு, இன்பகீதம் இசைக்கும் குயில், மந்த மாருதத்தோடு மதிமயக்கும் நறுமணத்தைக் கலந்து நாற்திசையும் பரப்பும் நறுமலர் ஆகியவை ஏககாலத்தில் தோன்றின. அவளுக்குப் புளகாங்கிதம் ஏற்பட்டது; உடல் முழுவதும் ஒருமுறை புல்லரித்தது. அடுத்த நிமிஷம் அவளுக்குத் தன் நாக்குப் பேசும் திறனை இழந்து விட்டதாகத் தோன்றியது. இருந்தாலும் மிகுந்த சிரமப்பட்டு, "அதற்காக என்ன?" என்றாள்.

ஜகதீஷ் மறுபடியும் தூங்கி விட்டான். கனமான கருங்கல்லைக் கட்டி விட்டது போன்றிருந்த தன் கால்களை விஜயலக்ஷ்மி வெகு சிரமப்பட்டுத் தூக்கி அடி பெயர்த்து வைத்தாள். பிறகு தன் வீட்டுப் புழக்கடை வழியே வீட்டுக்குப் போகலானாள். விஜயலக்ஷ்மியின் கையோடு கைகோத்துக்கொண்டு கோகிலா கொஞ்ச தூரம் சென்றாள். பிறகு, "அக்கா! அடிக்கடி வந்து கொண்டிரு!" என்று கூறி வழி அனுப்பினாள்.

ராதா விளக்கை எடுத்துக் கொண்டு விஜயலக்ஷ்மிக்கு வழிகாட்டச் சென்றாள். திரும்பி வந்த பின் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு கோபத்துடன், "இவளும் ஒரு பெண் மாதிரி! அடிக்கடி அண்ணாவைத் தொட்டுத் தொட்டு எழுப்பிக் கொண்டிருந்தாளே, எதற்காக?" என்றாள்.

கோகிலாவுக்குச் சிரிப்பு வந்தது. ராதாவின் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்? அறியாத ஜனங்களிடையே இம்மாதிரித் தொட்டுப் பழகுவதைப் பற்றி எத்தனை எத்தனையோ சட்ட திட்டங்களும் நீதி நெறிகளும் வழங்கி வருகின்றன என்பதைக் கோகிலா நன்கு அறிந்திருந்தாள். ஆனால் அவளுக்குத் தன்னிடமும் தன் கணவரிடமும் மிக மிக உறுதியான நம்பிக்கை இருந்தது. அதன் காரணமாக விஜயலக்ஷ்மியின் செயல்கள் அவளுக்கு அத்தனை அநுசிதமானவையாகவோ, நிமை தோய்ந்தவையாகவோ படவில்லை. அதை ராதாவுக்கு விளங்கும்படியாக அவள் எப்படிக் கூறுவது? எனவே, வாய்மூடி மௌனம்சாதித்தாள்.

இரவு முழுவதும் கோகிலா கண் விழித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். இரவு மூன்று மணி இருக்கும். அவள் ஜகதீஷுக்கு மருந்து கொடுத்தாள். ஜுரம் இறங்கத் தொடங்கியிருந்தது. அவன் சிறிது சுய உணர்வு பெற்றிருந்தான். கோகிலாவைப்பார்த்து, "நீ இன்னும் தூங்க வில்லையா, என்ன?" என்று கேட்டான்.

"தூக்கம் வந்தால், தானே தூங்குகிறேன்!" என்றாள் கோகிலா.

"இரவு மணி மூன்று அடித்து விட்டதே. இன்னுமா உனக்குத் தூக்கம் வரவில்லை?" என்றான் ஜகதீஷ் மறுபடியும்.

"தூக்கம் வரவில்லையென்றால் நான் என்ன செய்வது?" என்றாள் கோகிலா.



"தூக்கம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நீ படுத்துக் கொள். இப்படி உட்கார்ந்திராதே!" என்றான் ஜகதீஷ்.

"உங்களுக்கு ஏன் இந்தக் கவலை எல்லாம்? நீங்கள் பேசாமல் கண்களை மூடிக் கொண்டு தூங்குங்கள்!"

"நீ தூங்கவில்லையென்றால் நானும் தூங்க மாட்டேன். நானும் எழுந்து உட்கார்ந்து விடுவேன்!" என்று சொன்ன ஜகதீஷ் சட்டென்று எழுந்து உட்கார முயன்றான்.

"வேண்டாம், வேண்டாம்! நீங்கள் எழுந்து உட்காராதீர்கள். படுத்தே இருங்கள். நானும் படுத்துக் கொள்கிறேன்!" என்று சொன்ன கோகிலா படுக்கையில் படுத்தாள்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் பற்றி யாரும் வரலாறு எழுதுவதில்லை. ஆனால் ஒவ்வொரு கணமும் காதலர்களின் வாழ்க்கையிலே எத்தகைய இன்ப தேனைப் பொழிகிறது என்னும் விஷயத்தைக் காதலர்களைக் கேட்டால்தான் — இல்லை, இல்லை — காதலர்களாக ஆனால்தான் தெரிந்துகொள்ள முடியும். இன்பமாரி பொழியும் கணங்கள் கனவுத் திரையிலிருந்து எத்தனையோ தடவைகள் தேய்ந்து மறைந்து விடுகின்றன. அப்படி அவை தேய்ந்து மறையா விட்டால் வாழ்க்கை வாழும் வழி உடையதாக ஆகுமா? வாழ்க்கையில் இன்பக் கணங்கள் மறைய மறைய வாழ்க்கை மேலும் மேலும் தித்திக்கிறது என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

"ஆமாம், வீணில் எதற்காக இப்படிச் சுற்றி அலைகிறாய்?"

வீட்டுக்குள் நுழைந்த விஜயலக்ஷ்மியை இந்தக் கேள்வியுடன் வரவேற்றார் லால்ஜி ஸேட். அப்பொழுது அவர் மிகவும் களைத்துப் போய் மெத்தை தைத்த நாற்காலி ஒன்றில் சாய்ந்து கிடந்தார். மிகக் களைத்துப் போயிருந்த பொழுதிலும் அன்று என்னவோ அவர் முகத்தில் மட்டும் அலாதி மகிழ்ச்சி மிதந்து கொண்டிருந்தது.

"என்ன? என்ன சொன்னீர்கள்? வீணில் சுற்றி அலைகிறேனா? பக்கத்து வீட்டில் ஒருவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருக்கும்பொழுது, அவரைப் பார்த்து வரப் பத்து நிமிஷம் போயிருந்தால், அது வீண் அலைச்சல் ஆகும் என்று இன்று வரை எனக்குத் தெரியாமற் போய் விட்டதே!"

விஜயலக்ஷ்மி வள்ளென்று சீறி விழுந்தாள். லால்ஜி ஸேட்டுக்கு அவளிடமிருந்து அத்தகைய பதிலைக் கேட்க வேண்டி வரும் என்ற எண்ணமே கடுகளவும் எழவில்லை. எல்லோரும் கேட்பது போல் இயல்பாகவே தான் அவர் கேட்டு வைத்தார். விஜயலக்ஷ்மியிடம் குற்றம் கண்டு பிடிக்க வேண்டும் என்ற உட் பொருளுடன் அவர் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவள் தம் மெதிரிலேயே எப்பொழுதும் இருந்துகொண்டிருக்க வேண்டும் என்ற தீவிர ஆதுரத்தைக் காட்டவேதான் அவர் அம்மாதிரி கேட்டு வைத்தார். இத்தனை விபரீதமாக முடியும் என்று தெரிந்திருந்தால் அவர் அந்தக் கேள்வியை மறந்து போய் வாய் தவறிக் கூட அவளிடம் கேட்டிருக்க மாட்டார்.


"அடாடா! இந்தச் சின்னக் கேள்விக்கு இப்படித் தப்பர்த்தம் பண்ணிக் கொண்டு விட்டாயா? அப்புறம் நான் என்ன சொல்லுவது. போ!" என்றார் அவளைச் சமாதானம் செய்யும் நோக்கத்துடன்.


"சரியாகப் பேச வரவில்லையென்றால் வாயை மூடிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருப்பதுதானே?" என்றாள் விஜயலக்ஷ்மி.

அந்தப் பதில் காது கொண்டு கேட்க முடியாததாக இருந்தது அவருக்கு. சூடு—சொரணை, மானம்—மரியாதை என்று ஏதாவது உள்ள புருஷனாக இருந்தால் பெண்களுக்குப் பெருமை அளித்துத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு குதிக்கக் கூடாது, வைக்கிற இடத்தில் வைத்தால்தான் அவர்கள் வழிக்கு வருவார்கள் என்ற முடிவுக்கு வந்திருப்பான். எதற்கும் ஒரு எல்லை வேண்டும் என்று எண்ணியிருப்பான். இருந்தாலும் லால்ஜி ஸேட் அவளுடைய அந்தப் பதிலை வேப்பிலை உருண்டையைப் போல் விழுங்கி விட்டார்; வெகு சிரமப்பட்டுப் பொறுத்தும் கொண்டார்.

"ஏன் விஜயா, இன்று உனக்கு என்ன வந்து விட்டது? எடுத்ததற்கெல்லாம் என் மேல் கோபித்துக் கொள்ளுகிறாயே! என்ன காரணம்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து அவர் விஜயலக்ஷ்மியின் அருகில் போய் நின்றார். விஜயலக்ஷ்மியின் மதிமயக்கும் முகத்தைக் கூர்ந்து கவனித்த அவருக்கு, அவள் காதுகளில் லோலக்கு இல்லாத குறை சட்டென்று புலனாகியது. "ஆமாம், இன்று லோலக்குகளைக் கழற்றி வைத்து விட்டாயே, ஏன்?" என்று கேட்டார்.

பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் லால்ஜி தன்னைத் தொடாமல் இருக்க வேண்டுமே என்று விஜயலக்ஷ்மி பயந்தாள். அந்தப் பயம் அவளையும் மீறி அழுகையை வருவித்து விட்டது. அவள் கண் சிவக்கக் கேவிக் கேவி அழத் தொடங்கி விட்டாள். அழுகை பயத்தைக் குறைத்து விடும் என்பது அவள் எண்ணம். ஆனால் அது பயத்தைக் குறைப்பதற்குப் பதிலாகப் பன்மடங்கு அதிகரிக்கச்செய்து விட்டது. அவள் பயந்தது போலவே, கணவனின் முழு உரிமையுடன் லால்ஜி ஸேட் அவளுடைய முதுகைத் தம் கையினால் தடவிக் கொடுத்தார். விஜயலக்ஷ்மிக்கு அது இன்னும் மன வேதனையை அளித்தது. எனவே, அவள் சட்டென்று தன் இரு கைகளினாலும் முகத்தையும் கண்களையும் மூடி மறைத்துக் கொண்டாள். அன்பு மேலிட நின்று கொண்டிருந்த ஆடவன் அதைக் காண்பதற்குச் சகிப்பானா? திரையிட்ட முகத்தைத் திறந்து பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டு அன்புடன் அவளுடைய கரங்களைப் பற்றினார் லால்ஜி. குரலில் குழைவு தாண்டவமாட, "ஏன், விஜயா! லோலக்குகள் உனக்குப்


வசீகரவனப்பிற்கு
ஆப்கான் ஸ்னோ
ஆசியாவின் தனிசிறந்த அழகு இரகசியம்
AFGHAN SNOW
ESP
Patanwala
for PERFUMES AND COSMETICS
BOMBAY-27
படான்வாலா - வாசனைத் திரவியங்களுக்கு


உல்லாஸ தம்பதிகள்
லோத்ரா
கர்ப்பாசய ரோக நிவாரணி
இன்பமுடன் இருந்துவரவே வாழ்க்கை.
மனைவி ஆரோக்கியமுடனிருந்தால் தம்பதி
உல்லாசமாய் இருக்கத் தடையென்ன?
பெண்களின் கர்ப்பாசய ரோகங்களை
நிவர்த்தி செய்து வாழ்க்கைக்கு மண
மூட்டுவது லோத்ரா.
கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ் 14
தமிழ் நாடு ஏஜண்டுகள்:
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேல கோபுர வீதி :: மதுரை
தேசிய திட்டக்கடன் பத்திரங்களை வாங்குங்கள்

பிடிக்கவில்லையா? போட்டுக் கொள்ளக் காணுமே? கழற்றி வைத்து விட்டாயே! லோலக்குகளுக்குப் பதிலாக வேறு ஏதாவது வேண்டுமா? வேண்டும் என்றால் ஏன் சொல்லாமல் இருக்கிறாய்? என்ன வேண்டுமோ, அதைக் கேட்டால்தானே எனக்குத் தெரியும்?" என்றார்.

ஒருவேளை விஜயலக்ஷ்மிக்குப் பழைய நகைகளை மாற்ற வேண்டும் அல்லது அழித்து வேறு ஏதாவது செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமாயிருக்கலாமோ? அதற்காகத்தான் அவள் இப்படி அடம் பிடிக்கிறாளோ என்று லால்ஜி ஸேட் எண்ணினார்.

லால்ஜிஸேட் தன்னைத் தொட்டதுதான் தாமதம்; விஜயலக்ஷ்மியின் அழுகை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அதை விட்டால் லால்ஜி ஸேட் தன்னைத் தொடாமல் இருப்பதற்கு அவளுக்குச் சரியான வேறு யுக்தியே தென்படவில்லை. தெரிந்த யுக்தியை உடனே கையாண்டு பார்த்து விடுவதுதானே நல்லது? விஜயலக்ஷ்மி தன் புடவைத் தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பிறகு இலேசாக ஒரு களுக்குச் சிரிப்புச் சிரித்து, "இது என்ன, குழந்தைப் பிள்ளைத்தனமாகப் பேசுகிறீர்களே! லோலக்கு ஆசை இவ்வளவு தூரமா ஒருத்திக்கு இருக்கும்?" என்று கேட்டாள்.

நகை ஆசை இல்லாத பெண் இந்தப் பூவுலகத்தில் உண்டா? அவள் வேண்டுமென்றே அந்தப் பொய்யைச் சொன்னாள். லால்ஜி பேசியதா சிறுபிள்ளைத்தனம்? அவள் பேசியதல்லவா சிறு பிள்ளைத்தனம்? அவள் பேசிய பேச்சு சிறுபிள்ளைத்தனம் தோய்ந்தது என்று தீர்மானிக்கப்பட்ட பொழுதிலும் வாழ்க்கையை ஒரு குறிப்பிட்ட வழி வகுத்துக் கொண்டு அதில் இட்டுச் செல்ல வேண்டும் என்று தீவிர நோக்கம் அன்று தன்னிடையே மிளிர்வதை அவள் உணர்ந்தாள்.

அவளுடைய அந்தப் பேச்சில் மகிழ்ந்து விட்ட லால்ஜி திரும்பவும் தம் நாற்காலியில் போய் உட்கார்ந்தார். "சரி! அப்படியானால் நீ எதற்கு இத்தனை நேரமும் அழுதாயாம்?" என்று அன்பொழுகக் கேட்டார்.

"வீணில் எதற்காகச் சுற்றி அலைகிறாய் என்று என்னை எதற்காக நீங்கள் கேட்டீர்களாம்? அதற்காகத்தான் அழுதேன்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

"ஓகோ! அப்படியா? அதற்காகவா இவ்வளவு அழுகை? ஆமாம், நான் ஒன்று கேட்டால் நீ கோபித்துக் கொள்ள மாட்டாயே! நீதான் என் கண்மணி ஆயிற்றே! அந்த மாதிரி யெல்லாம் கோபித்துக் கொள்ள மாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆமாம், நீ என்னைப் போல் ஒன்றுமே சொல்லுறதில்லை. இல்லையா? எனக்கு உன்னைப் போல் சர்க்கரையாகவும் சாதுரியமாகவும் பேச வருவதில்லை. என்னதான் கற்றுக் கொண்டாலும் எனக்கு இப்படித்தான் பேச வருகிறது. நான் என்ன செய்வது?" என்று காதல் கொஞ்சும் மொழிகளில் விஜயலக்ஷ்மியைப் பார்த்தவாறே கேட்டார் லால்ஜிஸேட்.

'நினைத்தபடி நமக்குப் பேச உரிமை கிடைத்து விட்டதே என்று எண்ணி லால்ஜி ஸேட் மறுபடியும் நம்மருகில் வந்து விட்டால் என்ன செய்வது?' என்ற பயம் மீண்டும் பயங்கரமாக விஜயலக்ஷ்மியை ஆட்கொண்டது. என்ன செய்வது என்று தீவிரமாக யோசனை செய்தாள். கடைசியில் பேச்சை மாற்றி, "ஆமாம், நீங்கள் வெகு நாழிகையாக எங்கேயோ வெளியில் போயிருந்தீர்களே! என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

இரண்டொரு மதிப்புக்குரிய பெரிய அதிகாரிகளையும் மக்களிடையே செல்வாக்குமிகுந்த இரண்டொரு பிரமுகர்களையும் பார்த்து வருவதற்காக லால்ஜி ஸேட் அன்று மாலை எங்கேயோ வெளியே போயிருந்தார்.

சொன்ன காரியத்தைச் சீக்கிரமே முடிக்க முயல்வதுதான் ஜுகல் கிஷோரின் சித்தாந்தம். லால்ஜி ஸேட் அவர்களைப் பார்க்க வரப் போகும் தகவலை முன் கூட்டியே சென்று அதிகாரிகளுக்கும் பிரமுகர்களுக்கும் அவன் தெரிவித்து விட்டான். லால்ஜி ஸேட் அவர்களிட மெல்லாம் சென்று அரசாங்க சபைக்குத் தாம் அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்ய விருப்பதாக சொன்னார். எல்லோருக்கும் அவருடைய பணத்தில் ஒரு கண் இருந்தது. எனவே, முதலில் எல்லோரும் கொஞ்சம் பிகு செய்வது போல் செய்து விட்டுக் கடைசியில் தேர்தல் விஷயத்தில் அவரோடு ஒத்துழைப்பதாகச் சம்மதம் தெரிவித்தனர்.

விவரத்தை விஜயலக்ஷ்மிக்குச் சொன்ன லால்ஜியின் முகத்தில் வெற்றி யொளி பளிச்சிட்டது. "காயா, பழமா என்ற கேள்விக்கே இனி இடம் இல்லை. கட்டாயம் பழம்தான். அப்புறம் என்ன நடக்கிறது என்று பாரேன்! நம் புகைப்படம் செய்தித்தாள்களில் எல்லாம் பிரமாதப்படப் போகிறது. எந்த மூலை முடுக்கில் போனாலும் நம்மைப் பற்றியே பேசுவார்கள்!" என்று கண்களைக் கணத்துக்கொருதரம் கொட்டிச் சொன்னார்.


'நாம்' என்ற சொல் லால்ஜி ஸேட் ஒருவரை மட்டுமே குறிப்பிடும் சொல்லாகத்தான் இவ்விடத்தில் உபயோகப்படுகிறது. இருந்தாலும், அவர் தமது மாபெரும் வருங்காலத்தை மனத்திற் கொண்டு, தம் பெருமைக்கு ஒருமை போதாது, பன்மைதான் வேண்டும் என்று தீர்மானித்துத் தெரிந்தே 'நாம்' என்னும் அந்தச் சொல்லை அழுத்தந் திருத்தமாக உபயோகப்படுத்தினார். தமது புகைப் படம் பத்திரிகைகளில் பிரசுரமாகும் என்ற கற்பனையில் மூழ்கி மகிழ்ச்சியில் மெய்ம் மறந்து நின்ற பொழுது அவருடைய முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. அவருடைய முகம் அவலக்ஷணமே உருவாக, மகா கோரமாகக் காட்சி அளித்தது.

அந்த விகாரத்தைக் கண்ட விஜயலக்ஷ்மிக்குத் துணுக்கென்றது. (தொடரும்)



பரம்பரை
குணமேன்மை
பண்டைக்காலத்திய கூந்தல் சிங்கா
ரங்கள் அன்றைப் போலவே
இன்றும், அழகாகவும் வசீகரமாக
வும் அமைகின்றன. இந்தியப் பெண்
மணிகள் தங்கள் கூந்தலுக்கு பள
பளப்பும் அழகும் ஊட்டுவதற்கு
டாம்கோ பரிமள கூந்தல் தேங்காய்
எண்ணையை இருபதாண்டுகளாக
பயன்படுத்தி வருகிறார்கள்.
டாம்கோ
பரிமள கூந்தல்
தேங்காய் எண்ணையும்
ஷாம்பூவும்
A TATA PRODUCT
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்
இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில்,
இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 25-8-1954 - நாகப்பட்டினத்திலிருந்து 26-8-1954

மாறுதலுக்கு உட்பட்டது

ஸலூன் இடவசதி முழுவதும் புக் ஆகிவிட்டது. ஆனால் கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனே அல்லது உணவு இன்றியோ பர்த் வசதி இல்லாத பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

கீழ்க்கண்ட பிரயாண மற்றும் ஆரோக்கிய பத்திரங்கள் தேவையாகும்.

1. மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்ட அனுமதி பர்மிட்டுடன் கூடியதும் செல்லக் கூடியதுமான ஒரு பாஸ்போர்ட். பாஸ்போர்ட்டில் கையெழுத்திடப்படா விட்டால், ஒரு தனி அனுமதி பர்மிட்டோ அல்லது குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட விஸிட்டர்ஸ் பாஸை பாஸ்போர்ட்டுடன் கொடுக்க வேண்டும். அல்லது மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட ரீ-எண்ட்ரி பர்மிட். (பாரம் 1-டி-64 அல்லது 65)

2. எல்லா ஸலூன், பர்த் வசதி இல்லாத பிரயாணிகளும் வருமான வரி ஆபீஸர்கள் ஒருவரிடமிருந்து (வெளி நாட்டுப் பிரிவு) முழு வருமான வரி செலுத்தியதற்கான அல்லது வரி விலக்கு சர்ட்டிபிகேட்டை, அவர்கள் வசிக்கும் வட்டாரத்து வருமான வரி ஆபீசரிடமிருந்து "ஏ" பாரம் வாங்கிக் கொண்ட பிற்பாடு பெற்று கொண்டு வரவேண்டும்.

3. சுகாதார சர்டிபிகேட்டுகள்: 1-7-54 தேதி முதல் எல்லா ஸலூன் மற்றும் பர்த் வசதியற்ற பிரயாணிகள் காலரா தடுப்பு ஊசியும் வைசூரி அம்மை வராமலிருப்பதற்காக ஊசியும் போட்டுக் கொண்டதற்கு இந்திய அரசாங்கத்ினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாரங்களில் சர்டிபிகேட் பெறுவதுடன் அதில் கீழ்க்கண்டுள்ள சுகாதார அதிகாரிகளில் ஒருவருடைய அத்தாட்சியும் பெற்றிருக்க வேண்டும்.

டைரக்டர், டிபுடி டைரக்டர், டிபுடி அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அல்லது கார்ப்பொரேஷன் முனிஸிபாலிடி, ஸ்தல ஸ்தாபனங்களின் சீப் மெடிகல் ஆபீஸர்ஸ், அட்மினிஸ்ட்ரேடிவ் மெடிகல் ஆபீஸர்ஸ், டிஸ்ட்ரிக் மெடிகல் ஆபீஸர்கள் அல்லது கவர்ன்மெண்ட் முனிஸிபல் மற்றும் டிஸ்ட்ரிக்போர்ட் அலோபதிக் ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகளின் மெடிகல் ஆபீஸர்-இன்-சார்ஜ்.

மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளில் ஒருவரின் அத்தாட்சி பெற்ற சர்டிபிகேட்டுகளே பிரயாண டிக்கட்டுகள் வழங்குவதற்கு உரியது என ஒப்புக் கொள்ளப்படும்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலான இடங்களுக்கு நேரடியாக சரக்குகளின் ஏற்றுமதி ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதுக:

பின்னி & கோ., (மதராஸ்) லிட்.	**மதுரா கம்பெனி லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

வட்ட மேஜை

கவனிக்குமா?

"தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து 80 மார்க்குகள் இருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொன்றிலும் 35 மார்க்குக்குக் குறையக் கூடாது. அதேபோலக் கணிதம், விஞ்ஞானம், சமூக அறிவு ஆகிய மூன்றிலும் சேர்ந்து 100 மார்க்குகள் இருக்க வேண்டும். ஆனால் ஏதாவது இரண்டில் ஒவ்வொன்றிலும் 35 மார்க்குக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்" —எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்ச்சி பெற இதுதான் விதி என்று பலர் கூறுகின்றனர். இவ்விதிதான் இத்தனை நாள் வழக்கத்திலிருந்தது. அதன்படி இதற்கு முன்பு பலர் தேறியிருக்கின்றனர். ஆனால் சமீபத்தில் நடந்த எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் பலர் எல்லாப் பாடங்களிலும் 40 மார்க்குக்கு மேலும் ஆங்கிலத்தில் 35 மார்க்கும் பெற்றுந் தோல்வி அடைந்திருக்கின்றனர். அந்தத் துரதிர்ஷ்டசாலிகளில் நானும் ஒருவன். இன்னும் சிலருக்கு ஆங்கிலத்தில் 36 மார்க்குகள் பெற்றும் வெற்றி கிட்டவில்லை.

இந்த விதிப்படி பார்த்தால் நாங்கள் வெற்றி பெறுவதற்குத் தகுதி யுடையவர்கள். ஆனால் வெற்றி பெறாததற்குக் காரணமென்ன! இதைப் பற்றிப் பள்ளியின்மூலமாகச் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு எழுதிக் கேட்டதற்குப் பதில் இல்லை.

எங்களுடைய ஓராண்டுப் படிப்பை வீணுக்கு வது நியாயமா! எங்கள் உடைந்த உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கப்படுமா!

பேரணாம்பட்டு
10—7—54

ப. கஜேந்திரன்

●

குடிசைத் தொழில்

நான் தீப்பெட்டி செய்யும் பெரிய ராக்ஷசத் தொழிற்சாலை ஒன்றைப் பார்த்திருக்கிறேன். அதில் அனேகமாக எல்லாம் சிறிய சிறிய யந்திரங்கள்தான். ஆனால் அவைகளில் முக்கியமான யந்திரம் ஒன்று மட்டும் மிகவும் பெரியது. அதன் மூலதனம் குறைந்தது பல லட்சம் ரூபாய்களுக்குச் செல்லும். அந்த யந்திரம்செய்யும் வேலை என்ன வென்றால், அதுதான் குச்சி நுனியில் மருந்து ஒட்டச் செய்து காய வைக்கிறது. இவ்வளவு சிறிய அல்லது மிகவும் பெரிய வேலையை நம் சிவகாசி, சாத்தூர் தொழிற்சாலைகளில் (அதுதான் குடிசைச் சாலைகளில்) மூலதனம் எதுவும் இல்லாமலேயே வீட்டில் பெண்டிர், குழந்தை முதலியவர்கள் குச்சிகளைப் பிரேமில் அடுக்கித் தொழிற்சாலைகளில் கையாலேயே ஒட்ட வைத்துச் செய்வதைப் படித்தவுடன் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது!

தாங்கள் அடிக்கடி 'கல்கி' தலையங்கப் பகுதியில் கூறியிருப்பது போல் அந்த இயந்திரம் செய்ய, அதை வெளி நாட்டிலிருந்து வரவழைக்க, அதை இந்த நிலைநாட்ட, அதை ஓட்டுவதற்கு மின்சாரம் முதலியவைகளுக்காக ஆகும் செலவோ ஏராளம். அந்த இயந்திரத்தில் வேலை செய்பவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால், ஐந்து பேர்தான். செலவு செய்ததோ பல லக்ஷம் ரூபாய்கள்! இந்த வேலையை இயந்திரம் இல்லாமல் செய்தால் பல பேர்கள் செய்ய வேண்டியதுதான். இல்லை என்று சொல்ல வில்லை. கணக்குப் பார்த்தால் அந்த இயந்திரத்தின் விலை பல ஆயிரம் பேர்களின் சம்பளங்களைவிட அதிகமாகத் தானிருக்கும்.

நம் நாட்டிலிருக்கும் ஆள் பலத்துக்கு இம்மாதிரியான தொழில்களைப் பெரிய தொழிற்சாலைகளில் செய்யவே கூடாது என்று உத்தரவிட வேண்டும்.

சர்க்கார் ரிபேட் கொடுப்பதைப் பற்றி எழுதியிருப்பதைப் பார்த்தவுடன் வேடிக்கையாக இருக்கிறது. சர்க்கரை ஆலைகளில் இத்தனை மூட்டைகளுக்கு மேல் உற்பத்தி செய்தால் சர்க்கார் கலால் வரி குறைக்கப்படு மென்று கடந்த இரண்டு வருடங்களாக அறிக்கை விட்டு அதே போல் வரியையும் குறைத்திருக்கிறார்கள்.

தீப்பெட்டி செய்யும் இடங்களில் குறைந்த அளவில் செய்தால்தான் ரிபேட் கொடுக்கப்படுகின்றது என்பதைப் பார்த்தால் ஒன்றுக்கு ஒன்று எப்படி முரணாக இருக்கிறது.

தீப்பெட்டி செய்வது போலவே தமிழ் நாட்டின் வட பகுதியில் பீடி செய்தல் ஒரு பெரிய குடிசைத் தொழிலாக இருக்கிறது.

அனேக லட்சம் பேர்கள் இதைத் தங்கள் வீடுகளில் செய்கிறார்கள். தீக்குச்சியைப் போலவே, பெண்டிர்கூடச் செய்கிறார்கள். இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்தால் அனேகம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். தவிர சிகரெட் பெட்டியில் போட்டு வருவது போல், பீடியையும் சிறிது முக்கோணமான பெட்டியில் போட்டு வெளிக்குப் பாங்காக இருந்தால், அனேகம் பேர்கள் இதை உள்நாட்டில் வாங்குவதோடல்லாமல் வெளி நாடுகளுக்கும் அனுப்பலாம்.

புகளூர்
29-7-54

ர. பார்த்தசாரதி

●

"அதே கதி தான்"

தங்கள் ஜூன் மாதம் 20ம் தேதி இதழில் "ஒரு மார்க்கினால் உடைந்த உள்ளம்" என்ற தலையங்கத்துடன் கோவை ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்கள் எழுதியிருந்ததைப் படித்தேன்.

நானும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் ஒரு மார்க்கினால் தவறியவன். என் மார்க்குகள் பின் வருமாறு: ஸம்ஸ்கிருதம் 49, ஆங்கிலம் 34, கணக்கு 73, விஞ்ஞானம் 47, சமூக அறிவு 47. (250/500 = 50%)

கருணையற்ற கட்டாந்தரையைப் போன்ற கல் நெஞ்சை உடைய மாடரேஷன் போர்டார் இனி இந்தச் சீர்தூக்கி இந்த ஒரு மார்க் குறையினால் தேர்ச்சி பெறாத மாணவர்களின் சாபத்துக்கும் வயிற்றெரிச்சலுக்கும் இனியாவது ஆளாக மாட்டார்கள் என நம்புகிறேன்.

சீர்காழி
14—7—54

அ. சுப்பிரமணியன்

●

பசி நீக்கும் பனைமரம்

இராமநாதபுரம் ஜில்லாவிலேயே பனைமரங்கள் அதிகம். இவை பல ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு அளித்து வருகின்றன. பனைமரங்களினால் எத்தனையோ கைத் தொழில்கள் நடக்கின்றன. பனை மட்டைகளிலிருந்து தும்பும் பனை ஓலைகளிலிருந்து சக்கியும் எடுக்கிறார்கள். இவை தூத்துக்குடிக்குப் பெரும்பாலும் அனுப்பப் படுகின்றன. இவைகளை அவ்வூரில் சரியான அள

வுக்குச் சமன் செய்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். மேலும் பனை ஓலைகளிலிருந்து பாய் பின்னப்படுகிறது. இவைகளினால் தேவையான ஊதியம் கிடைப்பதில்லை. ஆகவே இப்பகுதி மக்கள் எளிய வாழ்க்கையே நடத்துகிறார்கள். இதை வாங்கும் வியாபாரிகள் பல ஊர்களுக்கும் அனுப்புகிறார்கள். சென்னைக்கும் அனுப்பப்படுகிறது. வட இந்தியாவில் சில ஊர்களுக்கு மட்டுமே அனுப்பப்படுகிறது. இவைகளில் பெரும் பகுதி மில்களில் பாக்கிங் செய்வதற்கு உபயோகப்படுகிறது. இவைகளில் சிறிதளவு நல்ல பாய்களும் தயார் செய்யப்படுகிறது. இவைகளால் மிருந்த கவர்ச்சி மிக்க சாமான்கள் யாவும் பல வர்ணங்களில் தயாரிக்கப் படுகின்றன. இதுதான் பனையிலுள்ள தொழில்களில் சிறந்தது. இவைகள் சென்னைக்கும் டில்லிக்கும் பெரும்பாலும் அனுப்பப்படுகின்றன. பாய்களுக்கு ஆதரவு தந்து விற்பனை செய்ய வியாபாரிகள் இல்லாததால் இத் தொழில் மந்தமாகவே இருக்கிறது. இவைகளை இராமநாதபுரம் ஊரில் அதிகம் வாங்கலாம். இராமேசுவரம் கோவிலில் இதை அதிகம் விற்பனை செய்கிறார்கள். இராமேசுவரம் கோவிலுக்குச் சென்று வரும் யாத்திரிகர்கள் இதை அவசியம் வாங்கிச் செல்கிறார்கள். சிறிய அளவில் இருக்கும் இந்தக் குடிசைத் தொழிலை எல்லாப் பகுதியினரும் வாங்கி உபயோகித்துக் குடிசைத் தொழிலை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இத் தொழில் செய்யும் மக்களுக்குப் போதிய ஊதியம் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்கிறார்கள். இப் பகுதி மக்களின் வாழ்க்கை மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. வேலையில்லா மக்களும் அதிகம். ஆகவே செல்வம் படைத்தோர் சிவகாசி, சாத்தூர் ஊர்களில் உள்ள தீப் பெட்டி தொழிற்சாலைகள் போல் இங்கும் ஆரம்பித்து மக்களின் துயர் துடைப்பார்கள் என நம்புகிறேன்.

உச்சிப்புளி
24—7—54
பொ. கணேசன்

●

காரணம் தெரியவில்லை!

நான் சென்ற 1953-ம் ஆண்டில் எஸ். எஸ். எல் சி. பரீட்சை தேறினேன். நான் பரீட்சையில் 600-க்கு 314 மார்க்குகள் வாங்கியுள்ளேன். சென்ற ஆண்டில் பலவிடங்களில் கல்லூரியில் சேர முயற்சி செய்தேன். ஆனால் வயது போதாது என்று கூறி விட்டனர். மறுபடியும் இவ்வாண்டில் திருச்சியில் உள்ள தேசியக் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி இரண்டுக்கும் மூன்று ரூபாய் அனுப்பினேன். அதற்கு இரண்டிலிருந்தும் 10-6-54 அன்று உரிய மனு பாரங்கள் வந்தன. அவற்றை அன்றே பூர்த்தி செய்து அனுப்பினேன். 12-6-54 அன்று செயின்ட் ஜோஸப் கல்லூரியிலிருந்து இடமில்லை என்றும், தேசியக் கல்லூரியிலிருந்து இடமிருப்பதாயும், மற்ற விவரங்களைப் பின்னால் தெரிவிப்பதாயும் கடிதங்கள் வந்தன. ஆகையால் நான் 20-6-54 அன்று கல்லூரியில் சேரத் தயாராயிருப்பதாயும். மற்ற விவரங்களைத் தெரிவிக்கும்படியும் எழுதினேன். 21-6-54 அன்று அவர்களிடமிருந்து இடமில்லை யென்று கடிதம் வந்தது. என் வருத்தத்தை அளவிட முடியாது. நான் குறிப்பிட்ட தேதிக்கு முன்னமேயே விண்ணப்பத்தை அனுப்பியிருந்தும், மொத்தத்தில் 53% மார்க் வாங்கியிருந்தும் இடம் கிடைக்காததின் காரணம் தெரியவில்லை.

மேலும் 21-6-54 அன்றே கோவை அரசாங்கக் கல்லூரிக்கு 'ஏ' 849715 என்ற எண்ணை உடைய ஒரு எட்டணா போஸ்டல் ஆர்டரை அனுப்பினேன். அதற்கு அப்ளிகேஷன் பாரம் வரவில்லை; அந்த போஸ்டல் ஆர்டர்கூடத் திரும்பி வரவில்லை. நான் என்ன செய்வது என்று புரியாமல் 17-7-54 அன்று மீண்டும் கடிதம் எழுதினேன். அதற்கும் இன்றையத் தேதி வரையில் பதில் வரவில்லை. இப்படி அநியாயமாக என் இரண்டு வருடப் படிப்பு கெட்டதற்குக் கல்லூரி அல்லவா ஜவாப்தாரி! என்னைப் போல் குறைந்த வயதுக்குள்ளேயே பரீட்சை தேறிவிட்டுக் கல்லூரியில் இடம் கிடைக்காததால் ஒரு வேலைக்கும் போக முடியாமலும் வாழ்க்கையில் வாடும் மாணவர்களின் கதி என்ன!

....
2-8-54
சி. வி. ராமச்சந்திரன்

●

அதிர்ஷ்டம் அல்லது சிபாரிசு

கல்கி 4—7—54 இதழில் அன்பர் தி. சா. வெங்கடராமன் கடிதத்தைப் பார்த்தேன்.

நானும் தான் அவரைப் போலவே எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவன். டைப்ரைட்டிங்கும் தெரியும். சென்னை செக்ரடேரியட்டில் சுமார் ஒரு வருஷ காலம் வேலை பார்த்தவன். ஆந்திரா பிரிவினையால் வேலையினின்றும் நீக்கப்பட்டவன்.

"வேலை தேடித் தரும் ஸ்தாபனம்" மூலமாக இதுவரை ஏழு 'இன்டர்வ்யூ'களுக்குச் சென்றிருக்கிறேன். என்னையும் அவரைப் போலவே "முன்னைய அநுபவம் உண்டா !" என்று கேட்டனர். உண்டு என்று சொல்லி நற்சாட்சிப் பத்திரங்களைக் காண்பித்தேன். தபால் மூலமாகப் பதில் சொல்லுவதாகக் கூறி வீடு செல்லும்படி கூறினர். வீடு வந்தேன். காத்திருந்தேன்; பதிலே இல்லை.

எனக்குப் படிப்பும் இருக்கிறது. முன் அநுபவமும் இருக்கிறது. என்ன பிரயோசனம்! வேலை தான் கிடைக்கவில்லையே!

ஆனால் என்னோடு வந்த சிலருக்குப் போதிய படிப்போ அன்றி முன் அநுபவமோ இல்லாதிருந்தும் வேலை கிடைத்து விட்டது! வேலை கிடைப்பதற்கு ஒன்று அதிர்ஷ்டமாவது இருக்க வேண்டும், அல்லது 'பலமான சிபாரிசு' இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்றேல் வேலையும் இல்லை; வாழ்வும் கிடையாது.

பழைய பல்லாவரம்
12—7—54
இ. அ. நாராயணன்

●

மகனின் கடிதம்

அரசாங்கம் இந்தக் குறுக்கு எழுத்துப் போட்டியை என்றுதான் ஒழிக்குமோ தெரியவில்லை! என் தந்தைக்கு ரூ. 250 மாதச் சம்பளம். அவர் பாங்கியில் சுமார் ரூ. 500 வரை போட்டிருந்தார். ஒரு நாள் இரவு என் தந்தை கனவு கண்டாராம். அக்கனவில் இவருக்கு ரூ. 1,00,000 வந்ததாம். அதனால் அவர் பல போட்டிகளுக்கு ரூ. 10க்குக் குறையாமல் அனுப்புகிறார். இதனால் கஷ்டம் ஏற்படுகிறதே ஒழிய லாபம் ஏற்படவில்லை. இதுவரை ரூ. 227-4-0 இப் போட்டிகளில் தொலைத்து இருக்கிறார். இதுவரை இவருக்கு வந்த பணம் ரூ. 22 தான். இப் போட்டிகள் நாட்டை விட்டு ஒழிய வேண்டும்.


ஸ்ரீரங்கம்
3-7-54
ஆர். எஸ். குமார்

இந்த அற்புதமான புதிய ரேடியோ பாட்டரியை உபயோகித்துப் பாருங்கள்!

"எவரெடி" "மினி-மாக்ஸ்" பாட்டரியின் உள்ளே, ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் மற்றெந்த ரேடியோ பாட்டரியையும் விட அதிகப்படியான வேலை செய்யக்கூடிய பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன. தட்டையான செல்கள் அமைக்கப்பட்டிருப்பதால், இதன் பரிமாணமும் எடையும் குறைவாயிருக்கின்றன. ஆயினும் இது முழு சக்தியை அளித்து, வெகு நாள் நீடித்துழைக்கக்கூடியது.

சக்தி நிறைந்தது

விலை குறைவானது
நம்பிக்கைக்குகந்தது
நீடித்துழைக்கக் கூடியது



EVEREADY
TRADE MARK
MINI-MAX
'எவரெடி' 'மினி-மாக்ஸ்'
ரேடியோ பாட்டரிகள்

ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு

NCM 3903



சிறுவன் ராஜுவுடன் உள்ளே நுழைந்ததும் ராஜம் பொரிந்து கொட்டிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்று விட்டார் ராமநாதன்.

“ஏண்டா, எங்கேடா ஊர் சுற்றப் போய் விட்டே! பாடம், கீடம் படிக்கணும் என்று கொஞ்சங்கூட நினைவே இல்லையா! அவருக்குத் தான் ஒன்றும் வேலையில்லை, உனக்கும் ஒன்றும் இல்லையா!” என்று அவள் கூறியதைக் கேட்டதும் அவர் நெஞ்சம் துடிக்காமல் என்ன செய்யும்!

அவர் மௌனமாகத் தன்னுடைய துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

“பெரியப்பா, எங்கே போறீங்க!” என்று கேட்டான் ராஜு, தானும் அவருடன் போகும் ஆவலுடன். அவன் அம்மா அவனைக் கடிந்து கொண்டதைக் கொஞ்சங்கூட அவன் லட்சியம் செய்யவில்லை.

ராமநாதன் அவனைப் பார்த்து, “கண்ணு, நீ கெட்டிக்காரன்தானே! பாடத்தைப் படித்துக் கொண்டிரு, நான் இதோ வந்து விடுகிறேன்!” என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

“போகிறதைச் சாப்பிட்டு விட்டுப் போகக் கூடாதா! அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கணுமாக்கும்!” என்று ராஜம் மெதுவாக முணுமுணுத்தது அவருடைய கூர்மையான காதுகளில் விழுந்து விட்டது. அவர் உள்ளே திரும்பி, “எனக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. நான் சாப்பிட வரப்போவதில்லை” என்று கூறி விட்டுப் போய் விட்டார்.

2

சாயந்திரம் காரியாலயத்திலிருந்து வந்த சேஷாத்திரி குதூகலத்துடன், “அண்ணா!” என்று கூவியபடியே உள்ளே நுழைந்தான்.

ஆனால் அவனுக்கு ராஜம்தான் தரிசனம் தந்தாள். “என்ன, அவ்வளவு சந்தோஷம் பொங்குகிறது! அண்ணாவின் மேல் அத்தனை அன்பு!” என்றாள் ராஜம் பரிகாசத்துடன்.

அவள் பரிகாசத்தைச் சட்டை செய்யாமல், “ராஜம், அண்ணா எங்கே! அண்ணாவுக்கு வேலை கிடைத்து விட்டது. சந்திரா அண்டு கம்பெனியில் மானேஜர் வேலை! இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம்!” என்றான்.

“அப்படியா! அண்ணா மத்தியானம் சாப்பிடக் கூட வராமல் எங்கேயோ போனார். இன்னும் திரும்பி வரவில்லை” என்றாள் ராஜம் கலவரம் அடைந்த குரலில். மத்தியானம் நடந்த நிகழ்ச்சிகளைக் கூற அவளுக்குத் தைரியமில்லை.

“மத்தியானம் சாப்பிட வரவில்லையா, ஏன்!” என்று கேட்டான் ஒன்றும் புரியாமல்.

“என்னமோ, ‘சாப்பிட வரமாட்டேன்’ என்று கூறிப் போனார். இன்னும் வரக்காணோம்” என்றாள் ராஜம். அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு திகில் உண்டாயிற்று.

சேஷாத்திரிக்குத் தாங்க முடியாத கவலை உண்டாகிவிட்டது. தான் எத்தனை குதூகலத்துடன் தன் அண்ணனிடம் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவிக்க வந்தானோ, அந்தக் குதூகலமெல்லாம் பறந்தோடி விட்டதே என்று வருத்தப்பட்டான். அண்ணா, எங்கே போயிருப்பார்! விவரம் புரியாமல் அவன் திகைத்தான்.

திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அவன் மனைவி ராஜம் அவனுடைய அண்ணனிடம் நடந்து கொள்ளும் விதத்தைப் பற்றி அவனுக்குக் கொஞ்ச நாட்களாகவே சந்தேகம் இருந்தது. அவரைப் பற்றிக் கேலியாகத் தூக்கி எறிந்தாற்போல் பேசுவதை அடிக்கடி அவன் கவனித்து வந்திருக்கிறான். ஆனாலும் அவனால் அவளை அடக்க முடியவில்லை. எவ்வளவு புத்தி கூறியும் அவள் கர்வத்துடன் பேசுவாள். மேலும் ரஸாபாஸமாகாமலிருக்கச் சேஷாத்திரி மௌனமாகி விடுவான். ஆகவே இப்போது அவள்தான் ஏதாவது தன் அண்ணன் மனம் புண்படும்படி கூறினாளோ என்று சந்தேகப்பட்டான்.

நேரம் ஆக ஆக ராமநாதன் வராமற் போகவே சேஷாத்திரிக்குக் கவலை அதிகமாகி விட்டது.

"சாப்பிட வாருங்களேன்" என்று கூப்பிட்டாள் ராஜம். மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

"அண்ணா இன்னும் வரக் காணோமே" என்றான் சேஷாத்திரி கவலையுடன்.

"அண்ணா என்ன பச்சைக் குழந்தையா! வருகிறார். வந்தபோது சாப்பாட்டைப் போட நான் தான் ஒருத்தி காத்துக் கொண்டிருக்கிறேனே! அதனால் நிதானமாக வருகிறார். அவருக்கென்ன!" என்றாள் ராஜம் குத்தலாக.

அவள் பேச்சைக் கேட்டுச் சேஷாத்திரிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "சீ, தரித்திரமே! உன் அற்ப கௌரவத்தால் வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறுதே. அவரால்தான் நமக்கு இந்த வாழ்வு என்பதை மறந்து விடாதே. சொல்! அவர் ஏன் மத்தியானம் சாப்பிட வரவில்லை! நீ ஏதாவது அவர் மனம் புண்படும்படி கூறினாயா!" என்று கேட்டான் இடி முழக்கம் போன்ற குரலில்.

"நான் என்ன சொன்னேன், ராஜுவை 'ஊர் சுத்தாதே, படிடா!' என்றேன். அப்போது அவன் அவருடன் போய்விட்டு வந்திருந்தான்" என்று இழுத்தாள் ராஜம்.

"சீ, கழுதை! சொல்லத் தகாத வார்த்தைகளைக் கூறிவிட்டுச் சாதாரணமாகச் சொல்கிறாயே! அவருக்கு அருமையான வேலையைச் சம்பாதித்து வந்தபோது வீட்டை விட்டு விரட்டி விட்டாயே, பாதகி!" என்றான் சேஷாத்திரி கோபத்துடன்.

அவன் ஆவேசத்துக்கு எதிரே நிற்க அஞ்சி, ராஜம் உள்ளே சென்று விட்டாள். அவள் நெஞ்சு அவளைச் சுட்டது.

சேஷாத்திரி தன் அண்ணனைப் பற்றிய சிந்தனையுடன் நாற்காலியில் சாய்ந்தான். அவன் நினைவில் தன்னுடைய வாழ்நாட்களைப் பற்றி எண்ணிப் பார்த்தான்.

3

ராமநாதனும், சேஷாத்திரியும் அவர்கள் பெற்றோருக்கு இரு பிள்ளைகள். ராமநாதனுக்கும், சேஷாத்திரிக்கும் இடையில் இரு பெண்கள் பிறந்தனர். அவர்கள் இருவரும் விவாகமாகிப் புக்ககத்தில் இருந்தார்கள். ராமநாதனுக்குப் பதினைந்து வயது இருக்கும் போதே அவர்கள் தகப்பனார் இறந்து விட்டார். அவனுடைய தாயார் அவர்கள் நால்வரையும் வளர்த்து வந்தாள். ஏதோ கொஞ்சம் நிலம் இருந்தது. அதன் வருவாயிலிருந்து காலம் தள்ளி வந்தனர். ராமநாதன் படித்து விட்டு ஒரு பாங்கியில் காசாளராக அதாவது காஷியராக இருந்தான். இரண்டு தங்கைகளுக்கும் விவாகத்தை நடத்தி வைத்தான். அதன் மூலம் நிலத்தில் முக்கால் வாசி தீர்ந்து விட்டது. தாயையும், தம்பியையும் சென்னைக்கே அழைத்துக் கொண்டு விட்டார் ராமநாதன். தம்பியை நன்றாகப் படிக்க வைத்தார். ராமநாதனுக்கும் திருமணம் நடைபெற்றது. அவர் திருமணம் முடிந்த ஒரு மாதத்துக்கெல்லாம் அன்னை உடல் நலமின்றிப் படுத்துக் கிடந்து விட்டு ஒரு நாள் கண்ணை மூடிவிட்டாள்.

ராமநாதனும் அவர் மனைவி சௌந்தர வல்லியும் சேஷாத்திரியைத் தங்கள் செல்வமாகப் போற்றி வளர்த்தனர். அப்போது சேஷாத்திரிக்குப் பத்து தான் வயது. அவன் தன் தாயாரிடம் மிகவும் அன்பு பூண்டிருந்தான். அவள் இறந்தபோது அவன் துடித்த துடிப்பை வருணிக்க முடியாது. அவன் சோகத்தைச் சௌந்தரவல்லிதான் தணித்தாள். அவனை அவள் ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள். அதில் அவன் தாயன்பைக் கண்டான். அவனுக்கு மன்னி சௌந்தரவல்லியிடமும், ராமநாதனிடமும் மிகுந்த அன்பு உண்டாயிற்று. அவர்கள் மனம் மகிழும்படி நடந்து கொண்டான். கஷ்டப்பட்டுப் படித்தான். எல்லா வகுப்புகளிலும் முதலில் நின்று தேறினான். அவனை மேன்மையான பதவியில் வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை கொண்ட அவனைப் பொறி இயற் கல்லூரியில் சேர்த்தார்கள். அதற்காக ஏராளமாய்ச் செலவாயிற்று. ஆனாலும் ராமநாதன் அதைப் பொருட்படுத்தவில்லை. எஞ்சியிருந்த நிலத்தையும் விற்றுப் படிக்க வைத்தார். அவன் முன்னுக்கு வந்தால் அதுவே போதும் என்று எண்ணினார் ராமநாதன்.

சேஷாத்திரி பி. ஈ. படித்துத் தேறியதும் உதவி எஞ்சினீயர் உத்தியோகம் கிடைத்தது. ராமநாதன் கண்ட கனவும் பலித்தது. சேஷாத்திரிக்கு மணத்தையும் முடித்து வைத்தார்.

ராஜம் படித்தவள். பணக்காரப் பெண்ணானாலும் மிகவும் அடக்கமாகவே இருந்தாள். சௌந்தரவல்லியிடமும் ராமநாதனிடமும் விசுவாசம் கொண்டிருந்தாள். மிகவும் அன்யோன்யமாய், சந்தோஷமாக வாழ்க்கை நடந்து வந்தது.

ராமநாதனுக்கும் சௌந்தரத்துக்கும் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது. இத்தனை நாட்கள் குறையாகப் படவில்லை. சேஷாத்திரியின் முன்னேற்றத்திலேயே கவனம் செலுத்தி வந்த அவர்களுக்குக் குழந்தையில்லாக் குறை தென்படவேயில்லை. இப்போது வீட்டில் ஒரு குழந்தை வேண்டுமென்று அவாக் கொண்டனர். அதுவும் வெகு விரைவில் நிறைவேறி விட்டது. ஆம், ராஜம் கருவுற்றிருந்தாள். அவள் வயிற்றில் ராஜாமணி உதித்தான். அவன் குறுகுறுத்த பார்வையும், சிவந்த கன்னங்களும், பொக்கை வாயும் எல்லோரையும் வசீகரித்தன. ராமநாதன் அவனை எடுத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பார். அவருக்கு அவன் மேல் உயிர்.

கொஞ்சநாட்களுக்கெல்லாம் ராமநாதனுடைய வாழ்க்கையில் இரண்டு பேரிடிகள் விழுந்தன. ஒன்று அவர் மனைவி சௌந்தரவல்லி காலமானது. அவள் இறந்ததும் அவருக்கு உண்டான துயரத்தை என்ன வென்பது! அவருக்கு உயிர் நாடியாய் இருந்து அவர் எண்ணங்கள், செய்கைகள் யாவற்றிற்கும் பக்க பலமாய் இருந்து



அவர் மனம் கோணாமல் ஒத்துழைத்த அவனை இழந்த அவருடைய வாழ்வு அவருக்குப் படு சூன்யமாயிருந்தது. ஆனால் அந்தச் சூன்யத்திலும் கொஞ்சம் ராஜு இடம் பெற்று நிறைத்ததால் அவர் வாழ்வு அடியோடு கசந்துவிடவில்லை. அவர் சதா ராஜுவுடன் விளையாடி மகிழ்வார். அவனைத் தம் முதுகில் ஏற்றிக் கொண்டு குதிரையாக மாறுவார். அவனைத் தூக்கிக் கொண்டு உலாவப் போவார். சாயந்திரம் காரியாலயத்திலிருந்து வரும்போது அவனுக்கு உயர்ந்த பிஸ்கோத்து, விளையாட்டுப் பொம்மைகள் எல்லாம் வாங்கி வருவார். ராஜுவும் பெரியப்பாவுடனே பற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய தாயார், தகப்பனார் என்ன கொடுத்தாலும் அதை யெல்லாம் வீசி எறிவான். பெரியப்பா வாங்கித் தந்தால் தான் அவனுக்குப் பிடிக்கும். அவரைத்தான் அது வேண்டும், இது வேண்டும் என்று நச்சரிப்பான். அவரும் அவன் மனம் கோணாமல் மூன்று சக்கர சைக்கிள், குதிரை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். அவருக்கு வேறு யார் இருக்கிறார்கள்! சம்பளம் வந்ததும் முக்கால் வாசியை ராஜத்திடம் கொடுத்து விடுவார். வீட்டுச் செலவுக்கென்று முதல் தடவை அவள் வாங்கிக் கொள்ள மறுத்தாள். ஆனால் அவர், "எனக்கு வேறு செலவு என்ன இருக்கிறதம்மா! எல்லாம் உங்களுக்குத்தான்," என்று வற்புறுத்திக் கூறிக் கொடுத்தார். ராஜமும் பிறகு பெற்றுக் கொண்டாள். மீதிப் பணத்தில் தன் சொந்தச் செலவுக்குச் சிறிது போக மிகுதியை ராஜுவுக்குச் செலவழித்து விடுவார்.

ராஜம்கூட ராஜு ஏதாவது அடம் பிடித்தால், "போடா, உன் பெரியப்பா கூப்பிடுகிறார். அவருடன் விளையாடு," என்பாள்.



"பெரியப்பா, ஆபீஸிலிருந்து வந்து விட்டாயா! வா. காம்ப பந்து விளையாடலாம்" என்று ஓடுவான் ராஜு தன் பிடிவாதத்தை விட்டு.

அப்படித் தானே ராஜுவைப் பெரியப்பாவுடன் விளையாட அனுப்பிய ராஜம் இப்போது அவருடன் சேராதே என்று கூறி, அவர் நெஞ்சத்தைப் புண்ணாக்கி, அவரை வீட்டை விட்டு விரட்டியதற்குக் காரணம் என்ன!

அதுதான் ராமநாதன் வாழ்வில் இரண்டாவது பேரிடி ரூபமாய் வந்தது. அவர் வேலை செய்து வந்த பாங்கி திவாலாகி விட்டது. ஆகவே அவர் வேலையை இழந்தார். அவர் உடனே வேறு வேலைக்கு எவ்வளவோ முயற்சிகள் செய்தார். ஆனால் ஒன்றும் பலன் இல்லை. படிப்படியாய் ஏறி இறங்கியதுதான் மிச்சம். அவருக்கு எத்தனையோ வருட அனுபவங்கள் இருந்தும் வேலை கிடைக்கவில்லை. வீட்டில் வேலை ஒன்றுமின்றி இருந்து வந்தார். அவருக்கு அது அவமானமாகவே இருந்தது. அது அன்னியர் வீடு அல்ல. தன் தம்பியின் வீடுதான். தான் முன்னுக்குக் கொண்டு வந்த தம்பியின் வீடுதான். தன் தம்பிக்குத் தன்மேல் மிகுந்த விசுவாசம்தான். அவரை அவன் தெய்வமாகவே மதித்து வந்தான். ஆனாலும் அவர் முள்ளின் மேல் இருப்பது போன்ற உணர்ச்சியுடன்தான் இருந்து வந்தார். வேலையின்றிச் சும்மா இருப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. நாற்பத்தைந்து வயதான பிறகு வேலை கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியமா! அவர் மௌனமாகத் தம் அறையில் உட்கார்ந்து ராமாயணம், பாரதம், பாகவதம், கீதை முதலியவைகளைப் படித்துக் கொண்டிருப்பார். படிக்காத நேரங்களில் அவர் ராஜுவுடன் விளையாடிக் கொண்டிருப்பார்.

முதலில் ராஜம் கூடத் தம் மைத்துனருக்கு வேலை போய் விட்டதைக் கண்டு மிகவும் வருத்தமடைந்தாள். அவர் பொழுது போகாமல் தவிப்பதைக் கண்டு அனுதாபம் கொண்டாள். ஆனால் நாளடைவில் அவளையு மறியாமல் அவர் பேரில் ஒரு வெறுப்பு, அசிரத்தை உண்டாயிற்று. முன் போல் மரியாதையுடன் நடந்து கொள்ளாமல் அசட்டை செய்தாள்.

ராமநாதன் தாம் வேலையின்றி வீணுக்கு வெட்டியாய் இருப்பதால் பிறருக்கு அதிக தொந்தரவு கொடுக்கக் கூடாதென்று அவர் சாப்பிடும் நேரத்துக்குச் சரியாய்ச் சாப்பிட்டு விட்டுப் பிறகு தம் அறைக்குப் போய்விடுவார். அல்லது வெளியில் போய் விடுவார். அது கூட ராஜத்துக்குக் குற்றமாகப் பட்டது. ஏதோ கொடுத்து வைத்தவர் போல் 'டாண்' என்று சாப்பாட்டு நேரத்துக்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் போகிறாரே என்று முணுமுணுத்துக் கொள்வாள். அவர் ஏதாவது கேட்டால் அசுவாரசியமாய்ப் பதில் அளிப்பாள்.

அன்று அவர் தம் அறையில் உட்கார்ந்து பாகவதம் படித்துக் கொண்டிருந்தார். ராஜு வந்து, "பெரியப்பா, காப்பி சாப்பிடக் கூப்பிடறா, அம்மா" என்றான்.

"கண்ணு, நீ போய் வாங்கிக் கொண்டு வாம்மா!" என்றார் பாகவதம் படிக்கும் சுவாரசியத்தில் லயித்திருந்ததால்.

ராஜு அப்படியே அம்மாவிடம் போய், "அம்மா, அங்கேயே கொண்டு வரச் சொல்கிறார்" என்றான்.

அதற்கு ராஜம், "ஏன், இங்கே வந்து காப்பி சாப்பிடக் கூட முடியாமல் காரியாலய வேலை

தட்டுக் கெட்டுப் போகிறதாமோ ? அதற்கு வேலையாளாக நியமித்து விட்டாராக்கும்!" என்று சற்று உரக்கவே கூறி விட்டுக் காப்பியை அவனிடம் கொடுத்தனுப்பினள்.

ராஜம் கூறியது அவருடைய காதில் விழுந்ததும் உள்ளம் துடித்தது. தம் தலை விதியை நொந்து கொண்டார். இதுபோல் அடிக்கடி அவர் ராஜத்தின் முணுமுணுப்புக்களைக் கேட்க நேர்ந்ததும் மனத்தில் ஒரு திட எண்ணம் கொண்டார். தமக்கு இனி அந்த வீட்டில் இடம் இல்லை என்று எண்ணினர். அவர் அந்த வீட்டை விட்டு வெளியேற எவ்வளவோ தடவைகள் பிரயத்தனம் செய்தார். ஆனால் அவர் மனம் பின் வாங்கியது. அதற்குக் காரணம் அவர் தம் உயிர் முழுவதையும் வைத்திருந்த ராஜுவும் சேஷாத்திரியும் தான். அவரால் அவர்களைப் பிரிந்திருப்பதென்பதை நினைக்கும்போதே கஷ்டமாயிருந்தது. அதனாலேயே அவர் ஒரு முடிவுக்கும் வராமல் தவித்தார். ராஜத்தின் அலட்சியம், அகம்பாவம் அவரை அணுஅணுவாகச் சிதைத்தது. ஆனால் ராஜுவிடமும், சேஷாத்திரியிடமும் கொண்டிருந்த பாசம் அவைகளைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது.

ஆனால் அன்று அவள் ராஜுவைக் கடிந்தது போல் தம்மைத் தூற்றியதைக் கண்டு அவரையுமறியாமல் ஓர் ஆவேசம் உந்தித் தள்ளியது. இனியும் பொறுக்க முடியாது என்ற எண்ணத்துக்கு அவர் மனம் வந்து விட்டது.

"நான் ஏன் இந்த ஏசல்களைக் கேட்டுக் கொண்டு அவமானத்துடன் இங்கு இருக்க வேண்டும்! பணம் இல்லாதவன் பிணம். நான் எப்போது வேலை இழந்தேனோ அப்போதே நான் மதிப்பற்றவனாகி விட்டேன். ஆகவே, இனியும் பிறருக்குப் பாரமாக இருக்கக் கூடாது. நான் இந்த வீட்டை விட்டுப் போகத்தான் வேண்டும். இதோ இப்போதே போகிறேன்" என்று மனத்துள் கூறிக் கொண்டே புறப்பட்டு விட்டார். போகும்போது "ராஜு எங்கே பெரியப்பா போறீங்க!" என்று கேட்டதும் அவர் மனம் கொஞ்சம் தடமாடத்தான் செய்தது. ஆனாலும் மனத் துணிவு கொண்டு புறப்பட்டு விட்டார். அவர் போனதும் ராஜு சாப்பிடாமல் அடம் பிடித்தான். தினமும் அவன் அவரருகே உட்கார்ந்துதான் சாப்பிடுவது வழக்கம்.

மாலை வரை அழுத வண்ணமே இருந்தான். சற்று நேரத்துக்கு முன்தான் ஓய்ந்து அசதியால் தூங்கி விட்டான்.

4

ராஜு பாதித் தூக்கத்தில் 'பெரியப்பா, பெரியப்பா' என்று உளறினன். 'என்னை விட்டு விட்டு எங்கே பெரியப்பா போய்ட்டீங்க' என்று ஒரு சமயம் அரற்றினன்.

அவன் பிதற்றலைக் கேட்டதும் ராஜத்தின் உள்ளம் துடித்தது. அவள் மனம் தன் மைத்துனரைப் பற்றி எண்ண ஆரம்பித்தது. அவர் அவனிடம் எத்தனை அன்பு பூண்டிருந்தார் என்பதை எண்ணிப் பார்த்தாள். அவர் அவனிடம் தந்தையின் அன்பைச் சொரிந்தார். அவர் சம்பாதித்து வந்தபோது அவள் கேட்காமல் அல்லவா பணத்தை அவனிடம் கொடுத்தார்! பீஸைக் கூட ராஜுவுக்குத்தானே எல்லாம் செய்தார். அவர் தங்களுக்காகத் தம் சுகத்தை யெல்லாம் தியாகம் செய்தாரே. தன் கணவன் படிப்புக்காக இருந்த சொத்துக்களையும் விற்று விட்டாரே......

ஐயோ, அவரைப் போய் எப்படி யெல்லாம் நினைத்தேன். அவ்வளவு பெரியவரை, தந்தைக்குச் சமமானவரைத் தூஷித்தேனே! அதை யெல்லாம் அவர் எவ்வளவு பொறுமையுடன் கேட்டு வந்தார். அவர் தன் சுகத்துக்காகவா இங்கு இருந்தார்! இல்லை, இல்லை, ராஜுவுக்காக இருந்தார். அவர் பிரிந்தால் அவன் ஏங்கி விடுவான் என்று இருந்தார். அவர் போய் விட்டால் தன் தம்பி வருந்துவானே என்று இருந்தார். அவருக்குத் தம்பியின் அன்பும், ராஜுவின் அன்பும் தெரியும். அவர்கள் சுகத்துக்காக என் சுடு சொற்களைச் சகித்துக் கொண்டார். கடைசியில், ஐயோ...அவர் போய் விட்டாரே இனி திரும்பவே மாட்டாரா! இப்போதே ராஜுவும், 'அவ'ரும் ஏங்கி விட்டார்களே! 'அவர்' காரியாலயத்திலிருந்து வந்தபோது எத்தனை மகிழ்ச்சியுடன் இருந்தார்! இப்போது ஒரே கவலையில் ஆழ்ந்து விட்டாரே! என் மைத்துனர் வரமாட்டாரா! அவர் திரும்பி வந்தால் அவரை நான் என் இதயத்தில் வைத்துக் கும்பிடுவேன். அவர் இந்த வீட்டின் தெய்வம் என்று உளமுருகப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

தன் கணவன் உட்கார்ந்திருந்த அறைக்குப் போனாள். அவன் நிஷ்பிரமையுடன் பேயறைந்தாற்போல் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. தான் எவ்வளவு பெரிய குற்றம் செய்து விட்டாள் என்பதை அறிந்து கொண்டாள். தன் கணவனை இரண்டு மூன்று தரம் அழைத்தாள். அவன் அதைக் கவனிக்கவே இல்லை. அவன் உள்ளம் காலியாக இருந்தது. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் தமையன் தன்னை விட்டுப் போய் விட்டார் என்பதை உணர்ந்து கொண்டதும் பெரிய அதிர்ச்சியாயிருந்தது.

"என்ன இப்படி உட்கார்ந்து விட்டீர்களே. எனக்குக் கவலையாயிருக்கிறது. நான் செய்தது மிகப் பெரிய தவறு. அவர் எங்கும் போயிருக்க மாட்டார். இந்த ஊரில்தான் எங்காவது இருப்பார். தேடி எப்படியாவது அழைத்து வந்து விடுங்கள்" என்றாள் ராஜம்.

அவள் கூறியது எங்கோ நின்றிருந்து பேசுவதுபோல் இருந்தது. இருந்தாலும் அந்த வார்த்தைகள் அவன் இதயத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கின.

மௌனமாக எழுந்து படுக்கையில் படுத்துக் கொண்டான். "சாப்பிட வரவில்லையா!" என்று கேட்டாள் ராஜம்.

"இல்லை...என் தமையனைப் பார்த்து அழைத்து வரும்வரை எனக்குச் சாப்பாடு வேண்டியிருக்காது" என்று கூறினன். அவன் வெகு நேரம் பலவித உணர்ச்சிகளுடன் போராடிப் பிறகு ஒரு விதமாக நித்திரையில் ஆழ்ந்தான். ராஜமும் அங்கேயே கீழே வெறுந் தரையில் படுத்துக் கொண்டாள். என்றைக்குமில்லாத விதமாய் அந்த வீடுகளையிழந்து, சௌந்தரியமிழந்து காணப்பட்டது.

5

விடியற்காலை ஐந்து மணிக்குக் கதவை யாரோ தட்டும் உணர்ச்சி ஏற்படவே சேஷாத்திரி பரபரப்புடன் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! அவன் தமையனர் ராமநாதன் நின்று கொண்டிருந்தார்.

"அண்ணா, வந்து விட்டீர்களா! நீங்கள் எங்களை விட்டு விட்டுப் போய் விட்டீர்கள் என்று அல்லவா எண்ணிக் கொண்டோம்! எனக்கு

சேவைக்கும் பாதுகாப்பிற்கும்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் சுமார் 1 கோடி ரூபாய்

தலைமைக் காரியாலயம் : **பாண்டியன் பில்டிங் : மதுரை**

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயமுத்தூர், கொச்சி

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அநுயாசமாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிப்பு, எரிந்து வெந்துபோவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்திகரமாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழுவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதளித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.

உயிரே போய் விட்டதுபோல் ஆகிவிட்டதே. வாருங்கள் அண்ணா, எனக்கு உயிரை அளித்தீர்களே" என்று அவருடைய காலில் விழுந்து வணங்கினான்.

ராமநாதன் குனிந்து, "சேஷு, எழுந்திரு," என்று அவனைத் தூக்கி எழுப்பினார். "நான் ரொம்பவும் அவசரப்பட்டு விட்டேன். பாவம், சிறியவன் ராஜூம் ஏதோ தெரியாமல் கூறியதை ஒரு பொருட்டாக நினைத்து நான் உங்களை விட்டுப் போய்விட நினைத்தேன். நேற்றெல்லாம் நிலையில்லாமல் இருந்தேன். மனம் சமாதான மடையவில்லை. ஒரு பக்கம் ராஜுவும், நீயும் என்னை வரும்படி அழைக்கிறீர்கள். மற்றொரு புறம் ராஜத்தின் சுடு சொற்கள் என்னை வரவொட்டாமல் தடுத்துவிடுகின்றன. நேற்றெல்லாம் போராடிக் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். நான் வடக்கே எங்காவது போய் விடுவது என்று தீர்மானித்தேன். நேற்று இரவு சத்திரத்தில் படுத்துத் தூங்கினேன். எனக்கு அதிசயமான கனவு வந்தது. நீயும், ராஜுவும் என்னையே நினைத்துப் புலம்புவதாகவும், ராஜம் தன் தவறை உணர்ந்து என்னை வரும்படி அழைப்பதாகவும் கனவு கண்டேன். விழித்தெழுந்ததும் எனக்கு இருப்பே கொள்ளவில்லை. ராஜம் என்ன சொன்னாலும் சரி ராஜுவையும், உன்னையும் விட்டுப் போவதில்லை என்று தீர்மானித்து வந்து விட்டேன். எனக்குச் சாப்பாடு கூட வேண்டாம். எங்காவது, எப்படியோ சாப்பிட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்க மட்டும் இடம் கொடுங்கள். அதுவே போதும். உன்னையும், ராஜுவையும் பார்த்துக் கொண்டே காலம் கழித்து விடுகிறேன்" என்றார்.

"அபசாரம், அபசாரம், அண்ணா! அவ்விதம் கூறுகிறீர்கள். தங்களுக்கில்லாத அதிகாரம் இங்கு யாருக்கும் இல்லை. இன்னொரு சந்தோஷச் செய்தி. உங்களுக்குச் சந்திரா கம்பெனியில் மானேஜர் வேலை கிடைத்திருக்கிறது" என்றான் சேஷாத்திரி.

அதற்குள் ராஜம் எழுந்து வந்து ராமநாதன் நிற்பதைக் கண்டு அவர் காலில் விழுந்து, "நான் கூறியதை யெல்லாம் பொறுத்து மன்னிக்க வேண்டும்" என்றாள்.

"பெரியப்பா வந்து விட்டாயா!" என்று ஓடி வந்து அவரைக் கட்டிக் கொண்டான் ராஜு. "எங்கே பெரியப்பா என்னை விட்டுவிட்டுப் போய் விட்டே!" என்று அழாக்குறையாகக் கேட்டான்.

"இனிமேல் உன்னை விட்டு விட்டுப் போக மாட்டேண்டா, கண்ணா" என்றார் ராமநாதன்.

படித்துப் பாருங்கள்!

பழனியாண்டவர் மயில்விடு தூது

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமானின் திருவருட் பெருமையை வியந்து எத்தனையோ பக்தர்கள் அகம் குழைந்து உருகி அன்பு கனிந்து அரும் தமிழ்ப் பாடல்களால் துதித்திருக்கிறார்கள். அந்த வரிசையில் பழனியாண்டவனைத் தரிசித்து அநுபவம் சிறந்த பெற்று, அது மறைய, மீண்டும் அவ்வநுபவம் பெற விழைந்து முருகனை அழைத்து வரும்படி மயிலை ஆசிரியர் தூது விடுப்பதாக அமைந்துள்ளது இந் நூல்.

கவியரசு, கோவை கு. நடேச கவுண்டர் தனி வெண்பாவால் இயற்றிய இவ்வரும் தமிழ் நூலைத் திறமிகு உரை நடையில் ஆக்கித் தந்திருக்கிறார், அன்பர், இறைபணியாளர் திரு. விவேகானந்தம் பிள்ளை அவர்கள்; அத்துடன் ஆங்கில மொழியும் பிழைத்துப் போகட்டுமே என்று ஆங்கிலத்திலும் வசனமாக எழுதி யிருக்கிறார். இவ் வன்பரின் முயற்சி பாராட்டுக்குரியது.

பிரசுரம்; டி. எச். விவேகானந்தம் பிள்ளை, இறை பணியாளர், ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி.

பேசும் படம் மலர் 1954

சினிமாத் தொழிலில் கோடிக்கணக்கில் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மனித சமூகத்தைப் படம் பார்க்கும்ருசி மிகப் பெரிய அளவில் ஆட் கொண்டு விட்டது. மக்களின் பழக்க வழக்கங்களையும், மனப்பான்மைகளையும், மாற்றியமைக்கும் சக்தி சினிமாப் படங்களுக்கு இருக்கிறது.

ஆடல், பாடல், நடிப்பு முதலிய கலை அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட படப் பிடிப்புத் தொழிலுக்குத் தமிழ் நாட்டில் "பேசும் படம்" மாதப் பத்திரிகை அரிய சேவை செய்து வந்திருக்கிறது. இந்த ஆண்டு வெளியாகி யிருக்கும் 'பேசும் படம்' மலர், கண்ணைக் கவரும் நடிக நடிகையர்களின் வண்ணப் படங்களும், ஏராளமான புகைப் படங்களும், ஸ்டுடியோச் செய்திகளும், நடிக நட்சத்திரங்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், படப் பிடிப்பு சம்பந்தமான அரிய நுணுக்கங்கள் கொண்ட கட்டுரைகளும் கொண்டு மலர்ந்திருக்கிறது. 1953ம் வருஷம் வெளி வந்த தமிழ்ப் படங்களைப் பற்றிய ஒரு விமரிசனத் தொகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விருப்பு வெறுப்பு அற்ற முறையில் பட விமரிசனங்கள் அமைந்திருப்பது மிகவும் பாராட்டுக் குரியது.

உயர்ந்த தாளில், கவர்ச்சி தரும் எழில் உருவத்தில் மலர்ந்திருக்கும் இம்மலர், சினிமா ரசிகர்களுக்குப் பெரு விருந்து.

பிரசுரம்: டி. வி. ராம்நாத். 188, ராயப் பேட்டை ஹைரோடு, சென்னை—14; விலை: ரூ 5.

மேகமும் நிலவும்

நளினிக்குக் கண் நிறைந்த கணவனாகச் சேகரன் கிடைத்தான். ஆனால் விவாகமான உடனே பயங்கரப் பிரிவு ஏற்பட்டது; அந்தப் பிரிவு வருஷக் கணக்கில் வளர்ந்து அவளைப் பல விதத்திலும் வாட்டியது. அதனால் அவள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன; மாறுதல்களை யெல்லாம் மனத் திண்மையோடு சகித்து வாழ்க்கைப் போராட்டத்தைச் சமாளிக்கிறாள்; ஊரார் அவளைப் பற்றி அபாண்டமாகக் கிளப்பி விட்ட சந்தேகப் பேயின் ஆட்டத்துக்கு அடி பணிந்து விடாமல் பொறுமையோடிருந்து கடைசியில் கணவனிடம் சேர்ந்து விடுகிறாள். கதை எளிய நடையில் ரஸமாகச் செல்லுகிறது.

எழுதியவர்: எஸ். பி. ஹர்ஷன்: பிரசுரம்: மோகன் அண் கம்பெனி, 43, லிங்கி செட்டி தெரு, சென்னை—1.

பிரஷால் தேய்ப்பதால்
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனாமலை அரிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

யோகாசனச் சிகிச்சை

✦ வி.என்.குமாரசாமி

27. வைட்டமின் "ஏ"

சென்ற கட்டுரையில் தைராய்ட் கோளத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததல்லவா! இன்னும் சில விவரங்கள் அதைப் பற்றித் தெரிந்து கொண்டு வைட்டமின் பகுதிக்குப் போகலாம்.

தைராய்ட் கோளம் ஹார்மோன் அதிகம் சுரந்தால் என்ன நடக்கும் என்பதைக் கண்டு பிடிக்கச் சாதாரணமாய் இருக்கும் பிராணிகளுக்குத் தைராய்ட் ஹார்மோன் ரசம் ஊசி மூலம் குத்தி ஏற்றி, என்ன மாறுபாடு உடலில் நடக்கிறது என்பதைக் கண்காணித்தார்கள். அதனால் உண்டாகும் மாறுதல்களைக் குறித்துக் கொண்டார்கள். இதற்கு 'ஹைப்பர் பங்ஷன்' என்பர்.

இம்மாதிரிதான் ஒவ்வொரு கோளங்களையும் சோதித்து அவைகளின் ஹார்மோன் குறைந்தால் என்ன ஆகும், மிகுதியானால் என்ன ஆகும் என்பதை அறிந்தார்கள். இவர்கள் கண்ட குறிகளைக் கொண்டு உடலில் ஏதாவது மாறு பட்டால் அது ஹார்மோன் குறைவினால் உண்டானதா! அதிகமானதினால் உண்டானதா! என்பதை அறிய முடிந்தது. குறைந்தால் அக் கோளத்தின் ஹார்மோன் ஊசி மூலம் குத்தி ஏற்றுகிறார்கள். மிகுதியானால் அக் கோளத்தின் பாகத்தை ஆபரேஷன் செய்து சிறிது அகற்றி விடுகிறார்கள். இந்தக் கோளங்களைக் குறைக்கும் ஆபரேஷன் சில சமயம் வெற்றிகரமாகவும் சில சமயம் அபாயமாகவும் முடிகிறது.

இருதயத்தையும் மூளையையும் தனியாய் எடுத்து ஆபரேஷன் செய்து அதிலுள்ள குறைகளை நீக்கி மறுபடியும் வைத்துப் பொருத்தி விடுகிறார்கள். இருதயத்துக்குப் பதில் பிளாஸ்டிக் இருதயமும் கண்டு பிடித்து விட்டார்கள். மூளைக்குப் பதில் ரப்பர் மூளை வைத்து வேலை செய்ய முடியும் என்கிறார்கள். அதைப் போலக் கோளங்களுக்கு மாற்று இன்னமும் கண்டு பிடிக்க வில்லை. முடியவும் முடியாது. அதனால்தான் அதிலிருந்து சுரக்கும் ஹார்மோன்களைப் போல மாற்று ஹார்மோன் கண்டு பிடித்து விட்டார்கள்.

கோளங்களின் ரசத்தை ஊசிமூலம் உடலில் குத்தி ஏற்றுவதைவிட யோகாசனச் சிகிச்சையின் மூலம் கோளங்களுக்குப் புத்துயிர் அளிப்பது ஒன்றுதான் இயற்கை முறை.

** ** **

வைட்டமின் "ஏ" உடல் வளர்ச்சிக்கும், பற்கள் சரியாக முளைப்பதற்கும், சருமம், சளிச் சவ்வுகள் முதலியன ஆரோக்கியமாய் இருப்பதற்கும் இன்றியமையாதது. இது கண் பார்வைக்கும் இன்றியமையாதது. இந்தச் சக்தி போதுமான அளவு உணவில் சேராவிட்டால் மாலைக் கண் விழும். அதாவது சிறிது இருட்டினால் கண் தெரியாது. வளரும் குழந்தைகளுக்கு இந்த வைட்டமின் மிக இன்றியமையாதது. முக்கியமாய்ப் பள்ளிக்கூடம் செல்லும் வயதினர்களுக்கு மிகவும் அவசியம். இக்காலத்தில் சிறுகுழந்தைகள் கூடக் கண்களுக்குச் சரிவரப் பார்வை தெரியவில்லையென்று மூக்குக் கண்ணாடி அணிகின்றனர். கரும் பலகையில் உபாத்தியாயர் எழுதுவது என்ன என்பதைத் தூரத்திலிருக்கும் குழந்தைகள் அறிய மாட்டார்கள். அவர்களுக்கெல்லாம் கண் பார்வை சரிவர இல்லை என்று உடனே கண்ணாடியை அணியச் சிபார்சு செய்கின்றனர். இந்த 'ஏ' வைட்டமின் குறைவினால்தான் இந்தக் கோளாறு வருகிறது. இதற்காக அந்தச் சத்தை அடைய வழி தேடினால் நல்லது. கண்ணாடி அவசியமில்லை. படிக்கிற குழந்தைகளுக்கு வெண்ணெய் மிக அவசியம். அதில் வைட்டமின் 'ஏ' சத்து நிறைய இருக்கிறது. ரொட்டியுடன், இட்டிலியுடன், தோசையுடன் வெண்ணெயைச் சாப்பிடலாம். வைட்டமின் 'ஏ'க்கு இருட்டடிப்பு வைட்டமின் என்றும் சொல்வதுண்டு.

சிலருக்கு இருந்தாற் போலிருந்து கண் பார்வை ஒன்றுமே தெரியாது. முன் இருக்கும் பொருள்கள் தெரியாது. ஒரே வெளிச்சமாய் இருக்கிறது என்பார்கள். அதற்கு இந்த வைட்டமின் 'ஏ'யின் குறைவுதான் காரணம். இந்த வைட்டமின் வெண்ணெய்யில் பிரதானமாக இருந்தாலும் மஞ்சள் சிவப்பு வர்ணமுள்ள காய்கறிகளிலும் இருக்கிறது. மீன், முட்டை இவைகளிலும் இருக்கிறது. மீன் எண்ணெய்களிலும் இருக்கிறது. அதனால் அவைகளை வளரும் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு இந்த வைட்டமின் 'ஏ' சரிவரக் கிடைக்கவில்லையானால் உடல் சரியாக வளராது. எலும்பும் தோலுமாய் இருப்பார்கள். பல் சரிவர வளராது. சருமம் வறண்டு இருக்கும்.

● தமிழ் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் மகா பாரதக் கதைப் பிரசங்கம் நடப்பதும், மக்கள் இரவாகக் கூடி இருந்து அதைக் கேட்டு மகிழ்வதும் எத்தனையோ ஆண்டுகளாக நடந்து வரும் நிகழ்ச்சி. சினிமா, நாடகம் முதலியவைகள் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில்கூட மகா பாரதக் கதைப் பிரசங்கத்துக்கு மக்கள் ஆயிரக்கணக்காகச் சென்று மகிழ்கிறார்கள் என்பது ஆச்சரியமான



இந்த வைட்டமின் 'ஏ' சத்து வெண்ணெய் சாப்பிட்டே வரவேண்டு மென்பதில்லை. வெண்ணெய் சாப்பிடச் சக்தியுள்ளவர்கள் சாப்பிடலாம். மற்றவர்கள் பெற வெகு சுலபமான வழி இருக்கிறது. சாதாரண உணவில் தினசரி மூன்று அல்லது நான்கு அவுன்ஸ் கீரைகள் சாப்பிடுவதின் மூலமே நமக்கு வேண்டிய வைட்டமின் 'ஏ' யை அடைந்துவிடலாம். முளைக்கீரை, பசலைக் கீரை, கீரைத்தண்டு, கொத்தமல்லி இலை, முருங்கைக் கீரை, முட்டை கோஸ் முதலிய கீரைகளில் வைட்டமின் 'ஏ' நிறைய இருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றையும் தினசரி சேர்த்து வரலாம். மற்றும் மாம்பழம், பப்பாளிப்பழம், தக்காளி, ஆரஞ்சு இவைகளிலும் இந்தச் சத்து இருக்கிறது. ஆனால் ஆசனம் செய்பவர்கள் மாம்பழம், பப்பாளி எப்பொழுதாவது இரண்டு மூன்று தடவைகள் சாப்பிடலாம். அதிகம் சாப்பிட்டால் ஆசனம் செய்பவர்களுக்கு உஷ்ணமாகும். மற்றும், ஆரஞ்சு, தக்காளி எவ்வளவு வேண்டுமானாலும் சேர்க்கலாம். ஒன்றும் செய்யாது.

காரட் என்னும் மஞ்சள் முள்ளங்கியில் இந்த வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்து இருக்கிறது. வைட்டமின் 'ஏ' க்கு மற்றொரு பெயர் கரோடீன் என்றும் சொல்லுவது உண்டு. இந்தச் சத்து மிக அதிகமாக மஞ்சள் முள்ளங்கியில் இருப்பதால்தான் இந்தப் பெயர் வந்தது. தினசரி சிறிய காரட் ஒன்றைப் பச்சையாகச் சாப்பிட்டாலே நமக்கு வேண்டிய கரோடீன் - வைட்டமின் 'ஏ' சத்து கிடைத்துவிடும். குழந்தைகளுக்குப் பிஸ்கட், மற்ற தின்பண்டங்கள் கொடுப்பதற்குப் பதில் ஒரு துண்டு காரட் கொடுத்தால் அவர்களின் தேக வளர்ச்சிக்கும் பல் வளர்ச்சிக்கும் நல்லது. மாலை வேளை டிபனுக்கு காரட் ஒன்றைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது நல்லது. இந்தச் சத்து மீன்களில், அதுவும் முக்கியமாய் காட் எனும் மீனின் கல்லீரலில் நிறைய இருக்கிறது. அதன் ஈரலிலிருந்து காட்லிவர் ஆயில்—ஒன்று தயாரித்து மற்ற நாடுகளிலிருந்து இங்கு வந்து கொண்டிருந்தது. நமது நாட்டில் இந்த மீன் கிடையாது. குளிர்ப் பிரதேசக் கடல்களில்தான் கிடைக்கும். இரண்டாவது உலக யுத்தத்தின்போது இந்த மீன் எண்ணெய் வருவது தடைப் பட்டது. எனவே நமது நாட்டுக் கடல் மீன்களைப் பிடித்து, எந்த மீனில் கல்லீரலில் இந்த வைடமின் சத்து அதிகமாய் இருக்கிறதென்று கண்டு பிடித்தார்கள். 'ஷார்க்' என்ற சுறாமீனின் கல்லீரலிலும், 'ஸா' பிஷ் ரம்பம் போன்று மூக்கு நீளமாய் இருக்கும் மீனின் கல்லீரலிலும் இந்தச் சத்து அதிகம் இருக்கிறதென்று அறிந்து நமது இந்தியாவைச் சுற்றியுள்ள கடல்களில் இம்மீன்களை வேட்டையாடத் தலைப்பட்டனர். அராபியக் கடலிலும் இந்துமகா சமுத்திரத்திலும் இம்மீன்களில் பெரியவை நிறையக் கிடைக்கின்றன. திருவாங்கூர் கொச்சி இராஜ்யத்தில் இதற்காகப் பெரிய உற்பத்திச்சாலை ஏற்படுத்தி மீன் எண்ணெய்களைத் தயாரிக்கிறார்கள்.

இந்த மீன் எண்ணெய் ஒருவிதத்தில் குறையை நிவர்த்திக்காலும், இதையே வழக்கமாகவும் அளவுக்கு மீறியும் கொடுத்தால் வயிற்றில் புளிப்பு சம்பந்தமான நோய்கள் உண்டாகி விடுகின்றன. எனவே தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் நன்கு வளர வேண்டுமென்று மீன் எண்ணெயை அதிக அளவு நீண்ட நாள் கொடுப்பதற்குப் பதில் காய்கறி கீரை வகைகளை ஜீரணித்துக் கொள்ள முடியாத நிலைமையில் மட்டும் கொடுத்து, பின் சிறிது சக்தி வந்ததும் கீரைகளை மசித்தும், காரட் சமைத்தும் பச்சையாகவும் கொடுத்தும், வெண்ணெயைக் கொண்டும் சமாளிக்கலாம்.

நமது நாட்டில் கண்ணனைக் கொண்டாடாதவர்கள் கிடையாது. கிருஷ்ண ஜயந்தி அன்று எப்படியாவது தேடி வெண்ணெய் வைத்தே கிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடுகின்றனர். அன்று வீட்டில் குழந்தைகளுக் கெல்லாம் வெண்ணெய் கொடுக்கப்படும். அன்று குழந்தைகளுக்கு ஒரே குஷியாய் இருக்கும். வெண்ணெய் சாப்பிடலாம்; நாகப் பழம் சாப்பிடலாம். பட்சணங்கள் சாப்பிடலாம். கண்ணன் சிறு வயதில் எவ்வளவு வெண்ணெய் சாப்பிட்டிருப்பான்! எவ்



அடுத்த சைதாப்பேட்டை அனந்தபுரத்தில் ஜூலை 17உ முதல் 22உ வரை நடந்த திரௌபதி அம்மன் உற்சவத்தில் தெரிந்தது. ஸ்ரீ ம. பொ. அண்ணாமலை முதலியார் பாரதக் கதைப் பிரசங்கம் செய்தார். துரியோதனன் படுகளத்தின்போது சுமார் அறுபது அடி நீளம் துரியோதனனின் உருவத்தைச் செய்து பீமன் வேடம் தாங்கியவர் வீராவேசமாகக் கதையைச் சுற்றிக்கொண்டு துரியோதனன் தொடையில் கதையால் அடித்து அவன் உயிரைப் போக்கிய காட்சியைப் பார்க்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி விரும்பியதையும், ஸ்ரீ ம. பொ. அண்ணாமலை முதலியார் பாரதக் கதைப் பிரசங்கம் நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். இந்த நிகழ்ச்சியை முன் நின்று நடத்தியவர் கார்த்திகேயன் பஸ் அதிபர் ஸ்ரீ ஏ. எஸ். சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

பண்டித மணி

வழி வழி வந்த மாண்புடன் தமிழகத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் தன வணிகர் மரபில் உதித்தவர் திரு பண்டித மணி கதிரேசச் செட்டியார் அவர்கள்.

அவர் தமிழகத்தின் மூது பெரும் புலவர்; பன்னூல்களும் பயின்ற பாவலர்; ஆராய்ச்சித் திறன் மிக்க அறிஞர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்து அவர் செய்த தொண்டு தமிழாசிரியர்கள் குழுவுக்கே தனி மதிப்பைத் தரவல்லது. அவ்வறிஞர் பெருந்தகையின் வாழ்க்கை வரலாறு செந்தமிழ் நடையில் விரிவாகத் தரப்பட்டிருக்கிறது இந்நூலில்.

எழுதியவர்: பெருமழைப் புலவர், திரு பொ. வே. சோமசுந்தரனார்; பிரசுரம்: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140, பிராட்வே, சென்னை—1; விலை: ரூ. 1—0—0.

உதயம்

சேய் நாடாகிய இலங்கையிலிருந்து வெளியாகும் இம்மாதப் பத்திரிகை தமிழ் இலக்கிய வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தமிழ்ப் புத்தாண்டிலிருந்து வருகிறது. வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல். அளிக்கும் "இலக்கிய விருந்தி"ல் வள்ளல் பாரியைப் பற்றிய கட்டுரை சுவை மிகு தமிழில் தீட்டப்பட்டு இலக்கிய மணம் வீசுகிறது. சாஸ்திரப் பகுதியில் கானல் நீரைப் பற்றி ஒரு சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கிறார், அறிஞர் இ. அம்பிகை பாகன். தமிழ் அன்னைக்கு அழகுத் தமிழில் மூன்று கவிதைகள் மூலம் "அஞ்சலி" செய்திருக்கிறார், அன்பர் தில்லைச்சிவன்.

கௌரவ ஆசிரியர்: வை. அனவரத விநாயக மூர்த்தி; ஆசிரியர்: வரன்; காரியாலயம்: 34, மோஸ்குலேன், கொழும்பு-3; வருஷ சந்தா: ரூ. 5.

வளவு வெண்ணெய் திருடி, திருட்டுப் பட்டம் கட்டிக் கொண்டு இருப்பான்! கண்ணன் அழகை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கலாம் அல்லவா! வெண்ணெயாய்ச் சாப்பிட்டு உடல் அழகாய்க் கண்கள் குளிரக் காட்சி அளித்துக் கோபிகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டான் அல்லவா! வெண்ணெய் உடலுக்கு மட்டும் அழகு தருவதல்ல; மூளைக்கும் நல்ல தெளிவு, ஞாபகசக்தி அளிக்கக் கூடியது. நமது குழந்தைகளும் கண்ணனைப் போல ஆகவேண்டுமானால் வெண்ணெயை நிறையக் கொடுங்கள். அதைக் கொடுக்க முடியாதவர்கள் கீரை நிறைய ஊட்டுங்கள். மஞ்சள் முள்ளங்கி கொடுங்கள்.

நமக்குப் பால் கொடுக்கும் பசுவுக்கும் பச்சைப் புல் போட்டால் அது கொடுக்கும் பாலில் வைட்டமின் 'ஏ' சத்து நிறைய இருக்கும். பச்சைப் புல் சாப்பிடாத பசுவின் பாலில் 'ஏ' வைட்டமின் சத்து குறைவாய் இருக்கும். வெண்ணெயும் இம்மாதிரியே மாறுபடும். பச்சைப்புல் சாப்பிடும் பசுவின் பாலின் வெண்ணெயில் வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்திருக்கும். மற்றவைகளில் குறைந்திருக்கும். பச்சைப்புல் கிடைக்காதபோது அகத்திக் கீரையைப் பசுக்களுக்குப் போடுவது நல்லது.

நெய்யில் வைட்டமின் சத்து அவ்வளவாய் இருப்பதில்லை. வெண்ணெயைக் காய்ச்சும் போது இந்த வைட்டமின் 'ஏ' சத்து சுமார் பாதி அளவு குறைந்து விடுகிறது. எருமை நெய்யில் இந்தச் சத்து தங்குவதில்லை. பசு நெய்யில் காய்ச்சின பிறகும் இந்தச் சத்து இருக்கிறது. அதனால்தான் பசு நெய் நல்லது என்று சொல்வது. கீரை, காய்கறி முதலியன சமைப்பதிலும் இந்தச் சத்தைச் சிறிது இழந்து விடுகிறோம். பொதுவாக, சூட்டில் இதன் சத்து குறைகிறது. அதனால் பச்சையாகச் சாப்பிட முடிந்ததை அதாவது காரட், தக்காளிப் பழங்கள், கோஸ் பபான்றவைகளைப் பச்சையாகச் சிறிதளவு சாப்பிட வேண்டும். காய்கறி, கீரைகளை நறுக்குவதற்கு முன் கழுவிச் சிறு அனலில் பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும். வெந்த நீரைக் கொட்டக் கூடாது. கீரைக்கு நலம் விடாமலேயே வேக வைக்கலாம். இம்மாதிரி சில முக்கிய கவனிப்புகளுடன் காய்கறிகளைச் சமைப்பதில் நடந்து கொண்டால் நமக்கு வேண்டிய வைட்டமின் 'ஏ' சத்தை நிறையப் பெறலாம்.

சுத்தம் செய்யப்பட்ட மிருகக் கொழுப்புகளில் வனஸ்பதிகளிலெல்லாம் வைடமின் 'ஏ' சத்து கிடையாது. வனஸ்பதி உபயோகிப்போர்களுக்குக் கண் பார்வை கெடுவதின் காரணம் அதுதான். ஆனால் வைடமின் 'ஏ' சத்தை வனஸ்பதிகளுடன் கலந்தே விற்கவேண்டுமென்று சில மாதங்களுக்கு முன் சட்டம் வந்திருக்கிறது. அது எவ்வளவு தூரம் அமுலாகப் போகிறதோ! மேல்நாடுகளில் சுத்தம் செய்யப்பட்ட கொழுப்புகளில் வைட்டமின் 'ஏ' சத்து முன்பெல்லாம் இல்லாமல் தான் இருந்தது. ஆனால் அவர்கள் இப்பொழுது அவைகளில் வைட்டமின் 'ஏ' சத்தைச் சேர்த்து வெண்ணெயை விடச் சிறந்த பொருளாக மாற்றி விட்டார்கள்.

இந்த வைட்டமின் நமக்குத் தினசரி வேண்டியது 3000 அல்லது 4000 இன்டர் நேஷனல் யூனிட் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அதாவது சற்றேறக்குறைய ஒரு மில்லி கிராமில் மூன்றில் ஒரு பங்குதான். மிகமிகக் குறைந்த அளவுதான் நாம் சாப்பிடும் உணவிலுள்ள வைட்டமின் சத்துக்கள் உடலுக்குத் தினசரி வேண்டியது போக மீதியைக் கல்லீரல் சேகரித்து வைத்துக் கொள்ளுகிறது. கல்லீரல் நமது உடலின் சேமிப்பு அறை மாதிரி. நமது உடலில் இந்த வைட்டமின்கள் குறையும்போது எது குறைந்ததோ அதை உடனே கொடுத்து உதவி உடலுக்கு வேண்டிய அளவை நிரப்புகிறது. கல்லீரல் அவ்வளவு உபயோகமானது. அதனால்தான் இந்தக் கல்லீரல் மருந்துக்கு இவ்வளவு மகிமை ஏற்பட்டிருக்கிறது.

சிலர் கல்லீரல் சத்தில்லையென்றால் ஆட்டின் கல்லீரலைச் சாப்பிடுவர். மாட்டின் கல்லீரலிலிருந்து சத்து இருக்கப் பல டானிக்குகள் செய்கின்றனர். எனவே தனக்கு எது குறைந்தாலும் அதை மற்றப் பிராணிகளிடமிருந்து பெறுகின்றனர். இவைகளெல்லாம் சில வருடங்களாகத்தான் இருந்து வருகின்றன. ஐம்பது வருடங்களுக்கு முன்பு இம்மாதிரி வகைகளில் அதிகம் கவனம் செலுத்தப்படவில்லை. அதிலும் நமது நாட்டில் இவைகளைப் பற்றி அவ்வளவு தெரியாது. ஏதோ காய்கறி, கீரை, பழங்கள் இவைகளிலேயே வாழ்ந்து வந்தார்கள். அப்பொழுது இவ்வளவு நோய்களும் கிடையா. தற்காலத்தில் சத்துக்களை இழந்த உணவுகளை நாகரிகமென்று சாப்பிடுவதால் இம்மாதிரி கல்லீரல் நோய்களுக்கெல்லாம் இரையாக வேண்டியிருக்கிறது. (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.



இந்தியாவில் தயாரித்தது. L. 245-50 TM.

REGISTERED No. M. 4392

Registered as a news paper in Ceylon



கலிபோர்னியன் பாப்பி

பெர்ப்யூம்

இராஸ்மிக் கம். லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது. CPP. 5-50 TM